
# காவல் நீதிக்கான குரல்

# Voices for Custodial Justice




# உலகம் முழுவதும் என்.எஸ்.ஏ. (N.S.A.) கன்னம் வைப்பது எப்படி?

*உட்டா பகுதியில் 200 கோடி டாலர் செலவில் ஒரு கட்டிடத்தை என்.எஸ்.ஏ. கட்டிக்கொண்டிருக்கிறது. 10 லட்சம் டீ.வி.டீ.–க்களுக்கு சமமான டிஜிட்டல் தகவல்களை சேகரித்து பயன்படுத்தக்கூடிய திறனுள்ள அந்தக் கட்டிடம் பூமியில் உள்ள ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் குழந்தைக்குமானதாகும்.*

**– பிரபீர் புர்கயாஸ்தா, ரிஷப் பெய்லி**

அமெரிக்காவின் பாதுகாப்புத் துறைக்கு தகவல் தொழில்நுட்ப சேவைகளை வழங்கும் ஒப்பந்ததாரரான பூஸ் ஆலன் ஹாமில்டன் என்பவரின் முன்னாள் ஊழியர் எட்வர்டு ஸ்னோடென் (20), அமெரிக்கா கட்டியுள்ள மிகப் பெரும் அத்துமீறல் ராஜ்ஜியத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். தி கார்டியன், தி வாஷிங்டன் போஸ்ட் ஆகிய இரண்டு பத்திரிகைகளும் தங்களிடம் ஸ்னோடென் பகிர்ந்துகொண்ட அதிரடித் தகவல்களிலிருந்து ஒரு சிறு பகுதியைத்தான் வெளியிட்டுள்ளன. மேலும் பல தகவல்கள் வெளிவரும் என்று உறுதியளித்துள்ளன. இதுவரையில் பெரிய அளவிற்குத் தெரியாமல் இருந்த அமெரிக்காவின் உளவு அமைப்பாகிய தேசிய பாதுகாப்பு நிறுவனம் (என்.எஸ்.ஏ.) மனதில் மிரட்சியை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 2 பெட்டாபைட் (ஒரு பெட்டாபைட் என்பது 10 லட்சம் ஜிகாபைட்டுகளுக்கு சமம்) அளவிற்கு மின்னஞ்சல்களாக, மின் தகவல்களாக குரல் உரையாடல்களாக, காணொலிப் பதிவுகளாக இன்னும் பல விதங்களில் தகவல்களை சேகரிக்கிற மையமாக உருவெடுத்திருப்பது தெரிய வருகிறது.

அமெரிக்காவின் உட்டா மாநிலத்தில் 20 லட்சம் டாலர் மதிப்புள்ள ஒரு கட்டிடத்தை என்.எஸ்.ஏ. கட்டிக்கொண்டிருக்கிறது. அந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு தயாராகிறபோது, பூமியில் உள்ள ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் குழந்தைக்குமாக 10 லட்சம் டீ.வி.டீ–க்களுக்கு சமமான டிஜிட்டல் தகவல்களை சேகரிக்கவும் பயன்படுத்தவும் கூடிய வல்லமையைப் பெற்றிருக்கும்! ஒவ்வொரு டிஜிட்டல் பரிமாற்றமும், ஒவ்வொரு டிஜிட்டல் தகவலும் என்.எஸ்.ஏ. நிறுவனத்தின்



**THE NATIONAL SECURITY AGENCY** in Fort Meade, Maryland.

தகவல் களஞ்சியத்தில் ஒரு பகுதியாக இருக்கும். ஜார்ஜ்ஆர்வல் எழுதிய 'ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து நான்கு' என்ற கற்பனைக் கதைக்குள் – 1984 கொஞ்சம் தாமதமாக வந்திருக்கிறது என்றாலும் – வாருங்கள்!

இப்படி சேகரித்து வைக்கப்பட்டுள்ள ஏராளமானத் தகவல்களை பல்வேறு தகவல் கண்டுபிடிப்பு கருவிகள், திட்டங்கள் மூலமாக என்.எஸ்.ஏ. ஆராய்கிறது. இன்றைய தொழில்நுட்ப சொல்லகராதியில் இதற்கு 'பெருந்தகவல்' (Big Data) என்று பெயர்.

'வரம்பற்ற தகவல்' என்ற அத்தகைய ஒரு திட்டத்தைப் பற்றிய ஒரு செய்தியை தி கார்டியன் வெளியிட்டிருந்தது. 2013ம் ஆண்டின் மார்ச் மாதத்தில் மட்டுமே 9,700 கோடி உளவுத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன என்று அந்தச் செய்தி காட்டியது. ஸ்னோடென் அம்பலப்படுத்திய 'பிரிஸ்ம்' என்ற இன்னொரு திட்டம் பற்றிய செய்தி, உலகளாவிய தொலைத் தொடர்பு வலையமைப்புகளை மட்டுமல்லாமல், கூகுள், மைக்ரோசாஃப்ட், யாஹூ, ஆப்பிள், ஃபேஸ்புக் உள்ளிட்ட உலகின் மிகப்பெரிய 9 இணைய சேவை நிறுவனங்களின் தகவல் பதிவுகளையும் அமெரிக்காவால் பெற முடிந்தது என்பதைக் காட்டியது.

அதைத் தொடர்ந்து என்.எஸ்.ஏ. நிறுவனமும், அதே போன்ற பிரிட்டிஷ் அரசின் தகவல் தொடர்பு தலைமையகம் (ஜி.சி.எச்.க்யூ.) என்ற நிறுவனமும் இணைந்து, 2009ல் லண்டன் நகரில் நடைபெற்ற ஜி–20 உச்சி மாநாட்டை வேவு பார்த்தன என்ற செய்தியை தி கார்டியன் வெளியிட்டது. அந்த உளவு வேலைக்காக செயற்கைக் கோள் சமிக்கைகளை பதிவு செய்வது முதல் பிரதிநிதிகளுக்காக தனிப்பட்ட முறையில் வடிவமைக்கப்பட்ட இணையத் தொடர்பு மையங்கள் வரையில் பல்வேறு வழிமுறைகள் கையாளப்பட்டன. அந்த உளவு வேலைகள் ரஷ்யாவைக் குறிவைத்து மட்டுமல்லாமல் வட அட்லான்டிக் உடன்பாட்டு அமைப்பு (நேட்டோ) உறுப்பினரான துருக்கியும் கூட வேவு பார்க்கப்பட்டது. அந்த ஜி–20 உச்சி மாநாடு பெரும்பாலும் பொருளாதார விஷயங்கள் குறித்து விவாதிப்பதற்காக நடத்தப்பட்டது. பிரதிநிதிகளை இவ்வாறு வேவு பார்த்தது என்பது மற்ற நாடுகளின் நிலைபாடுகளை முன்கூட்டியே தெரிந்துகொண்டு அமெரிக்கப் பிரதிநிதிகளும் பிரிட்டிஷ் பிரதிநிதிகளும் பேரம் நடத்துவதற்கு வசதியாகத்தான். இந்தியாவின் பிரதமராக அந்த மாநாட்டில் மன்மோகன் சிங் கலந்துகொண்டார். வெளிநாட்டு உளவு கண்காணிப்பு சட்டத்தின் (எஃப்.ஐ.எஸ்.ஏ.) கீழ், ரகசிய நீதிமன்ற ஆணைகளின்படி, அமெரிக்காவின் அனைத்து தொலைத் தொடர்பு நிறுவனங்களும் தங்களின் கோடிக்கணக்கான வாடிக்கையாளர்களுடைய தகவல் பதிவுகள் அனைத்தையும் என்.எஸ்.ஏ. நிறுவனத்திடம் ஒப்படைத்து வந்துள்ளன. இது அமெரிக்காவில் ஒரு குறிப்பிடத்தக்க கவலையை ஏற்படுத்தியது. 'மெட்டா டேட்டா'எனப்படும் இந்த தகவல் பரிமாற்ற விவரங்கள் வெறும் தொலைபேசி பேச்சுகள் மட்டுமல்ல. மாறாக எங்கே இருந்து யார், எவருடன், எவ்வளவு நேரம் பேசினர் என்பன உள்ளிட்ட அனைத்துப் பதிவுகளும் அதிலே இருக்கும். இது தொலைபேசி உரையாடலை அப்படியே நிகழ்த்துவதைப் போன்றதுதான் என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். வெரிசான் நிறுவனம் தொடர்பாக பிறப்பிக்கப்பட்ட ஒரு எஃப்.ஐ.எஸ்.ஏ. ஆணை (தி கார்டியன் வெளியிட்ட செய்தி), இத்தகைய ஆணைகள் எந்த அளவிற்கு ஒட்டுமொத்தத் தன்மையுடன் இருக்கின்றன என்பதைக் காட்டுகிறது. "உங்கள் வாடிக்கையாளர்களின் அனைத்துப் பதிவுகளையும் தாக்கல் செய்க," என்று அந்த ஆணை கூறுகிறது.

அமெரிக்காவில் ஏற்பட்ட கொந்தளிப்பு என்பது, அந்நாட்டின் குடிமக்களே என்.எஸ்.ஏ. நிறுவனத்தால் வேவு பார்க்கப்பட்டார்கள் என்பதால் எழுந்ததாகும். உலகத்தின் மற்ற அனைத்துப் பகுதிகளிலும் அமெரிக்க அரசு இவ்வாறு அனைத்துத் தகவல்களையும் கன்னம் வைத்து களவாடியிருக்கிறது என்பது விவாதத்திற்கு உட்படுத்தப்படவில்லை. அமெரிக்கக் குடிமக்கள் அல்லாத உலகின் 95 சதவீத மக்களாகிய நாம் கவலையோடு பார்க்க வேண்டிய விஷயம் இது.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு அமெரிக்காவும் அதன் ஆங்கிலோ சாக்ஸன் கூட்டாளிகளான பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளும் உலகளாவிய தொலைத் தொடர்பு இணைப்புகளை வேவுபார்ப்பதற்காக 'எச்சலான்' என்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்திக் கொண்டன. எச்சலான் குறித்து விசாரணை மேற்கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் (இ.யு.), 2001ல் தனது அறிக்கையை வெளியிட்டது. எச்சலான் அமைப்பு முக்கியமான வர்த்தக தகவல்களை, ஐரோப்பிய போட்டி நிறுவனங்களுக்கு எதிராக, அமெரிக்க, பிரிட்டன் நிறுவனங்களுக்கு உதவும் நோக்கத்துடன் கடத்தி வந்தது என்பது அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. 1952ல் என்.எஸ்.ஏ. ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து எச்சலான் அமைப்பிற்கு ஒரு புதிய ஊக்கம் கிடைத்தது. அமெரிக்காவின் மத்திய உளவு அமைப்பாகிய சிஐஏ நிறுவனத்திலிருந்து ஓய்வு பெறுகிற உளவாளிகள், நிறுவனத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்பாகவே, தங்களுடைய நினைவுகளை எழுதத் தொடங்குகிறார்கள் என்றாலும் கூட, இன்றுவரையில் என்.எஸ்.ஏ. நிறுவனம் தன்னை வெளிச்சத்திற்குக் கொண்டு வராமல் கவனமாக இருந்து வந்துள்ளது. என்.எஸ்.ஏ. செயல்பாடுகள் குறித்து ஏற்கெனவே மக்கள் கவனத்திற்குக் கொண்டு வந்த தாமஸ் டிரேக், வில்லியம் பின்னே, ஜே. கிர்க் வைபீ ஆகியோர்

அமெரிக்க குடிமக்கள், அமெரிக்கர் அல்லாதவர்கள் பற்றிய விவரங்களை என்.எஸ்.ஏ. சேகரித்து வருகிறது என்று பல ஆண்டுகளாகவே சொல்லி வந்திருக்கிறார்கள். ஆயினும், ஸ்னோடென் வெளியிட்ட விவரங்களும் ஆவணங்களும்தான் இறுதியாக உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளன.

**வேவு வேலையின் தன்மை:**

முன்பு எச்சலான் அமைப்பு என்ன செய்துகொண்டிருந்ததோ அதை இப்போது என்.எஸ்.ஏ. மிக விரிவான முறையில் செய்துகொண்டிருக்கிறது. தொலைபேசி உரையாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்படுகின்றன, செயற்கைக் கோள் வழி தகவல் தொடர்புகள் கண்காணிக்கப்படுகின்றன என்பது மட்டுமே பிரச்சனை அல்ல. தி கார்டியன் வெளியிட்டுள்ள ஸ்னோடென்னின் 5 நழுவுப்படக் காட்சிகளில் (ஸ்லைடு) இரண்டு படங்கள் இந்த வேவு வேலையின் தன்மையைக் காட்டுகின்றன. முதல் படக் காட்சி உலகளாவிய ஃபைபர் கண்ணாடியிழை, வலையமைப்பு, தொடர்பானதாகும். இந்த வலையமைப்பின் மிகப்பெரிய மையமாக இருப்பது அமெரிக்காதான் என்பதால் உலகளாவிய தகவல் தொடர்புகள் பெரும்பகுதி அமெரிக்கா வழியாகத்தான் செல்கின்றன. அந்தத் தகவல்களை பதிவு செய்வது மிகவும் எளிது. ஏனென்றால், அமெரிக்காவின் அனைத்து தொலைத் தொடர்பு நிறுவனங்களும் தங்களது வலையமைப்புகளுக்கான நேரடித் தொடர்பை அமெரிக்க அரசுக்கு கொடுத்துள்ளன.


உதாரணமாக, 'ஏடி அண்ட் டி' என்ற நிறுவனம் சான்ஃரான்சிஸ்கோ நகரில் உள்ள ஃபால்சம் தெரு அலுவலகத்தில், 'ஸ்பிளிட்டர்' என்ற கருவிகளை பொருத்துவதற்கு என்.எஸ்.ஏ. நிறுவனத்திற்கு அனுமதியளித்துள்ளது. ஏடி அண்ட் டி நிறுவனத்தின் தகவல் பறிமாற்ற கணினிகளுக்கு அதன் உலகளாவிய தொடர்புகளிலிருந்து வரக்கூடிய தகவல்களை நகல் எடுப்பதற்கும், ஒரு தொடர்பில் இருந்து வருவதை என்.எஸ்.ஏ. கருவி அமைக்கப்பட்டுள்ள அறைக்கு மாற்றுவதற்கும் உதவுகிற கருவி அது. அந்த தகவல்கள் பிறகு இருப்பில் வைப்பதற்காகவும் சோதனை ஆய்வு செய்யப்படுவதற்காகவும் என்.எஸ்.ஏ. சர்வர்களுக்கு அனுப்பப்படுகின்றன. எலக்ட்ரானிக் ஃபிரன்டீர் ஃபவுண்டேசன் (இ.எஃப்.எஃப்) என்ற நிறுவனம், இந்தத் திட்டம் சட்டப்படி சரியானதுதானா என்று கேள்வி எழுப்பியுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக இதை எதிர்த்து வழக்காடிக்கொண்டிருக்கிறது. இன்னும், எவ்வித பலனும் கிடைக்கவில்லை. அந்த நிறுவனம் தாக்கல் செய்துள்ள ஒரு வாக்குமூல அறிக்கையில் ஏடி அண்ட் டி நிறுவனத்தின் முன்னாள் தொழில்நுட்ப வல்லுநர் மார்க் கிளெய்யன், இப்படிப்பட்ட ஸ்பிளிட்டர் கருவிகள் ஏடி அண்ட்டி நிறுவனத்தின் மற்ற அலுவலகங்களிலும் நிறுவப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார்.

வேறொரு வழியிலும் உலகளாவிய ஃபைபர் கண்ணாடியிழை வலையமைப்பு பதிவு செய்யப்படுவதை ஸ்னோடென் நழுவுப்படங்கள் காட்டுகின்றன. உலக கடல் வழிகளில் பயன்படுத்தப்படும் இணையத்தின் முக்கிய தடங்களையும் அமெரிக்கா பதிவு செய்து வருகிறது என்பதை ஸ்னோடென்னின் ஒரு நழுவுப்படம் காட்டுகிறது. தென்னமெரிக்க கடலோரப் பகுதி, ஆப்பிரிக்காவின் வடக்குக் கடலோரப் பகுதி இந்தியப் பெருங்கடலின் கடலோரப் பகுதி ஆகிய மூன்று தடங்களில் இவ்வாறு இணையத் தொடர்புகள் பதிவு செய்யப்படுகின்றன.

என்.எஸ்.ஏ. கடைசியாகப் பயன்படுத்துகிற, மிக அதிகமாகப் பேசப்பட்டிருக்கிற வேவு முறை என்பது உலக இண்டர்நெட் நிறுவனங்களின் சர்வர்களை கண்காணிப்பதாகும். ஸ்னோடென் நழுவுப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிலிக்கான் பள்ளத்தாக்கின் மாபெரும் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் அனைத்தும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான குரலில் தங்களுடைய சர்வர்களுடன் என்.எஸ்.ஏ. நிறுவனத்திற்கு நேரடித் தொடர்பு வசதியை தாங்கள் வழங்கவில்லை என்று கூறுகின்றன. அதே நேரத்தில், அமெரிக்க சட்டங்களுக்கு கட்டுப்பட்டு என்.எஸ்.ஏ. கேட்கக்கூடிய எந்த ஒரு தகவலையும் கொடுக்க வேண்டிய நிலைமையில் தாங்கள் இருப்பதாகவும் ஒப்புக்கொண்டுள்ளன.

என்.எஸ்.ஏ. நிறுவனத்தின் வேண்டுகோள்கள், அது விரும்புகிற தகவல் வடிவங்கள் போன்றவற்றிக்கு உடன்பட்டு, தானாகவே தகவல்கள் என்.எஸ்.ஏ. நிறுவனத்திற்கு போய்ச் சேரும் வகையில் ஒரு ஏற்பாட்டை இந்த நிறுவனங்கள் செய்துள்ளன என்பது தெளிவாகிறது. தொலைத் தொடர்பு இணைப்புகள் தங்களுடைய சர்வர்களுக்கு வந்து சேர்வதற்கு முன்பாகவே அவற்றை பதிவு செய்துகொள்வதற்கு இந்த நிறுவனங்கள் அநேகமாக அனுமதித்துக்கொண்டிருக்கக் கூடும். ஃபால்சம் தெரு அலுவலக விவகாரத்தில் ஏடி அண்ட் டி நிறுவனம் செய்ததைப் போன்றதுதான் இது.

அமெரிக்க அரசிடமிருந்து வரக்கூடிய ஒரே ஒரு வேண்டுகோள் கூட பல லட்சம் ஆவணங்களைப் பெறுவதாக இருக்கக் கூடும் என்பதை ஏற்கெனவே கவனித்தோம். வெரிசான் நிறுவனம் தொடர்பாக எப்.ஐ.எஸ்.ஏ. பிறப்பித்த ஆணை இதற்கு ஒரு உதாரணம். உள்நாட்டு வாடிக்கையாளர்களைப் பொறுத்தவரையில் – அமெரிக்க சட்டத்தின் கீழ் பலவீனமானதுதான் என்ற போதிலும் கூட – ஓரளவுக்கு பாதுகாப்பு இருக்கிறது. ஆனால், உலகின் மற்றப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு




**ப்ரிஸ்ம் திட்டம்:** எப்படிப்பட்ட தகவலையும் பெறுவதற்கு இது வழிவகுக்கிறது. ஊடகங்களின் மூலம் எட்வர்டு ஸ்னோடென் வெளிப்படுத்திய விவரங்களில் இது ஒரு பகுதி.

அத்தகைய பாதுகாப்பு எதுவும் இல்லை. ஆகவே, அமெரிக்க உளவு நிறுவனங்களின் சட்டப்பூர்வ வேண்டுகோளின்படிதான் தாங்கள் செயல்படுவதாக இண்டர்நெட் நிறுவனங்கள் கூறுவது, உலகின் மற்றப் பகுதிகளுக்கு பாதுகாப்பற்ற சூழலை ஏற்படுத்துவதாகவே இருக்கிறது.

நான்காவது சட்டத்திருத்தத்தின் மூலம் அமெரிக்கக் குடிமக்களுக்கு அந்நாட்டுச் சட்டங்கள் பாதுகாப்பு அளிக்கின்றன. சட்டவிரோத சோதனைகள், கைப்பற்றல் நடவடிக்கைகளுக்கு அந்த சட்டத்திருத்தம் தடைவிதிக்கிறது. குடிமக்களின் விவரங்களைப் பெறுவதற்கு அமெரிக்க உளவு நிறுவனங்கள் வேறு சட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்கின்றன. அத்தகைய இரண்டு சட்ட ஏற்பாடுகள்தான் தேசிய பாதுகாப்பு கடிதங்கள் (என்.எஸ்.எல்.) மற்றும் எஃப்.ஐ.எஸ்.ஏ. ஆணைகள் ஆகியவையாகும். (சோதனை ஆணை, பிடியாணை போன்ற) இதர சட்ட ஏற்பாடுகளோடு ஒப்பிடுகையில் கூடுதல் ரகசியத் தன்மையும், ஆதாரம் இல்லாமலே நடவடிக்கை எடுக்கும் தன்மையும் உள்ளவையாக இந்த இரண்டு ஏற்பாடுகளும் உள்ளன. என்.எஸ்.எல். சட்டம் 1978ம் ஆண்டிலிருந்தே இருந்து வருகிறது என்றபோதிலும் அதன் மிகக்குறைந்த வரம்புகள் காரணமாக மிக அரிதாகவே, அதுவும் ஓரளவுக்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. 9/11க்கு பிறகு இது மிகப்பெரிய அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டது. அதற்காக 2001ம் ஆண்டில் தேசபக்தி சட்டம் என்ற கொடூரமான சட்டமும், 2008ம் ஆண்டில் எப்.ஐ.எஸ்.ஏ. சட்டத் திருத்தமும் கொண்டுவரப்பட்டன.

என்.எஸ்.எல். சட்டத்தைப் பயன்படுத்த நீதித்துறை கண்காணிப்பு எதுவும் தேவையில்லை. எஃப்.பி.ஐ., உள்நாட்டு பாதுகாப்பு நிறுவனம், சிஐஏ, என்.எஸ்.ஏ போன்ற எந்த ஒரு அமெரிக்க உளவு நிறுவனமும் அதனை நேரடியாகப் பயன்படுத்த முடியும். குறிப்பிட்ட அதிகார நிலையில் உள்ள ஒரு அதிகாரி ஆணைப் பிறப்பிக்க வேண்டும், அவ்வளவுதான். அப்படிப்பட்ட கடிதம் தொடர்பான அனைத்துத் தகவல்களும் ஒரு வாய்ப்பூட்டு ஆணைக்கு உட்படுத்தப்படுகின்றன. அந்தக் கடிதம் கிடைக்கப் பெற்ற ஒரு அமைப்போ அல்லது தனி மனிதரோ அப்படியொரு ஆணை தனக்கு வந்ததாக யாருக்கும் தெரிவிக்க முடியாது; அந்த ஆணையின் உள்ளடக்கம் என்ன என்பதையும் வெளிப்படுத்த முடியாது.

அரசு ஆணைப்படி கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அனைத்து ஆணைகளையும் நடவடிக்கைகளையும் மேற்பார்வையிடுவதற்காக எஃப்.எஸ்.ஏ. நீதிமன்றம் என்ற அமைப்பு உள்ளது. ஆனால், அந்த நீதிமன்றம், தனக்கு வருகிற சோதனை நடவடிக்கை வேண்டுகோள்கள் அனைத்துக்கும் ஒப்புதல் அளிக்கிற வேலையைத்தான் செய்கிறது. 1980ம் ஆண்டிலிருந்து தனக்கு வந்த இப்படிப்பட்ட 33,900 கண்காணிப்பு வேண்டுகோள்களில் வெறும் 11 வேண்டுகோள்களை மட்டுமே எஃப்.ஐ.எஸ்.ஏ. தள்ளுபடி செய்துள்ளது. எஃப்.ஐ.எஸ்.ஏ. நீதிமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளும் ரகசியமாக வைக்கப்படுகின்றன. பொது மக்கள் கவனத்திற்கு வந்துள்ள ஒரே ஒரு நடவடிக்கை வெரிசான் தொலைபேசிப் பேச்சுகள் ஒட்டுக்கேட்பு தொடர்பாக ஸ்னோடென் வெளியிட்டுள்ள ஆவணம் மட்டுமே.

வியட்நாம் யுத்தத்தை விமர்சித்தவர்களையும், குடிமைச் சமூக சுதந்திர இயக்கங்களையும் குறிவைத்து அமெரிக்க அரசு தனது கண்காணிப்பு அதிகாரங்களை விரிவான முறையில் தவறாகப் பயன்படுத்தியது. அதைத் தொடர்ந்து 1970ல் எஃப்.ஐ.எஸ்.ஏ. சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த சட்டத்தின் பிரதான நோக்கம், இப்படிப்பட்ட தவறான நடவடிக்கைகளிலிருந்து அமெரிக்க மக்களைப் பாதுகாப்பதுதான். 9/11க்குப் பிறகு குறைந்தபட்ச கட்டுப்பாடுகள், நிதானமான அணுகுமுறைகள் போன்றவற்றிற்கு அந்த சட்டத்தில் இருந்த சில பாதுகாப்பான அம்சங்கள் பெருமளவுக்கு பல வீனப்படுத்தப்பட்டு எஃப்.ஐ.எஸ்.ஏ. சட்டத்தில் பல்வேறு திருத்தங்கள் சேர்க்கப்பட்டன.

எஃப்.எஸ்.ஏ. சட்டத்தின் கீழ் எந்த ஆவணங்களையும் கைப்பற்றுவதற்கும், சோதனை செய்வதற்கும் பொதுவான அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி அலுவல் ஆவணங்களை சோதனை செய்யும் அதிகாரமும் தரப்பட்டுள்ளது. இதனால், எந்த ஒரு தகவல் தொடர்பு ஏற்பாட்டையும் கட்டாயப்படுத்தி பெறுவதற்கான அதிகாரம் உளவு அமைப்புகளுக்குக் கிடைக்கிறது. அமெரிக்காவுக்கு

வெளியே உள்ளவர்கள் என்று கருதப்படுபவர்கள் தொடர்பான, இருப்பில் உள்ள ஆவணங்கள் அனைத்தையும் உளவு நிறுவனங்களால் பெறமுடியும். மிகக் குறைவான ஆதாரங்களுடன் சோதனைகளை நடத்துவதற்கு இந்தச் சட்டம் அதிகாரம் அளிக்கிறது. இவ்வாறு குறைந்தபட்ச ஆதாரங்கள் போதும் என்பது, சோதனையிடப்படும் நபர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகத்தான். ஆனால், இந்தக் குறைந்தபட்ச ஏற்பாடுகள் அமெரிக்கக் குடிமக்களுக்கு மட்டுமே பொருந்தும். உலகத்தின் மற்ற பகுதிகளுக்கு அமெரிக்காவின் இந்தச் சட்டத்தின் கீழ் எவ்வித பாதுகாப்பும் கிடையாது.

என்.எஸ்.ஏ. நடத்திய வேவு வேலைகளுக்கு பொதுமக்களிடையே எதிர்ப்பு கிளம்பியதைத் தொடர்ந்து, அமெரிக்க அதிபரும் இதர அதிகாரிகளும் சில வெளிப்படையான அறிவிப்புகளை வெளியிட்டனர். என்.எஸ்.ஏ. நிறுவனம் வெளிநாட்டவர்கள் சம்பந்தமான ஆவணங்களை மட்டும்தான் படித்துப்பார்க்கிறதேயன்றி அமெரிக்க குடிமக்களின் ஆவணங்களைப் படிக்கவில்லை என்றும், ஆகவே, அமெரிக்க சட்டங்கள் மீறப்படவில்லை என்றும் அதிபர் பாரக் ஒபாமா கூறியிருக்கிறார். என்.எஸ்.ஏ. நடவடிக்கைகள் குறித்த ஒரு விசாரணையை அமெரிக்க நாடாளுமன்றம் தொடங்கியுள்ளது. ஆனால், "வெளிப்படுத்தப்பட்ட என்.எஸ்.ஏ. திட்டங்கள் அமெரிக்கர்களை எப்படி பாதுகாக்கின்றன, அவ்வாறு வெளிப்படுத்துவது ஏன் நமது எதிரிகளுக்கு சாதகமாகிவிடும்," என்று அந்த விசாரணைக்கு தலைப்பிடப்பட்டிருப்பதே, அந்த விசாரணையின் முடிவு எப்படி இருக்கும் என்பதை உணர்த்துகிறது.

**வேவு பார்க்கப்படும் இந்தியா:**

அமெரிக்காவின் பிரதானமான உளவு வேலைகளுக்கு உட்படுத்தப்படும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. தி கார்டியன் ஏடு வெளியிட்டுள்ள 'ஹீட்' என்ற வரைபடத்தின்படி அமெரிக்காவால் வேவு பார்க்கப்படும் நாடுகளில் இந்தியா 5வது இடத்தில் இருக்கிறது. சீனாவையும் ரஷ்யாவையும் விட அதிகமாக 63 லட்சம் தகவல்களை அமெரிக்கா திரட்டியுள்ளது. கூகள் நிறுவனத்திற்கு மட்டுமல்லாமல் யாஹூ, மைக்ரோசாஃப்ட் (ஹாட்மெயில்) ஆகிய நிறுவனங்களுக்கும் இந்தியாவில் நிறைய வாடிக்கையாளர்கள் உள்ளனர். இந்திய அரசு அமைப்புகளும் அதிகாரிகளும் கூட தங்களது தகவல் தொடர்புகளுக்கு இந்த வலையமைப்புகளைப் பயன்படுத்திக் கொள்கிறது. 2013 பிப்ரவரியில், ஹைதராபாத் குண்டு வெடிப்புக்குப் பிறகு, இந்தியாவின் தேசிய உளவு நிறுவனம் (என்.ஐ.ஏ.) நிறுவனம் தகவல் தெரிவிப்பவர்களுக்கு ரூ.10 லட்சம் பரிசு வழங்கப்படும் என்று அறிவித்தது. அதற்காக தரப்பட்ட மின்னஞ்சல் முகவரி ஒரு ஜிமெயில் முகவரியாகும். ஜிமெயில் தொடர்புகள் அனைத்தையும் அமெரிக்க உளவு நிறுவனங்களால் கண்காணிக்க முடியும் என்பதை என்.ஐ.ஏ. அறிந்திருக்கவில்லை அல்லது அமெரிக்காவிடமிருந்து மறைப்பதற்கு எதுவும் இல்லை என்று என்.ஐ.ஏ. நினைத்துக்கொண்டிருக்கிறது. பிரதமர் அலுவலகமும், தலைமை வழக்குரைஞர் அலுவலகமும் கூட இப்படிப்பட்ட வலைத்தள அஞ்சல் சேவைகளைப் பயன்படுத்துகின்றன என்று ப்ளூம்பெர்க் பிசினெஸ்வீக் என்ற இணைய ஏடு தெரிவித்துள்ளது. அதேபோல், வேறுபல அமைச்சகங்களும், இந்திய விமானப் படையும் கூட இந்த வளைத்தளங்களைப் பயன்படுத்துகின்றன. ப்ளூம்பெர்க் 2011 அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுபோல், இது ஒரு நாசகரமான விளைவையே ஏற்படுத்தும். அதைத் தான் 'வரம்பற்ற தகவல் விவரங்கள்' உறுதிப்படுத்துகின்றன.

ஆதார் எண் எனப்படும் தனி அடையாள எண் (UID) வழங்குவது தொடர்பாகவும் இதேபோன்ற அறியாமை அல்லது அக்கறையின்மைதான் வெளிப்படுகிறது. ஆதார் அடையாள அட்டை தயாரித்து வழங்குவதற்கான பணிகள் மூன்று அமெரிக்க நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அமெரிக்க அரசு கேட்டுக்கொள்ளுமானால் இந்த விவரங்கள் அனைத்தையும் ஒப்படைப்பதற்கு இந்த நிறுவனங்கள் கடமைப்பட்டுள்ளன என்பதை பொருட்படுத்தாமலே இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது ("திரு. நீல்கனிக்கு சில கேள்விகள்" எஸ்.ஜி. வோம்பத்கேரே, தி ஹிண்டு 2013, பிப்ரவரி 6).

கவலை தரும் மற்றொரு பிரச்சனை, அரசாங்க வலைத்தளங்கள், வலைத் தொடர்புகள், கணினிகள் தொடர்பான தகவல்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதாகும். இந்தியாவின் இணைய பாதுகாப்பு உள்கட்டமைப்புகளை 1000 பேருக்கும் குறைவானவர்களே மேற்பார்வை செய்கிறார்கள். தனியார் துறையுடன் கூட்டு என்ற பெயரில் அமெரிக்க நிறுவனங்களை இந்திய அரசு மேலும் மேலும் சார்ந்து வருகிறது. சென்ற ஆண்டு அமைக்கப்பட்ட இணைய பாதுகாப்புக்கான கூட்டு நடவடிக்கைக் குழு இதனைக் காட்டுகிறது.

இந்திய தொழில் வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்பு (ஃபிக்கி), தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்கள் சங்கம் (நாஸ்காம்) ஆகிய இரண்டு அமைப்புகளும் இந்திய அரசின் இணையப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் கூட்டாளிகளாக உள்ளன. அந்த அமைப்புகளில் ஏடி அண்ட் டி, மைக்ரோசாஃப்ட், கூகுள், ஃபேஸ்புக், யாஹூ ஆகிய நிறுவனங்கள் முக்கிய உறுப்பினர்களாக உள்ளன. இந்த அமெரிக்க நிறுவனங்கள்

அனைத்தும் அமெரிக்காவின் உளவுத்துறை அமைப்புகளோடு இணைந்து செயல்படுகின்றன என்பது இப்போது தெரிய வருகிறது. 2012ம் ஆண்டில் துபாய் நகரில் நடந்த உலக தொலைத் தொடர்பு மாநாட்டில் இந்தியாவின் தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் பிரதிநிதிகளாக இதே அமெரிக்க நிறுவனங்கள் கலந்துகொண்டன. அமெரிக்க நிறுவனங்களோடு அமெரிக்க அரசு ஏன் கூட்டுச் சேருகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது; ஆனால், அந்த நிறுவனங்களோடு இந்திய அரசு ஏன் கூட்டுச் சேர வேண்டும்?

ஐரோப்பிய யூனியன் அமைப்பின் நீதித்துறை ஆணையர் விவியன் ரெடிங், அமெரிக்க தலைமை வழக்குரைஞருக்கு கடிதம் அனுப்பி 'ப்ரிஸம்' திட்டம் குறித்த விவரங்களை தெரிவிக்குமாறு கேட்டுள்ளார். இந்தியாவின் தகவல் விவரங்கள் வேவு பார்க்கப்படுவது ''ஏற்புடையதல்ல'' என்று இந்தியா கூறியுள்ளது. அமெரிக்காவையும் தவிர உலகின் அனைத்து நாடுகளும் அமெரிக்காவின் மோப்ப வேலைகளால் பாதிக்கப்பட்டுள்ளன என்றால், தங்களது இணையத் தொடர்புகளும் தகவல்களும் இப்படி ஒட்டுமொத்தமாகக் களவாடப்படுவதை தடுக்கக்கூடிய ஒரு புதிய உலகளாவிய அமைப்பை ஏற்படுத்த முன்வந்தாக வேண்டும்.

## இணையம் எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறது?

இணையம் என்ற அடிப்படைக் கட்டமைப்பு, அது எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறது என்பது குறித்தே ஒரு மறு ஆய்வு தேவைப்படுகிறது. இன்று, உரிமையளிக்கப்பட்டப் பெயர்கள் மற்றும் எண்களுக்கான இணைய கழகம் (ஐ.சி.ஏ.என்.என்.) என்ற அமைப்பு அமெரிக்க அரசின் வர்த்தகத் துறை வழங்கும் உரிமத்தின்கீழ் செயல்படுகிறது. இணையத்தை நிர்வகிப்பதற்கு ஒரு பன்முக ஐ.நா. அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று வேறு சில நாடுகளோடு சேர்ந்து இந்தியாவும் முன்பு கோரிக்கை விடுத்தது. இப்படிப்பட்ட முயற்சிகளை அமெரிக்க அரசு அடியோடு எதிர்த்து வந்துள்ளது.

சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட சில அம்சங்களை பன்னாட்டு தொலைத்தொடர்பு சங்கத்தின் (ஐடியு) கீழ் கொண்டு வருவதற்கு சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த ஆண்டு, துபாய் நகரில் நடந்த பன்னாட்டு தகவல் தொடர்பு மாநாட்டில் (டபிள்யூ.சி.ஐ.டி. – 2012) இத்தகைய சில கோரிக்கைகளை பன்னாட்டு தொலைத்தொடர்பு சங்கம் முன்வைத்தது. அதன் விளைவு என்னவென்றால் பன்னாட்டு தொலைத்தொடர்பு சங்கத்தின் மீதும், அதன் தலைமை இயக்குநர் மீதும் சரமாரியாக அவதூறுகள் பொழியப்பட்டன.

இணையச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்காக சீனா, ஈரான், சவுதி அரேபியா போன்ற சர்வாதிகார அரசுகள் தீட்டியுள்ள சூழ்ச்சி இது என்று குடிமைச் சமூக அமைப்புகளிடம் சொல்லப்பட்டது. ஏடி அண்ட் டி, வெரிசான், மைக்ரோசாஃப்ட், கூகுள், ஃபேஸ்புக் ஆகிய முன்னணி அமெரிக்க நிறுவனங்களால் இதற்கென ஒரு பிரச்சாரக் குழுவே ஏற்படுத்தப்பட்டது. அந்தக் குழு ஐடியு சங்கத்திற்கு எதிரான உலகம் தழுவிய பிரச்சாரத்தை மேற்கொண்டது. சவுதி அரேபியாவும் ரஷ்யாவும் கொண்டுவந்த சில முன்வைப்புகள் இணையச் சுதந்திரத்தை பாதிக்கக்கூடும் என்பதால், பின்னர் விலக்கிக்கொள்ளப்பட்டன. ஆனாலும், அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் டபிள்யூ.சி.ஐ.டி. – 2012 மாநாட்டிலிருந்து வெளிநடப்புச் செய்தன. அதன்மூலம், ஒரு பொதுக் கருத்து உருவாவதைத் தடுத்தன. டபிள்யூ.சி.ஐ.டி. முன்னுள்ள பிரச்சனை இணையச் சுதந்திரத்தை ஏதோ ஒரு சர்வாதிகார நாடு அழிக்கிறது என்பதல்ல, மாறாக உலகளாவிய இணையக் கட்டமைப்புகளில் கன்னம் வைத்துக் களவாடுவதற்கு அமெரிக்க உளவு நிறுவனங்களுக்கு ''உரிமை'' தரப்பட்டிருப்பதுதான் தற்போதுள்ள பிரச்சனை.

இணையம் என்பது உலகளாவிய தகவல் தொடர்புகளின் முதுகெலும்பாக மட்டும் செயல்படவில்லை, உலக அறிவின் களஞ்சியமாகவும் திகழ்கிறது. நமது நாளைய வாழ்வுக்கு இது ஆதாரமாகியுள்ளது. இணையத் தொழில்நுட்பத்தின் மூலம் கிடைக்கக் கூடிய உண்மையான ஆற்றல்களைப் பெற நாம் விரும்புகிறோம் என்றால் நாம் இப்போதே தலையிட்டாக வேண்டும்.

ஒரு புதிய உலகத்தை உருவாக்கக்கூடிய இணையத்திற்காக உலகம் முழுவதும் உள்ள மக்கள் போராடியாக வேண்டும். ஆர்வெல் சித்தரித்தது போல நம்மையெல்லாம் கண்காணிக்கிற ஒரு பெரிய அண்ணனின் (அல்லது அண்ணன்களின்) உலகமாக அது இருத்தலாகாது. மாறாக இணையத்தின் விடுதலை இலக்கை நிறை செய்கிற உலகமாக – நமது கணினித் திரைகளுக்கு உலக அறிவையெல்லாம் கொண்டு வருகிற உலகமாக அது இருக்க வேண்டும். நம் முன்னாள் இருக்கிற சவால் இதுதான்.

*கட்டுரையாளர்களில் ஒருவரான ப்ரபீர் புர்கயாஸ்தா இணையம் மற்றும் சுதந்திர மென்பொருள் விவகாரங்களில் ஈடுபடும் 'பொது மக்களின் அறிவு' என்ற அமைப்பின் தலைவரும், இந்திய சுதந்திர மென்பொருள் இயக்கத்தின் துணைத் தலைவரும் ஆவார். ரிஷப் பெய்லி ஒரு வழக்கறிஞர், 'பொது மக்களின் அறிவு' அமைப்பில் செயல்பட்டு வருகிறார்.*

**ஆதாரம்: ஃபிரண்ட் லைன். ஜூலை 12, 2013**

**2013 (2) CWC 262**

## சென்னை உயர்நீதிமன்றம்

## நீதிபதிகள் எலிப் தர்மா ராவ் மற்றும் என். கிருபாகரன்

W.A. No.2578 of 2003 with W.A.M.P. No.3982 of 2003

18.6.2013

அஞ்சலம் ... மனுதாரர்

எதிர்

காவல்துறை கண்காணிப்பாளர், பெரம்பலூர் மாவட்டம் (முன்பு திருச்சி மாவட்டத்தில் பகுதி). **2.** தமிழக அரசு, பிரதிநிதி: செயலர், உள்துறை, புனித ஜார்ஜ்கோட்டை, சென்னை – **9. 3.** காந்தி, காவல்துறை ஆய்வாளர், படலூர் காவல் நிலையம், பெரம்பலூர் மாவட்டம், (முன்பு திருச்சி மாவட்டத்தில் பகுதி). **4.** அன்பரசு, காவலர், படலூர் காவல் நிலையம், பெரம்பலூர் மாவட்டம் (முன்பு திருச்சி மாவட்டத்தில் பகுதி). **5.** சின்னதுரை, காவலர், பெரம்பலூர் மாவட்டம் (முன்பு திருச்சி மாவட்டத்தில் பகுதி). **6.** ரவி, காவல்துறை ஓட்டுநர், படலூர் காவல் நிலையம், பெரம்பலூர் மாவட்டம் (முன்பு திருச்சி மாவட்டத்தில் பகுதி) ....... எதிர் மனுதாரர்

### மேற்கோள் காட்டப்பட்ட வழக்குகள்

| | |
|---|---|
| அஜாப் சிங் *எதிர்* உ.பி. மாநில அரசு, *2000 (3) SCC 521* | 8 |
| பகவான் சிங் *எதிர்* பஞ்சாப் மாநில அரசு, *1992 (3) SCC 249* | 8 |
| தல்பீர் சிங் *எதிர்* உ.பி. மாநில அரசு, *2009 (2) CTC 355 SC* | 10 |
| முன்ஷி சிங் கவுதம் *எதிர்* மத்திய பிரதேச மாநில அரசு, *2005 (9) SCC 631* | 8 |
| நீலாபதி பெஹேரா *என்ற* லலிதா பெஹேரா *எதிர்* ஒடிசா அரசு, *1993 (2) SCC 746* | 8 |
| ராஜம்மாள் *எதிர்* தமிழக அரசு, *W.A. No. 1018 / 2006, 5.2.2008* | 8 |
| ஷகிலா அப்துல் கபார் கான் *எதிர்* வஸந்த் ரகுநாத் தோப்லே *2003(7) SCC 749* | 8 |
| மத்திய பிரதேச அரசு *எதிர்* ஷியாம் சுந்தர் திரிவேதி, *1995(4) SCC 262* | 8 |
| இந்திய அரசு *எதிர்* லூய்துக்லா, *1999 (9) SCC 273* | 8 |

**வி. சுரேஷ், மனுதாரரின் வழக்கறிஞர் சுதா ராமலிங்கம் சார்பில்.**

**S. கோமத் நாயகம், கூடுதல் தலைமை வழக்கறிஞர், உதவியாளர்: ஏ. ஸ்ரீஜெயந்தி, எதிர் மனுதாரர்கள் 1, 2க்கு அரசு வழக்கறிஞர்; இளம்வழுதி, எதிர்மனுதாரர் 3ன் வழக்கறிஞர் கே.ஜே. நித்தியானந்தம் சார்பில்.எதிர் மனுதாரர்கள் 4,5,6க்கு தள்ளுபடி செய்யப்பட்டது.**

**ஆணை கோரும் மேல்முறையீடு (ரிட் அப்பீல்) அனுமதிக்கப்பட்டது – ஆணை கோரும் மேல்முறையீடு செயலுறு மனு (ரிட் அப்பீல் மாண்டமஸ் பெட்டிசன்) முடிக்கப்பட்டது – கட்டணம் இல்லாமல்**

**அஞ்சலம் எதிர் காவல்துறை கண்காணிப்பாளர்**

## (DB) (நீதிபதி எலிப் தர்மா ராவ்)

வேண்டுகோள் ரிட் எண். 16550 / 1995ன்படி 16.6.2013 தேதி அன்று மதிப்பிற்குரிய தனி நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிராக லெட்டர்ஸ் பேட்டண்ட் சட்டவிதி 15ன்கீழ் ஆணை கோரும் மேல்முறையீடு.

## தீர்ப்பு

**நீதிபதி எலிப் தர்மா ராவ்**

1. மனுதாரர் காலம் சென்ற பாண்டியனின் மனைவி. தனது கணவர் பாண்டியன், 3 முதல் 6 வரையிலான எதிர் மனுதாரர்களால், அனைவரும் காவல்துறையினர், சில தனிப்பட்ட நபர்களின் ஒத்துழைப்போடு, சித்தரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டதாகக் கூறி, தனி நீதிபதியின் முன் ஒரு ஆணை கோரும் மனு தாக்கல் செய்தார். எதிர்மனுதாரர்கள் 1,2 ஆகியோர் எதிர் மனுதாரர்கள் 3 முதல் 6 வரை உள்ளோர் மீது இந்திய தண்டனைச் சட்டம், பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989 மற்றும் இதர சட்டங்களின் உரிய விதிகளின் கீழ் வழக்குத் தொடர ஆணையிட வேண்டும், தனது கணவர் பாண்டியனின் மரணத்திற்கு உரிய இழப்பீடு வழங்க ஆணையிட வேண்டும் என்று மனுதாரர் கோரியிருந்தார். தனி நீதிபதியின் தீர்ப்பு அவர் எதிர்பார்த்தது போல் இல்லை என்பதால் இந்த ஆணை கோரும் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

2. ஆவணப்பூர்வமாக எங்களுக்குக் கிடைத்துள்ள தகவல்களிலிருந்து, நாங்கள் சேகரிக்க முடிந்த உண்மை அம்சங்கள் என்னவெனில், முந்தைய திருச்சி மாவட்டத்தின் பெரம்பலூர் வட்டம், வேப்பூர் கிராமத்தைச் சேர்ந்த செங்கமலை உடையாரின் மகன் சீமான் என்பவர், தனது 16 வயது மகள் செல்வராணி, வேப்பூரில் உள்ள தனது நெல் அரவை ஆலை வேலை செய்து வந்தவரும், ஆந்தூர் கிராமத்தின் பரமசிவன் என்பவரின் மகனுமான மோகன் என்பவரால் 4.12.1994 (ஞாயிறு) அன்று இரவில் கடத்தப்பட்டதாக, குன்னம் காவல் நிலையத்தில் 8.12.1994 (வியாழன்) காலை 10.00 மணிக்கு ஒரு புகார் பதிவு செய்தார். அதன் அடிப்படையில் குன்னம் காவல் நிலையத்தின் குற்ற எண். 307/1994ன்படி இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 366ன் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. குன்னம் காவலர்களால் தொடர்ச்சியான முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் குற்றம்சாட்டப்பட்ட மோகன், கடத்தப்பட்ட செல்வராணி இருவரையும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று எதிர்மனுதாரர்கள் கூறினர். அதைத் தொடர்ந்து மேற்கூரிய புகார்தாரரான சீமான் இந்த நீதிமன்றத்தில் ஒரு ஆட்கொணர்வு மனு (எச்.சி.பி. எண்.117/ 1995) 23.1.1995 தாக்கல் செய்து, கடத்தப்பட்ட தனது மகளை நீதிமன்றத்தின் முன் நிறுத்தக் கோரினார்.

3. இந்த ஆட்கொணர்வு மனுவை விசாரித்த இந்த நீதிமன்றம் 26.7.1995 தேதியிட்ட ஆணையின்படி, திருச்சி காவல்துறை கண்காணிப்பாளர் இதுகுறித்து விசாரித்து, புலனாய்வு செய்து 3.8.1995 அன்று அல்லது அதற்கு முன் ஒரு அறிக்கை சமர்பிக்க ஆணையிட்டது. இந்தச் சூழலில்தான் 3வது எதிர் மனுதாரரான திரு. கஸ்தூரி காந்தியிடம் புலனாய்வு நடத்தும் பொறுப்பை முதல் எதிர் மனுதாரர் ஒப்படைத்தார்.

4. மரணமடைந்தவரின் மனைவியான மனுதாரர் தனது கணவர் மூன்றாவது எதிர் மனுதாரரின் தலைமையிலான காவலர் குழுவினரால் சென்னையிலிருந்து பிடித்துச் செல்லப்பட்டவராகவும், சித்தரவதை செய்யப்பட்டதாகவும் காவலில் இருக்கும்போதே கொல்லப்பட்டதாகவும், பின்னர், விசயத்தை மறைப்பதற்காக, அவரது உடல் வேப்ப மரத்தில் தூக்கில் தொங்கவிடப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

5. முதல் மனுதாரரான காவல்துறை கண்காணிப்பாளர் தாக்கல் செய்த எதிர் வாக்குமூலத்தின்படி, மூன்றாவது எதிர் மனுதாரரான திரு. சி. கஸ்தூரி காந்தி, பாதிக்கப்பட்ட பெண்ணை தேடும் முயற்சியில், 1.8.1995 அன்று சென்னைக்கு ஐந்தாவது எதிர்மனுதாரரான காவலர் ஐபிசி நிலை 1113 சின்னதுரை, புகார்தாரர் சீமான், சாட்சி சுப்பிரமணியன் ஆகியோருடன் பாண்டியனை விசாரிப்பதற்காக சென்னைக்கு சென்றார். கொத்தவால்சாவடியில் ஒரு கூலித் தொழிலாளியாக வேலை செய்து வந்த பாண்டியன், காவல் படையினரால் விசாரிக்கப்பட்டார். அவர் கொடுத்த தகவலின்படி காவல் படையினர் பாண்டியனுடன் ராயபுரம் குடிசைப் பகுதிக்குச் சென்று குற்றம்சாட்டப்பட்டவரும் கடத்தப்பட்ட சிறுமியும் தங்கியிருந்ததாக கூறப்பட்டது பற்றி விசாரித்தது. ஆனால், அது பலனளிக்கவில்லை. ஆகவே, பின்னர் அந்த பாண்டியன் காவல்துறை ஆய்வாளரையும் அவரது குழுவினரையும், ஆட்டோ ஓட்டுநரான தனது மைத்துனர் செல்லமுத்துவுக்கு, குற்றம்சாட்டப்பட்டவர் பற்றியும் செல்வராணி பற்றியும் தெரியும் என்று கூறி, சிந்தாதரிப்பேட்டைக்கு அழைத்துச் சென்றார். சிந்தாதரிப்பேட்டையில் இருந்த ஆட்டோ ஓட்டுநர்கள், செல்லமுத்து ஆடிப் பெருக்குத் திருவிழா கொண்டாடுவதற்காக தனது சொந்த ஊரான கிலுமாத்தூருக்கு சென்றிருப்பதாக தெரிவித்தனர். பின்னர், தானும் தனது மைத்துனர் செல்ல முத்துவுடன் தனது சொந்த ஊருக்குச் செல்வதாகக் கூறி 2.8.1995 அன்று இரவு 8 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டுச்

சென்றார். மூன்றாவது எதிர் மனுதாரர் தனது குழுவினருடன் 2.8.1995 மாலையில் சென்னையிலிருந்து புறப்பட்டு அன்று இரவு 11 மணிக்கு கிலுமாத்தூர் கிராமத்தை அடைந்தார். அங்கே காத்திருந்த பாண்டியன் காவல்துறை ஆய்வாளரிடம், தனது மைத்துனர் செல்லமுத்து அவருக்கு குற்றம்சாட்டப்பட்ட மோகனும் கடத்தப்பட்ட சிறுமி செல்வராணியும் இருக்குமிடம் தெரியும் என்பதை காவல்துறைக்கு சொன்னதற்காக கோவத்துடன் திட்டியதாக தெரிவித்தார். செல்லமுத்துவின் வீட்டை தொலைவிலிருந்து காட்டவும் செய்தார். மூன்றாவது எதிர் மனுதாரர் கஸ்தூரி காந்தி செல்லமுத்துவின் தந்தை மற்றும் சகோதரனுடன் நடத்திய விசாரணைக்குப் பிறகு, செல்லமுத்து வேப்பூர் கிராமத்திலுள்ள தனது சகோதரியின் வீட்டிற்கு போயிருப்பதாக தெரிந்துகொண்டார். செல்லமுத்துவை அடையாளம் காட்ட பாண்டியனை வேப்பூருக்கு அழைத்துச் செல்ல மூன்றாவது மனுதாரர் விரும்பினார். பாண்டியன் கிடைக்காததால் மூன்றாவது மனுதாரரும் அவரது குழுவினரும் 3.8.1995 அன்று நள்ளிரவு 00.30 மணிக்கு வேப்பூர் கிராமத்திற்கு சென்றனர். சீமானையும் அவரது சகோதரர் சுப்பிரமணியனையும் வீட்டில் விட்டுவிட்டு பின்னர் பாண்டியனின் வீட்டிற்கு வந்து திரும்பி வந்து பாண்டியனும் செல்ல முத்துவும் எங்கே இருக்கிறார்கள் என்று பாண்டியனின் மனைவியிடம் கேட்டனர். பாண்டியனும் செல்ல முத்துவும் தனது வீட்டிற்கு வரவில்லை என்று பாண்டியனின் மனைவி காவலர்களிடம் கூறினார். இந்தச் சூழலில், கிலுமாத்தூர் கிராம நிர்வாக அலுவலர் திரு. பன்னீர் செல்வம், 4.8.1995 அன்று 22.00 மணிக்கு குன்னம் காவல் நிலையத்தில் ஒரு புகார் தாக்கல் செய்து, கிலுமாத்தூர் கிராமத்தில் ஒரு வேப்பமரத்தில் பாண்டியன் தூக்குப் போட்டு தொங்கிக்கொண்டிருப்பது கண்டறியப்பட்டதாக தெரிவித்தார். ஆகவே, குன்னம் காவல் நிலையத்தில் குற்ற எண். 171/95 என்ற வழக்கு குற்றவியல் சட்டத்தின் 174வது பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டது. ஆகவே, மேற்கூரிய சம்பவங்களின் அடிப்படையில், மனுதாரர் கூறியுள்ள புகார்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானவை என்றும் ஆகவே அவரது மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர் மனுதாரர்கள் கோரியிருந்தனர்.

**6.** இந்த நீதிமன்றத்தின் மதிப்பிற்குரிய ஒரு தனி நீதிபதி 16.6.2003 அன்று பிறப்பித்த ஆணையின்படி பின்வரும் கருத்துகளுடன், மனுதாரரின் ஆணை கோரும் மனுவை தள்ளுபடி செய்தார்:

"5. மனுதாரரின் வழக்கறிஞர் காவல் நிலைய மரணங்களுக்கு இழப்பீடு வழங்கி இந்த நீதிமன்றமும் உச்சநீதிமன்றமும் தீர்ப்பளித்த பல வழக்குகள் உண்டு என தீவிரமாக வாதிட்டுள்ளார். அந்த தீர்ப்புகளில் எவ்வித சர்ச்சையும் இருப்பதற்கில்லை. ஆனால், மேற்கூரியவாறு, இந்த வழக்கில் மரணமடைந்த பாண்டியன் காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டாரா என்பதே சர்ச்சைக்குரியதாக இருக்கிறது. இத்தகைய ஒரு சர்ச்சைக்குரிய விஷயத்தை வாக்குமூல அறிக்கை (பிரமாண பத்திரம்) அல்லது எதிர் வாக்குமூல அறிக்கை மூலம் தீர்த்துவிட முடியாது. குற்றவியல் சட்டத்தின் 174வது பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட புகார் இந்திய தண்டனைச் சட்டத்தின் 302வது பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கையாக (FIR) மாற்றப்படலாம் முடியும் என்றும், பிரச்சனை குறித்து புலனாய்வு செய்யுமாறு காவல்துறை அதிகாரிக்கு ஆணையிடப்படலாம் என்றும் மதிப்பிற்குரிய வழக்கறிஞர் மேலும் வாதிட்டுள்ளார். அத்தகைய ஆணையை இந்த நீதிமன்றத்தால் நேரடியாக பிறப்பிக்க முடியாது.

6. எனினும், படலூர் காவல் நிலையத்தின் கோப்பில் நிலுவையில் இருக்கும் புகார் குறித்து விசாரணை நடத்த முதல் எதிர்மனுதாரருக்கு ஆணையிடப்படுகிறது, அந்த விசாரணையின் அடிப்படையில், தேவைப்படுமானால், முதல் தகவல் அறிக்கையை பொருத்தமான முறையில் எதிர்மனுதாரர்கள் மாற்றம் செய்யலாம் என்றும் ஆணையிடப்படுகிறது. 29.9.1995 அன்று மாவட்ட ஆட்சியருக்கு அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் (ஆர்டிஓ) அனுப்பிய அறிக்கையின் நகலையும், மனுதாரரின் கணவரது மரணம் தொடர்பான பிணக் கூராய்வு இறுதி அறிக்கை நகலையும் மனுதாரருக்கு வழங்குமாறு முதல் எதிர் மனுதாரருக்கு ஆணையிடப்படுகிறது. மனுதாரரின் கோரிக்கை அடிப்படையில் இந்த ஆணை மேலும் தாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டும். மனுதாரரின் கணவரது மரணம் குறித்த விசாரணை முடிவு, இந்த ஆணையின் நகல் கிடைக்கப்பெற்ற இரண்டு மாத காலத்திற்குள் இந்த நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டும். தேவைப்படுமானால் இந்த காலத்தை நீட்டிப்பது குறித்து இந்த நீதிமன்றத்தை முதல் எதிர்மனுதாரர் அணுகுவதற்கு ஆணையிடப்படுகிறது. இந்த கருத்துகளுடன், ஆணை கோரும் மனு, கண்டனம் எதுவும் இன்றி, தள்ளுபடி செய்யப்படுகிறது."

**7.** இந்த நீதிமன்றத்தின் தனி நீதிபதி பிறப்பித்த இந்த ஆணையை எதிர்த்து, மரணமடைந்தவரின் மனைவியான மனுதாரர் ஆணை கோரும் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**8.** நீதிமன்ற வாதத்தின்போது, மனுதாரரின் வழக்கறிஞர், மரணமடைந்தோரின் உடலில் காயங்கள் இருந்ததை பிணக்கூராய்வு அறிக்கை தெளிவாக நிரூபித்துள்ள நிலையில், அதுகுறித்து காவல்துறையினர் விளக்கமளிக்காத நிலையில், மரணமடைந்தவர் மர்மமான முறையில் இறப்பதற்கு சற்று முன்பாகத்தான் காவல்துறையினர் சென்னையில்

அவரை விசாரித்தார்கள் என்ற நிலையில், மனுதாரரின் கோரிக்கையில் எல்லா நியாயமும் உள்ளது. மனுதாரரின் வழக்கறிஞர், மேல்சாதி இந்துவான புகார்தாரரின் விருப்பப்படி காவல்துறையினர் அத்துமீறி செயல்பட்டுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது என்றும், மரணமடைந்தவர் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்றும் வாதிட்டுள்ளார். காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுக்கவும், காவல்துறை காவலில் தனது கணவரின் மரணத்திற்கு இழப்பீடு வழங்கவும் மனுதாரர் கோரியிருப்பதை நியாயப்படுத்தியுள்ள வழக்கறிஞர், பின்வரும் தீர்ப்புகளை மேற்கோள் காட்டியுள்ளார்:

1. *பகவான் சிங் மற்றும் இன்னொருவர் எதிர் பஞ்சாப் மாநில அரசு, 1992(3) SCC 249;*
2. *நீலாபதி பெஹரா என்ற லலிதா பெஹரா எதிர் ஒரிசா மாநில அரசு மற்றும் பிறர், 1993(2) SCC 746;*
3. *ம.பி. மாநில அரசு எதிர் சியாம் சுந்தர் திரிவேதி மற்றும் பிறர், 1995(4) SCC 262;*
4. *இந்திய அரசு மற்றும் பிறர் எதிர் லூய்துக்லா மற்றும் பிறர், 1999 (9) SCC 23:*
5. *அஜாப் சிங் மற்றும் இன்னொருவர் எதிர் உ.பி. மாநில அரசு மற்றும் பிறர், 2000 (3) SCC 521;*
6. *ஷகிலா அப்துல் கபார் கான் எதிர் வசந்த் ரகுநாத் தோப்லே மற்றும் இன்னொருவர், 2003 (7) SCC 749;*
7. *முன்ஷி சிங் கவுதம் மற்றும் பிறர் எதிர் ம.பி. மாநில அரசு, 2005(9) SCC 631* மற்றும்
8. *ராஜம்மாள் எதிர் தமிழ்நாடு மாநில அரசு வழக்கில் இந்த நீதிமன்றத்தில் எங்களில் ஒருவரது தலைமையில் (நீதிபதி எலிப் தர்மாராவ்) அளிக்கப்பட்ட, வெளியிடப்படாத ஒரு தீர்ப்பு, W.A.No. 1018/2006 தேதி 5.2.2008.*

**9.** மேற்கண்ட அனைத்து தீர்ப்புகளிலும் சட்டத்தின் உயர் அமைப்புகள் (நீதிமன்றங்கள்) காவல்துறை அத்துமீறல்களை வன்மையாகக் கண்டித்துள்ளன, சில வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களது உறவினர்களுக்கு, எது பொருந்துமோ அவ்வாறாக, இழப்பீடு வழங்கப் பரிந்துரைத்துள்ளன.

**10.** மறுபுறத்தில், எதிர்மனுதாரர்களுக்காக ஆஜரான மதிப்பிற்குரிய கூடுதல் தலைமை வழக்கறிஞர் இந்த வழக்கில், மரணமடைந்தவர் காவலர்களின் காவலில் இருந்தபோதுதான் இறந்தார் என்று அறிவிப்பதற்கான ஆதாரம் சிறிதும் இல்லை என்று வாதிட்டார். ஆர்டீஓ அறிக்கையும் கூட இது தற்கொலை என்று தெளிவாகக் கூறுகிறது, ஆகவே மனுதாரரின் கோரிக்கையை நீதிமன்றம் ஏற்கக்கூடாது என்றார். தனது வாதங்களுக்கு ஆதரவாக மதிப்பிற்குரிய கூடுதல் தலைமை வழக்கறிஞர், தல்பீர் சிங் எதிர் உ.பி. மாநில அரசு மற்றும் பிறர், (2009 (11) SCC 376 வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை மேற்கோள் காட்டினார். அந்த வழக்கில் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் இவ்வாறு கூறியிருந்தது:

> ‘‘காவல் மரணம்தான் நிகழ்ந்தது என்று தீர்ப்பளிக்கப்படாத நிலையில் இழப்பீடு வழங்கப்பட இயலாது. வழக்குத் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளது, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது, குற்றச்சாட்டு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது என்ற நிலையில் தற்போது மேற்கொண்டு ஆணை தேவையில்லை. ஏதேனும் ஒரு கட்டத்தில், வேறு குற்றங்கள் நிகழ்த்தப்பட்டிருப்பதற்கான ஆதாரம் நீதிமன்றத்தின் முன் வருமானால் தேவையான ஆணை பிறப்பிக்கப்படும்.’’

**11.** இரு தரப்பிலும் முன்வைக்கப்பட்ட வாதங்களையும் தாக்கல் செய்யப்பட்ட ஆதார ஆவணங்களையும் நாங்கள் கூர்ந்து கவனித்தோம்.

**12.** வழக்கில் முடிவு செய்வதற்கு, இறந்தவரின் பிணக்கூராய்வு அறிக்கைக்கு ஒரு பங்கு இருக்கிறது. அதன் பயனுள்ள பகுதி எளிதாகக் காண்பதற்காக இங்கு எடுத்துத்தரப்படுகிறது:

‘‘உடல் முதலில் **6.8.1995** பகல் **2** மணிக்குக் கையொப்பமிட்டுள்ளவரால் காணப்பட்டது. அது அழுகிய நிலையில் இருந்தது. **6.8.1995** அன்று பகல் **2** மணிக்கு பிணக்கூராய்வு தொடங்கியது.

பிணக்கூராய்வில் தெரியவந்தது: ஆண் உடல் பின்னால் சாய்ந்திருந்தது. இரண்டு கால்களும் முழங்காலில் ஓரளவு தளர்வாகவும் இழுபட்ட நிலையிலும் இருந்தன. கைகள் இரண்டும் இழுபட்ட நிலையிலும் முழங்கையில் தளர்வாகவும் தோல் உரிந்தும் காணப்பட்டன. உடல் முழுக்க புழுக்கள் ஊர்ந்து கொண்டிருந்தன. திறந்திருந்த வாயிலிருந்து நாக்கு ஓரளவுக்குத் தொங்கிக்கொண்டிருந்தது. கண் இமைகளும் விழிகளும் வறண்டுபோய் கறுப்பு நிறத்தில் இருந்தன. பற்கள் வரிசையாக இருந்தன. குதத்தின் வழியாக மலம் வெளியேறியிருந்தது. இயற்கையான துவாரங்கள் புழுக்களுடன் காணப்பட்டன. தோல் உரிந்திருந்தது. தலைமுடி எளிதாகப் பிய்ந்துகொள்ளும் நிலையில் இருந்தது.’’

**“வெளிக் காயங்கள்:**

1. இடது மார்பின் காம்புப் பகுதியில் 7.5 x 5 செ.மீ. அளவில் ஒரு கன்றிப்போன காயம் (கறுப்பு நிறம்).
2. விதைப்பையின் அடியில் இரண்டு பக்கத்திலும் பரவியிருந்த வீக்கம்.
3. கழுத்தின் உச்சியில் நடுப்பகுதியில் இடது பக்கமாக 2.5 செ.மீ.யிலிருந்து தொடங்கி காது நரம்பு பொடைப்பின் வழியாக, வரி வரியாக நடு நரம்பைத் தாண்டி வலது காது நரம்பின் அடியில் முடிகிற ஒரு கயிறு அடையாளம்,”

**“மரணத்தின் காரணம் பற்றி கருத்து:**

குடல் ரசாயன ஆய்வு அறிக்கைக்காக நிறுத்தி வைக்கப்படுகிறது
மரணமடைந்தவர் பிணக்கூராய்விற்கு 72 முதல் 84 மணி நேரத்திற்கு முன்னதாக இறந்திருப்பார் என்று தெரிகிறது.”

பிணக்கூராய்வு நடத்திய மருத்துவரின் கருத்து:

**“நான் பின் வருமாறு கருதுகிறேன்:**

1. சோதனை செய்யப்பட்ட தொண்டை எலும்பில் மரணத்திற்கு முந்தைய காயம் அல்லது முறிவு இல்லை.
2. உடலுடன் இணையும் இடத்தில் இரண்டு பெறு எலும்புகளும் மரணத்திற்குப் பின் இடம் மாறியுள்ளன.

**இறுதிக் கருத்து:**

இறந்து போன நபர் தாக்கப்பட்டதன் காரணமாக மரணமடைந்திருப்பார், பின்னர் அவர் தூக்கில் தொங்கவிடப்பட்டிருப்பார் என்று நான் கருதுகிறேன். பிணக்கூராய்வுக்கு 72 முதல் 84 மணி நேரம் முன்னதாக மரணம் ஏற்பட்டிருக்கிறது.”

**13.** பிணக்கூராய்வு அறிக்கையின்படி விதைப் பையின் அடிப்பகுதியில் வீக்கமும், இடது மார்பின் காம்புப் பகுதியில் கன்றிப் போன காயமும் இருந்துள்ளன. பிணக்கூராய்வை பரிசீலிக்கும்போது, இறந்துபோனவர் தாக்கப்பட்டிருந்தார் என்பதும் அவரது மரணத்திற்குப் பிறகு தூக்கில் தொங்கவிடப்பட்டார் என்பதும் சந்தேகத்திற்கிடமின்றி தெரிகிறது. பிணக்கூராய்வு 6.8.1995 பகல் 2 மணிக்கு செய்யப்பட்டுள்ளது. மருத்துவரின் கருத்துப்படி மரணமடைந்தவர் பிணக்கூராய்வுக்கு 72 முதல் 84 மணி நேரம் முன்னதாக, அதாவது 3 முதல் 4 நாட்கள் முன்னதாக இறந்திருக்கிறார். ஆகவே 2.8.1995க்கும் 3.8.1995க்கும் இடையே அவர் இறந்திருப்பார்.

**14.** மேலே குறிப்பிட்டுள்ளவற்றின் அடிப்படையில், இறந்து போன பாண்டியனையும் அவரது மைத்துனர் செல்ல முத்துவையும் கண்டுபிடித்து விசாரிப்பதற்காகத்தான் சென்னைக்கு காவல்துறை குழுவினர் சென்றதாக எதிர்மனுதாரர்களே கூறியுள்ளனர். அப்படித்தான் நடந்தது என்று வைத்துக்கொண்டால், பாண்டியனைக் கண்டுபிடித்து, அவரிடம் விசாரணை நடத்திய பிறகு, செல்வமுத்துவைத் தனது சொந்த ஊருக்குப் போயிருப்பதை அறிந்த பின், காவல்படையினர் பாண்டியனை சென்னையிலேயே விட்டுவிட்டு, கிலுமாத்தூரில் காத்திருக்குமாறும், செல்ல முத்து இருக்கும் இடத்தை அறிய அங்கே பாண்டியனை காவல் படையினரும் புகார்தாரரும் மீண்டும் சந்திப்பார்கள் என்றும் கூறியிருக்கமாட்டார்கள். சுட்டிக்காட்ட வேண்டிய இன்னொரு விஷயம் என்னவென்றால், காவல் படையினரும் புகார்தாரர்களும் ஒரு காவல்துறை வண்டியில் பயணம் செய்துள்ளனர், அவர்கள் கூறியுள்ளபடி அவர்கள் சென்னையிலிருந்து 2.8.1995 மாலையில் புறப்பட்டுள்ளனர். ஆனால், பாண்டியன் காவல்துறையினரிடம் 2.8.1995 இரவு 8 மணிக்கு தான் தனது மைத்துனருடன் தனது சொந்த ஊருக்குப் போவதாக சொன்னார் என்று கூறப்படுகிறது. அப்படித்தான் நடந்ததென்றால் காவல்படையினர் திரும்பிச் சென்ற பிறகு வெகு நேரம் கழித்துதான் பாண்டியன் சென்னையிலிருந்து புறப்பட்டிருக்கிறார். அதுவும் ஒரு அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்தில் புறப்பட்டிருக்கிறார். ஒரு ஜீப்பில் சென்ற காவல் படையினரைவிட முன்னதாக அவரால் எப்படி கிலுமாத்தூர் கிராமத்திற்கு சென்றிருக்க முடியும் என்பதும் அங்கே அவர் எப்படி இரவு 11 மணிக்கு காத்திருந்திருக்க முடியும் என்பதும் மிகவும் சந்தேகத்திற்குரியதாகும். ஆகவே, காவல்படையினர் பாண்டியனை தங்களோடு கொண்டு சென்றார்கள் என்பதிலும், பாண்டியன் கொலையிலிருந்து தங்களை விலக்கி வைத்துக்கொள்வதற்காக எதிர்மனுதாரர்கள் 2.8.1995க்குப் பிறகு பாண்டியனை காவல் படையினர் பார்க்கவில்லை என்றும் திடீரென்று அவரது இறந்துபோன உடல் 4.8.1995 அன்று ஒரு மரத்தில் தொங்கிக்கொண்டிருந்ததாகவும் ஒரு கதையை ஜோடித்திருக்கிறார்கள் என்பதிலும் சந்தேகமில்லை என்று நாங்கள் கருதுகிறோம். வேறு விதமாகப் பார்த்தாலும், பாண்டியனை தாங்கள் 2.8.1995 இரவில் விசாரித்ததாகவும், அதன் பிறகு அவரை யாருடனும் பார்க்கவில்லை என்றும் எதிர்மனுதாரர்களே கூறியுள்ளனர். 'கடைசியாகப் பார்த்தவர்கள்' என்ற கோட்பாட்டின்படி, பாண்டியனின் மரணம் குறித்து பதிலளிக்கக் கடமைப்பட்டவர்கள் காவல்துறையினரேயன்றி வேறு யாருமல்ல.

15. இந்நிலையில், மனுதாரர் தனது ஆணை கோரும் மனுவில் இணைக்கப்பட்டுள்ள வாக்குமூலத்தில் கூறியுள்ள கொடுமையான சம்பவங்கள் சிலவற்றை பார்ப்பதும் பொருத்தமானதாகும்:

“4. எனது கணவர் பாண்டியன் முதலில், கிராமத்தில் ஒரு பணக்கார, நிலம் வைத்துள்ள குடும்பமான சீமான் மற்றும் சுப்பிரமணி உடையார் குடும்பத்தில் ஒரு பாரம்பரிய கொத்தடிமைத் தொழிலாளி வடிவமான, ஒரு பண்ணையாளாக வேலை செய்து வந்தார் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், 10–12 ஆண்டுகளுக்கு முன் மேற்கூரிய குடும்பத்தில் ஒரு பண்ணையாளாக வேலை செய்வதை எனது கணவர் நிறுத்திக்கொண்டார். சென்னை கொத்தவால்சாவடி சந்தையில் ஆதிதிராவிடர் சமூகத்தைச் சேர்ந்த பலரும் வேலை செய்து கொண்டிருந்ததால் எனது கணவரும் கொஞ்சம் கொஞ்சமாக அங்கு வேலை செய்ய ஆரம்பித்தார். கொத்தவால்சாவடி சந்தையில் பல மாதங்களாக அவர் தலைச்சுமை தொழிலாளியாக வேலை செய்தார். திருவிழாக் காலங்களிலும் இதர நேரங்களிலும் தனது சொந்த ஊருக்குச் சென்று வந்தார். அப்படிப்பட்ட நேரங்களில் நான் எங்களது கிராமத்திலேயே இருந்து கொள்வேன், கிராமத்தில் அன்றாட கூலி வேலை செய்து வருவேன். இப்படி 30.7.1995 காலை 7 மணியளவில் எனது கணவர் பாண்டியன் சென்னைக்கு கொத்தவால்சாவடி சந்தையில் தலைச்சுமைத் தொழிலாளியாக வேலை செய்வதற்காகச் சென்றார்.

5. 1.8.1995 அன்று பகல் 2.30 மணியளவில் 6 பேர் கோவிந்தபிள்ளை இஞ்சி மற்றும் வெங்காய மண்டி, மலையப் பெருமாள் தெரு, கொத்தவால்சாவடிக்கு வந்தார்கள் என்று எனது கணவருடன் வேலை செய்து வந்த எனது உறவினர் வீரமுத்து, த/பெ. கருப்பையா சொல்லி நம்பகமான முறையில் நான் தெரிந்துகொண்டேன். அந்த நேரத்தில் பாண்டியன் உள்ளே தூங்கிக்கொண்டிருந்தார். பாண்டியனைப் பற்றி வீரமுத்துவிடம் சீமான், சுப்பிரமணி உடையார் விசாரித்தனர். பின்னர் அவர்கள் உள்ளே சென்று பாண்டியனை எழுப்பி வெளியே கொண்டுவந்தனர். வீரமுத்துவின் முன்னிலையிலேயே அவர்கள் பாண்டியனிடம், ஓடிப்போன தங்களது மகளைத் தேடி வந்திருப்பதாகவும், இதுகுறித்து சில தகவல்கள் பாண்டியனுக்குத் தெரியும் என்று தாங்கள் கேள்விப்பட்டதாகவும் கூறினர். அருகில் நிறுத்தப்பட்டுள்ள வாகனத்தில் படலூர் காவல்துறை ஆய்வாளர் திரு. காந்தி இருப்பதாகவும் அங்கு தங்களுடன் வருமாறும் அவர்கள் கூறினர். வண்டியில் சீமான், சுப்பிரமணி உடையார் ஆகியோரும் ஏறிக்கொண்டனர். வண்டியில் மேலும் மூன்று பேர் இருந்ததாக கூறப்படுகிறது. அவர்கள் படலூர் காவல்நிலைய காவலர்கள் அன்பரசு, குன்னம் சின்னதுரை, காவல்துறை ஓட்டுநர் ரவி ஆகியோர்தான் என்று பின்னர் நான் தெரிந்துகொண்டேன். அப்போது பாண்டியன் தன்னுடன் இஞ்சி மண்டியின் சாவிக்கொத்தை எடுத்துச் சென்றிருந்தார். உண்மையில் அந்த சாவிக்கொத்து காவல்துறையினரிடம் இருந்தது. குன்னம் காவல் நிலைய துணை ஆய்வாளர் திரு. வீரமணி, எனது கணவரின் உடல் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, உள்ளூர் மக்கள் கேட்டுக்கொண்டால் அந்த சாவி படலூர் காவல் ஆய்வாளரிடமிருந்து ஒப்படைக்கப்படும் என்று எழுத்துப்பூர்வமாக உறுதியளித்தார்.

6. 4.8.1995 அன்று மாலை 4 மணியளவில், கிராமத்திற்கு வெளியே ஒரு வேப்பமரத்தில் எனது கணவரின் உடல் தொங்கிக்கொண்டிருப்பதாக எனக்கு தெரிவிக்கப்பட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அந்த இடத்திற்கு நான் விரைந்து சென்றேன். அங்கே எனது கணவர் மரத்தின் உச்சிக் கிளையிலிருந்து தனது கழுத்தில் ஒரு லுங்கியைக் கட்டி தொங்கிக் கொண்டிருந்ததைக் கண்டேன். மரத்தில் 10 அடி உயரம் வரையில் கிளைகள் எதுவும் கிடையாது. சந்தேகத்திற்குரிய வகையில் எனது கணவரின் இரண்டு கைகளும் மரக்கிளைகளில் ஒரு நைலான் நூலால் கட்டப்பட்டிருந்தன. அவரது வலது கால் ஒரு கிளையின் மேல் இருந்தது, இடது கால் ஊசலாடிக்கொண்டிருந்தது. உடலில் சட்டை இல்லை. இரண்டு கண்களும் நாக்கும் வெளியே நீட்டிக்கொண்டிருந்தன. தொடைகளுக்கு மேல் உடலில் கண்ணுக்குத் தெரியும் காயங்கள் இருந்தன. சில காயங்கள் கத்தி போன்ற ஒரு ஆயுதத்தால் ஏற்படுத்தப்பட்டதாக இருந்தன. எனது கணவரின் வலது மீசை அகற்றப்பட்டிருந்தது. உதடுகள் வீங்கியிருந்தன.

16. மனுதாரரின் நிலைபாடு அவரது கணவர் இறந்த முதல் நாளிலிருந்தே இதுதான். ஆகவே, மனுதாரருக்கு சொல்லிக்கொடுக்கப்பட்டதன் மூலம் அல்லது அதுபோன்ற செயல்களின் மூலம் அவரது வாக்குமூலத்தில் ’முன்னேற்றம்’ ஏற்பட்டிருப்பதாக கூறமுடியாது. தனது கைகள் நைலான் நூலால் கட்டப்பட்ட ஒரு மனிதர், அதுவும் அவரது ஒரு கால் மரக்கிளையின் மீது இருக்கும் நிலையில் தூக்குப் போட்டுக் கொள்ளமுடியும் என்று அறிவுள்ள எவரும் நம்ப முடியுமா? மரணம் 4.8.1995 அன்று நிகழ்ந்திருக்குமானால் (உடல் தூக்கில் தொங்கிக்கொண்டிருப்பது 4.8.1995 அன்று வி.ஏ.ஓ.வால்

கண்டறியப்பட்டு அன்று இரவு 10 மணிக்கு முன்னர் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது), 6.8.1995 அன்று பகல் 2 மணிக்கு பிணக்கூராய்வு செய்யப்பட்ட நேரத்தில் உடல் முழுக்க புழுக்கள் நெலியும் அளவுக்கு எப்படி அழுகிப் போயிருக்க முடியும்? உண்மையில், பிணக்கூராய்வுக்கான வேண்டுகோள் 5.8.1995 அன்று காலை 11.50 மணிக்குத்தான் மருத்துவருக்கு வந்துள்ளது. பிணக்கூராய்வு அறிக்கையின்படி மரணம் 2.8.1995, 3.8.1995 ஆகிய நாட்களுக்கிடையேதான் நடந்திருக்க வேண்டும். தனது கணவரின் கைகள் நைலான் கயிற்றால் கட்டப்பட்டிருந்தன என்று மனுதாரர் கூறியிருப்பது, இறந்தவரின் கைகளில் காயங்கள் இருந்ததை மருத்துவர் சுட்டிக்காட்டியிருப்பதோடு பொருந்துகிறது. ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, பிணக்கூராய்வு அறிக்கையின்படி, விதைப் பையின் அடியில் வீக்கம் இருந்திருக்கிறது. இடது மார்பின் காம்புப் பகுதியில் கன்றிப்போன காயம் இருந்திருக்கிறது. இவை எல்லாமாகச் சேர்ந்து மரணமடைந்த இவர் தாக்கப்பட்டிருந்தார், அவரது மரணத்திற்குப் பிறகு தூக்கில் தொங்கவிடப்பட்டார் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி தெளிவுபடுத்துகின்றன.

**17.** இன்னொரு கோணத்தில் பார்க்கிறபோது, இது ஒரு தற்கொலை விவகாரம்தான் என்றால் தற்கொலைக்கான காரணம் என்ன என்பது எதிர்மனுதாரர்களால் எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. ஆகவே, அதிகார பீடத்தில் இருப்பவர்களால் அவர்களுக்கு மட்டுமே தெரிந்த காரணத்திற்காக, அநேகமாக குற்றவாளிகளை காப்பாற்றுவதற்காக, ஒரு கொலை சம்பவத்திற்கு தற்கொலை என வண்ணம் பூசப்பட்டிருக்கிறது என்ற எங்கள் கருத்தை இதுவும் வலுப்படுத்துகிறது. ஆனால், சட்டத்தின் கைகள் நீளமானவை, எந்த ஒரு குற்றவாளியும் அதன் பிடியிலிருந்து தப்ப அனுமதிக்க முடியாது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

**18.** மேற்கூறிய அனைத்து காரணங்களாலும், காவல்துறையினர் மூன்றாவது எதிர்மனுதாரர் கஸ்தூரி காந்தி தலைமையில் பாண்டியனை சென்னையிலிருந்து கொண்டு சென்றனர் என்ற உறுதியான முடிவுக்கு நாங்கள் வருகிறோம். அதன்பின் பாண்டியன் கிராமத்தில் ஒரு வேப்ப மரத்தில் தொங்குவது கண்டறியப்பட்டது. பாண்டியனின் மரணம் தொடர்பாக நேரில் பார்த்த சாட்சிகள் இல்லை என்ற அடிப்படையில் முந்தைய புலனாய்வு நடந்துள்ளது என்று தெரிகிறது. 3 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்களாகிய காவல்துறைக் குழுவினரின் கைகள் கறை படிந்ததாக, பாண்டியனின் மரணத்தோடு தொடர்புள்ளதாக இருக்கின்றன என்ற உண்மையை நினைவில் கொள்ள வேண்டும். 'கடைசியாக காணப்பட்டது' என்ற நன்கு நிலைநாட்டப்பட்ட கோட்பாட்டை, காவல்துறைக் குழுவினரோடுதான் இருந்தார் என்பதோடு பொருத்திப் பார்த்தால், காவல்துறையினரும் புகார்தாரர்களான சீமான், சுப்பிரமணிய உடையார், அவர்களுடைய அடியாட்கள் பாண்டியனின் மரணத்திற்குப் பொறுப்பாவார்கள் என்றும் அவர்கள் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்கள் என்றும் உறுதியாகக் கூறமுடியும். பாண்டியனின் மரணத்தை, பிணக்கூராய்வு அறிக்கையின் குறிப்பான முடிவுகள் அடிப்படையில், தற்கொலை என்று முத்திரை குத்த முடியாது. ஆகவே, மேற்கூறிய விவாதத்தின் அடிப்படையில், காவல்துறை தலைமை ஆய்வாளர் (ஐ.ஜி), குற்ற எண் 13897 / L&O - (A) / 96 /7 - 9.10.1998 தேதியிட்ட கடிதத்தில் அளித்துள்ள அறிக்கையை, அது அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பாண்டியன் மரணம் தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படாமல் கைவிடப்பட்டது, எங்களால் ஏற்க முடியவில்லை.

**19.** மதிப்பிற்குரிய கூடுதல் தலைமை வழக்கறிஞர் சார்ந்திருந்த தீர்ப்பை பொறுத்தவரையில், காவல்துறை அதிகாரிகள் மீது ஒரு குற்றவியல் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ள நிலையில் அவர்கள் மீது வழக்குத் தொடர நிலையில், அந்த நேரத்தில், இழப்பீட்டிற்கான கோரிக்கையை நீதிமன்றம் ஏற்கவில்லை. ஏனென்றால், காவல் மரணம் நடந்திருக்கிறதா என்ற பிரச்சனையைச் சார்ந்தது அது.

**20.** ஆனால், இந்த வழக்கில், பாண்டியனின் மரணத்தில் காவல் படையினருக்கு இருந்த பங்கு குறித்து சந்தேகம் கொள்வதற்கான சிறந்த, மிகவும் நம்பகமான ஆதாரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும் அவர்கள் மீது எதிர் மனுதாரர்கள் 1, 2 ஆகியோரால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்கூறிய காரணங்களால், காவல் படையினர் கூறிய தூக்குப் போட்டு மரணம் என்பதை நம்புவதற்கு இல்லை என்றபோதிலும்கூட ஒரு விசாரணையை மேற்கொண்ட ஆர்.டீ.ஓ, இது ஒரு தற்கொலைதான் என்ற காவல்துறையினரின் நிலைபாட்டை நியாயப்படுத்துகிற ஒரு அறிக்கையை அளித்தார். அதனை எங்களால் வரவேற்க இயலவில்லை. ஆகவே, ஆர்.டீ.ஓ தனது கண்துடைப்பு விசாரணை அறிக்கையின் மூலம் காவல்துறைக் குழுவினருக்கு ஆதரவாகச் செயல்பட்டுள்ளார் என்று மனுதாரர் கூறுவதுடன் நாங்கள் முழுமையாக உடன்படுகிறோம். மரணம் அடைந்தவரை காவல்துறைக் குழுவினர் கொண்டு சென்றது முதல் அவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டது வரையிலான நிகழ்வுப் போக்குகளில் காவல்துறையினராலும், ஆர்.டீ.ஓ அறிக்கையிலும்கூட, பதிலளிக்காத மேற்கூறிய பல கேள்விகள் உள்ளன. ஆகவே மதிப்பிற்குரிய தலைமை வழக்கறிஞர் சார்ந்துள்ள தீர்ப்பு எதிர் மனுதாரருக்கு சாதகமாக அமையவில்லை.

21. ஆவணப் பதிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் விளக்கப்படாத நிலையில், 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு எதிரான மேல்முறையீடு 19.9.2011 தேதியிட்ட ஆணைப்படி தள்ளுபடி செய்யப்பட்டது என்ற போதிலும் 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு பாண்டியனின் மரணத்தில் சம்பந்தம் இருப்பதற்கான வாய்ப்பு இருப்பதை ஆவணப்பூர்வ ஆதாரங்கள் காட்டுவதால், 4 முதல் 6 வரையிலான இந்த எதிர்மனுதாரர்களுக்கு எதிரான மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்ட ஆணை விலக்கப்படுகிறது, இப்போது எங்களால் அளிக்கப்படும் தீர்ப்பு 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் மீதும் பிறப்பிக்கப்பட்டதாகும்.

22. மேல்முறையீட்டு விசாரணையின்போது 3 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்களின் தற்போதைய வேலை நிலவரங்களை நாங்கள் கேட்டோம். அதன்படி பெரம்பலூரில் உள்ள பெரம்பலூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சிறப்பு அரசு வழக்கறிஞருக்கு, 17.7.2010 தேதியிட்ட C.F3/7763/2007 கடிதம் எங்கள் முன் உள்ளது. அந்த தகவலின்படி, மூன்றாவது எதிர்மனுதாரரான திரு. ஜி. கஸ்தூரி காந்தி, (அப்போது முன்பு திருச்சி மாவட்டமாக இருந்த, பெரம்பலூர், படலூர் காவல் நிலைய ஆய்வாளராக இருந்தவர்) அந்தக் கடிதத் தேதி நிலவரப்படி திருச்சி நகரத்தின் காவல்துறை உதவி ஆணையராக, PEW பணியாற்றிக்கொண்டிருந்தார், ஐந்தாவது எதிர் மனுதாரர் திரு. சின்னதுரை முதல் நிலைக் காவலர் 331 / PLR(PC1311/TRI), முன்பு பெரம்லூர் மாவட்டம் குன்னம் காவல் நிலையத்தில் பணியாற்றினார், 16.9.2002 தேதியன்று பணியிலிருந்து அவருக்கு கட்டாயமாக ஓய்வு அளிக்கப்பட்டது, அவரது வீட்டு முகவரி ‘‘த/பெ பெருமாள், வல்லம் (அஞ்சல்), பொன்பரப்பி (வழி), உடையார்பாளையம், அரியலூர் மாவட்டம்.’’ ஆறாவது எதிர்மனுதாரர் குறித்து தரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு: ‘‘டி.ஆர். ரவி என்ற ரவிச்சந்திரன், காவல்துறை ஓட்டுநர், படலூர் காவல் நிலையம், பெரம்பலூர் மாவட்டம் (முன்னர் திருச்சி மாவட்டத்தில்) தற்போது சென்னை, அடையார், மருதம் வளாகம், போட் கிளப் சாலை, எண்.17ல் உள்ள குற்றப் புலனாய்வுத் துறை பாதுகாப்புப் பிரிவில், ரிசர்வ் துணை ஆய்வாளராக வேலை செய்கிறார்.’’ நான்காவது எதிர்மனுதாரர் குறித்த விவரங்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

23. மேற்கூறிய விவரங்களிலிருந்து, 5வது எதிர்மனுதாரரைத் தவிர, மற்ற 3,4,6 ஆகிய எதிர்மனுதாரர்கள் இப்போதும் பணியில் இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

24. கடவுள் தனது படைப்புகளை எவ்வித வேறுபாடும் இன்றிதான் படைத்தார். ஆனால், கடவுளின் அறிவார்ந்த படைப்பாகிய மனிதன் சாதி, இனம், மதம், பிரிவு, நம்பிக்கை, அரசியல் ஈடுபாடு உள்ளிட்டவற்றால் மனிதர்களிடையே பல்வேறு வேறுபாடுகளை ஏற்படுத்தியுள்ளான். அத்துடன் நிற்காமல், சமுதாயத்திற்கு ஒரு தீங்காகிய வகுப்புவாத பகைமை இளம் மனங்களில் ஊட்டப்பட்டிருக்கிறது. அது சுயநலமுள்ள பேராசைக்காரர்களால் பராமரிக்கப்பட்டு வளர்க்கப்படுகிறது. இந்த நாட்டின் மாபெரும் மனிதர்கள் சிறந்த அறிவுரைகளை சொல்லியிருக்கிறார்கள், தியாகம் செய்திருக்கிறார்கள் என்ற போதிலும் கூட இந்தத் தீங்கை சமுதாயத்திலிருந்து ஒழிப்பதற்கு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கூட, நிலைமையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டதாக தெரியவில்லை. நாள்தோறும் வகுப்புவாத பகைமை ஏதாவது ஒரு வடிவத்தில் புதிய உயரங்களைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் பாகுபாடுகளை உடைப்பதற்கான நேரம் இது. இல்லையேல் நமது எதிர்கால தலைமுறையினர் நம்மை மன்னிக்கமாட்டார்கள்.

25. வாய்மை வெல்ல வேண்டும். வாய்மை மட்டுமே வெல்ல வேண்டும்.

26. பாண்டியனின் மரணத்தில் காவல்துறைக் குழுவினர் சம்பந்தப்பட்டிருப்பதாலும், முந்தைய விசாரணை உண்மை நிலவரங்களை புறக்கணித்து தவறான முடிவின் அடிப்படையில் நடத்தப்பட்டதாலும், இந்த வழக்கை மத்திய புலனாய்வு நிறுவனத்திடம் (சிபிஐ) ஒப்படைப்பது பொருத்தமாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். பாண்டியன் மரணம் அடைந்து நீண்டகாலம் ஆகிவிட்ட போதிலும் கூட, (ஆதிதிராவிட பிரிவைச் சேர்ந்த ஒரு அப்பாவி, மேல் சாதியைச் சேர்ந்த புகார்தாரர் குழுவினரோடு இணைந்த காவல்துறை குழுவினரால் சாகடிக்கப்பட்டார் என்ற) அசாதாரணமான நிலைமையின்போது, ஒரு அசாதாரணமான நிவாரண நடவடிக்கை தேவைப்படுகிறது என்பதால், புலனாய்வுக் குழுவினர் இதர ஆதாரங்களை திரட்ட முடியும்.

27. ஆகவே, இந்த வழக்கில் புலனாய்வை மேற்கொள்கிற பணிக்கு திறமையும் நேர்மையும் அக்கறையும் உள்ள அதிகாரிகள் குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று சென்னை – 6, கல்லூரிச் சாலை, இ.வி.கே. சம்பத் பில்டிங், 3வது தளத்தில் உள்ள மத்திய புலனாய்வு நிறுவனத்தின் இணை இயக்குநர் மற்றும் மண்டல தலைவருக்கு ஆணையிடப்படுகிறது. புலனாய்வுக் குழு காவல்துறை கண்காணிப்பாளர் நிலைக்கு குறையாத ஒரு அதிகாரியால் தலைமை தாங்கப்பட வேண்டும்.

28. மூன்றாவது எதிர்மனுதாரர் தலைமையில் 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் சேர்ந்து, பாண்டியனின் கொலைக்கு பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று நாங்கள் கண்டறிந்திருப்பதால், இரண்டாவது எதிர்மனுதாரரான தமிழ்நாடு அரசு, மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.5, 00,000 (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்), இந்தத் தீர்ப்பின் நகல் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 6 வார காலத்திற்குள் வழங்க வேண்டும் என்று நாங்கள் ஆணையிடுகிறோம். அந்தத் தொகையை வழங்கிய பிறகு, இரண்டாவது எதிர்மனுதாரர் / தமிழ்நாடு அரசு ரூ. 2 லட்சத்தை மூன்றாவது எதிர்மனுதாரரிடமிருந்தும் தலைக்கு ரூ. 1 லட்சத்தை 4,6 ஆகிய எதிர்மனுதாரர்களிடமிருந்தும் வசூல் செய்து அரசுக் கருவூலத்திற்கு ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட ஆணையிடப்படுகிறது. ஐந்தாவது எதிர்மனுதாரரைப் பொறுத்தவரையில் அவர் தற்போது பணியில் இல்லை என்பதால், சட்டத்திற்கு ஏற்ற முறையில் அவரிடமிருந்து ரூ. ஒரு லட்சத்தை மீட்பதற்கு இரண்டாவது எதிர்மனுதாரராகிய தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**முடிவாக;–**

(i) இந்த ஆணை கோரும் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. ஒற்றை நீதிபதியின் ஆணை தள்ளுபடி செய்யப்படுகிறது.

(ii) கோட்டாட்சியர் அறிக்கை, 9.10.1998 தேதியிட்ட 13897/L&O-(A)/96-7 எண் கடிதத்தில் காவல்துறை தலைமை ஆய்வாளர் (குற்றவியல் பிரிவு) அளித்துள்ள, அரசாங்கத்தால் ஏற்கப்பட்ட, அறிக்கை மற்றும் முடிவுகள் பாண்டியன் மரணம் தொடர்பாக மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், அது 'தூக்கிட்டுத் தற்கொலை' எனக் கூறி கைவிடப்பட்டது ஆகிய அனைத்தும் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

(iii) முந்தைய ஒரே திருச்சி மாவட்டத்தில் இருந்த, (குன்னம் காவல் நிலையத்தின் குற்ற எண். 171/1995 தொடர்பான முழு வழக்கும், உண்மையான குற்றவாளிகளை முன்னிறுத்தும் வகையில் புதிய புலனாய்வு நடத்துவதற்காக மத்திய புலனாய்வு நிறுவனத்திடம் மாற்றப்படுகிறது. இதற்காக, சென்னை – 6, கல்லூரிச் சாலை, இ.வெ.கே. சம்பத் பில்டிங், மூன்றாவது தளத்தில் உள்ள மத்திய புலனாய்வு நிறுவன இணை இயக்குநர் மற்றும் மண்டல தலைவர் திறமையும் நேர்மையும் கடமையில் அக்கறையும் உள்ள அதிகாரிகள் குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது. காவல்துறை கண்காணிப்பாளர் நிலைக்குக் குறையாத ஒரு அதிகாரியின் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட வேண்டும். இந்தக் குழுவினர் தங்களது புலனாய்வை இந்தத் தீர்ப்பில் நகல் கிடைக்கப்பெற்ற 12 வார காலத்திற்குள் முடித்து இறுதி அறிக்கை / குற்றவாளிகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும். வழக்கு ஆவணங்கள் குன்னம் காவல் நிலையத்திலிருந்து சிபிஐக்கு சுமூகமான முறையில் மாற்றப்படுவதற்காக சம்பந்தப்பட்ட அனைவருக்கும் உரிய ஆணைகள் பிறப்பிக்குமாறு சென்னையில் உள்ள காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் இரண்டாவது மனுதாரருக்கு ஆணையிடப்படுகிறது.

(iv) இரண்டாவது எதிர்மனுதாரராகிய தமிழ்நாடு அரசு இந்தத் தீர்ப்பு கிடைக்கப் பெற்ற 6 வார காலத்திற்குள் மனுதாரருக்கு ரூ. 5,00,000 (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) இழப்பீடாக வழங்க வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது. இந்தத் தொகையை வழங்கிய பிறகு இரண்டாவது எதிர்மனுதாரர் / தமிழ்நாடு அரசு மூன்றாவது எதிர் மனுதாரரின் ஊதியத்திலிருந்து ரூ. 2 லட்சம், 4 மற்றும் 6 ஆகிய எதிர்மனுதாரர்களிடமிருந்து தலைக்கு ரூ. ஒரு லட்சம் மீட்டு அரசு கருவூலத்திற்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய வேண்டும். ஐந்தாவது எதிர்மனுதாரரைப் பொறுத்தவரையில், அவர் தற்போது பணியில் இல்லை என்ற நிலையில், சட்டத்திற்கு உட்பட்ட வகையில் ரூ. ஒரு லட்சம் தொகையை மீட்பதற்கு இரண்டாவது எதிர்மனுதாரர் / தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதைத் தொடர்ந்து, WAMP. எண். 3982 / 2003 முடிக்கப்படுகிறது. கட்டணம் இல்லை.

**Source: Current Writ Cases / August 01-15/2013**

# அரசியல் கட்சிகள் எதற்காக தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் வரவேண்டும்?

**– ஜெயன் பி.ஏ.**

இந்தியாவைப் போன்றதொரு துடிப்புள்ள ஜனநாயகத்தில், 2005ம் ஆண்டின் தகவல் உரிமைச் சட்டத்தின் (ஆர்டிஐ)[1] கீழ் அரசியல் கட்சிகளை கொண்டு வருவது தொடர்பாக தலைமை தகவல் ஆணையம் (சிஐசி) பிறப்பித்துள்ள ஆணை ஒரு சரியான நடவடிக்கையாகும். பொது மக்கள் பணத்தை ஏற்றுக்கொள்வது என்பது, இச்சட்டத்தின்கீழ் அரசியல் கட்சிகளை கொண்டுவருவதற்கான ஒரு வரைமுறையாகும். பல கட்சிகள் இந்த நடவடிக்கையை எதிர்த்துள்ளன. ஆனால், சமுதாயம் மேம்படுவதற்கான திசையில் இது ஒரு வரவேற்கத்தக்க நடவடிக்கையே ஆகும். சுமார் பத்தாண்டு காலமாக செயல்பட்டுக்கொண்டிருக்கிற சிஐசி எடுத்துள்ள ஒரு முக்கியத்துவம் வாய்ந்த முடிவு இது.

இதனால், அரசியல் கட்சிகள் எவ்வாறு நிதி பெறுகின்றன என்பதில் வெளிப்படைத்தன்மை ஏற்பட்டு விடுமா? நாடாளுமன்ற ஜனநாயகம் 60 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தைக் கடந்துள்ள நிலையில் இது நமது அரசியல் அமைப்பில் ஒரு மிகுந்த மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய அனுபவமாக அமையுமா? எதிர்ப்பார்க்கப்படுவதைப் போல இது பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கும் பொறுப்பை ஏற்படுத்துமா? சிஐசி கூறியுள்ளதைப் போல, இந்த சட்டப்பூர்வ ஆணைகளால் பொதுவாக அரசியல் கட்சிகளின் செயல்பாட்டில், குறிப்பாக அவற்றின் நிதி ஏற்பாடுகளில், ஒரு முற்போக்கான, உயர்ந்த வெளிப்படைத் தன்மையை சந்தேகத்திற்கிடமற்ற வகையில் இது வலியுறுத்துகிறதா? இக்கேள்விகளுக்கான பதில் தெளிவாக, உரக்க ஒலிக்கிறது: விரும்பத் தக்க ஒரு சீர்திருத்தத்திற்காக அரசியல் கட்சிகளை ஆர்டிஐ சட்டத்தின் கீழ் கொண்டு வருவது என்ற சிஐசி ஆணையால் நல்ல பலன் விளையும். இந்தியாவின் அரசியல் கட்சிகள் இந்தச் சட்டத்தின் கீழ் கேள்விக்கு உட்படுத்தப்படக் கூடியவையே. இந்தச் சட்டத்திற்கு அப்பாற்பட்டதாக கட்சிகளை வைத்துவிட முடியாது. சட்டத்தின் அறிமுகப் பத்தியில் பின்வருமாறு தெளிவான முறையில் அறிவிக்கப்பட்டுள்ளது: "... மத்திய தகவல் ஆணையம் மற்றும் மாநில தகவல் ஆணையங்களின் அமைப்புச் சட்டமானது, ஒவ்வொரு பொது அமைப்பின் செயல்பாட்டிலும் வெளிப்படைத் தன்மையையும் பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ள பொறுப்பையும் வளர்க்க வேண்டும் என்பதற்காக..." வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டுமென்றால் உள்கட்சி ஜனநாயகம் ஊன்றப்பட வேண்டும், வருமானம் மற்றும் செலவுகள் வெளிப்படையான முறையில் கணக்கு வைக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே சிஐசி ஆணையின் நோக்கங்களாகும்[2]. ஆர்டிஐ கேள்விகள் அனுப்பப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ், பாரதிய ஜனதா கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தேசியவாத காங்கிரஸ் கட்சி, பகுஜன் சமாஜ்கட்சி ஆகிய 6 கட்சிகள் இந்தச் சட்டத்தின் கீழ் பொது அமைப்புகள் என்ற வரையறைக்குள் வருகின்றன. இது தொடர்பான விசாரணையின்போது ஆர்டிஐ சட்டத்தின் கீழ் அரசியல் கட்சிகள் வருகின்றன என்ற வாதம் நியாயமானதுதான் என்பதை நிறுவுவதற்காக பின் வரும் மூன்று கருத்துகள் முன்வைக்கப்பட்டன: மத்திய அரசிடமிருந்து மறைமுகமாக கணிசமாக நிதி பெறுகின்றன, பொது செயல்பாடுகளில் ஈடுபடுகின்றன. பொதுக்கடமை நிறைவேற்றப்பட வேண்டும், அரசமைப்பு சாசன விதிகளும் சட்ட விதிகளும் அரசியல் கட்சிகளுக்கு உரிமைகளையும் பொறுப்புகளையும் அளித்துள்ளன. ஆணையத்தின் விசாரணை மன்றம் (பெஞ்ச்), "அரசியல் கட்சிகள், ஆர்டிஐ சட்டத்தின் பிரிவு 2 (h)ன் கீழ் பொது அமைப்புகளேயாகும்,"[3] என்று தெளிவாகக் கூறியுள்ளது. ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தலின்போது அரசியல் கட்சிகள் செலவு செய்யும் பணம் எங்கிருந்து வருகிறது என்பதை மக்கள் அறிந்தாக வேண்டும். அரசியல் கட்சிகளுக்கு யார் நிதி கொடுக்கிறார்கள், கட்சிகள் எவ்வாறு பணத்தை செலவிடுகின்றன, தேர்தலில் நிறுத்தப்படும் வேட்பாளர்களை அக்கட்சிகள் எவ்வாறு முடிவு செய்கின்றன என்று கேட்கப்படுமானால் அந்த விவரங்களை அரசியல் கட்சிகள் தெரிவித்தாக வேண்டும் என்று ஆணையம் உத்தரவிட்டுள்ளது. குடிமக்களிடையே தாக்கம் ஏற்படுத்தக் கூடியதாக உள்ள, பொதுப் பணம் எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதையும், பொது அமைப்புகள் தொடர்பான இதர விவரங்களையும் வெளிப்படையானதாக ஆக்குகிறது என்பதால், இந்த ஆணை மிகப் பொருத்தமானதாக வந்துள்ளது.

இதுகுறித்து ஆராய்வோமானால், பெரும்பாலான கட்சிகள் தங்களுக்கு கிடைக்கும் நிதிகளை 20,000 ரூபாய்க்குக் குறைவான தொகைகளில் பல அடுக்குகளாக பெறுகின்றன என்பது தெரியவரும்.[4] அரசியல் கட்சிகள் "பொது அமைப்புகள்" ஆகும், அவைகளுக்கு ஒரு "பொதுத்தன்மை" இருக்கிறது, "அவற்றிற்கு அரசாங்கத்திடமிருந்து கணிசமாக நிதி கிடைக்கிறது" என்று சிஐசி கூறியுள்ளது. பகுஜன் சமாஜ் கட்சி போன்ற கட்சிகள் இத்தகைய சிறிய நன்கொடைகளின் மூலமாகவே தங்களுக்கான பெரும்பாலான நிதி கிடைக்கிறது என்று ஏற்கெனவே அறிவித்துள்ளன. அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படும் வருமான வரி விலக்கு, அகில இந்திய வானொலியிலும் தூர்தர்ஷன் தொலைக்காட்சியிலும் கட்டணமின்றி தங்கள் பிரச்சாரத்தை செய்து கொள்வதற்கு நேரம் ஒதுக்கப்படுவது ஆகிய நடைமுறைகளும் கூட



https://www.google.co.in/search?q=political+parties+under+rti+images&client=firefox

அரசாங்கத்திடமிருந்து மறைமுகமாக நிதி பெறுவதே ஆகும் என்று சிஐசி விசாரணை மன்றம் கூறியுள்ளது. மேலும் அரசியல் கட்சிகள் "நேரடியாக அல்லது மறைமுகமாக குடிமக்களை குடிமக்களின் வாழ்க்கையில் ஏற்கத்தக்க அனைத்து வழிகளிலும் தாக்கம் செலுத்துகின்றன; பொதுக்கடமையை நிறைவேற்றுவதில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளன. ஆகவே, மக்களுக்கு அவை பதில் சொல்ல கடமைப்பட்டுள்ளதாக ஆகின்றன என்பது முக்கியமாகும்," என்றும் விசாரணை மன்றம் அறிவித்துள்ளது. எனவே, இபப்போது, அரசியல் கட்சிகள் தங்களுக்கு வந்த தன் விருப்ப நிதி உதவிகள் தொடர்பான விவரங்களை வெளியிட்டாக வேண்டும். அந்த 6 கட்சிகளும் இவ்வாறு செய்தாக வேண்டும். தங்களுக்கு நிதி வழங்கியவர்களின் பெயர்களையும் முகவரிகளையும் தாக்கல் செய்தாக வேண்டும். நாட்டின் அரசை அமைப்பதில் முக்கிய பங்காற்றுகிற அரசியல் கட்சிகள், அரசாங்கத்திடமிருந்து பல்வேறு ஆதாயங்களையும் வரிச் சலுகைகளையும் பெறுகிற நிலையில், நிச்சயமாக பொது அமைப்புகளாகவே கருதப்பட வேண்டும் என்பதிலும் ஆர்டிஐ சட்டத்தின் கீழ் அவை கொண்டுவரப்பட வேண்டும் என்பதிலும் சந்தேகம் இல்லை.

## குறிப்புகள்

1. தகவல் உரிமைச் சட்டம், 2005 நாடாளுமன்றத்தால் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டமாகும். இதற்கு 2005 ஜூன் 15 அன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைத்தது. மேலும் விவரங்களுக்கு 2013 ஜூன் 10 அன்று தொடர்பு ஏற்படுத்தப்பட்ட மத்திய தகவல் ஆணையத்தின் http://cic.gov.in/ என்ற வலைத் தளத்தைக் காணவும்.

2. தலைமை தகவல் ஆணையர் சத்யானந்தா மிஸ்ரா, தகவல் ஆணையர்கள் எம்.எல். சர்மா, அன்னபூர்ணா தீட்ஷித் ஆகியோர் கொண்ட தகவல் ஆணைய முழு அமர்வு மன்றம் ஆர்டிஐ கேள்விகள் அனுப்பப்பட்ட காங்கிரஸ், பா.ஜ.க., சிபிஎம், சிபிஐ, என்சிபி, பிஎஸ்பி ஆகிய 6 கட்சிகளும் இந்தச் சட்டத்தின் கீழ் பொது அமைப்புகள் என்ற வரையறைக்குள் வருகின்றன என்று தீர்ப்பளித்தது.

   "இதன் மூலம், இந்த கட்சிகளின் தலைவர்களும் பொதுச் செயலாளர்களும் தங்களது தலைமை அலுவலகங்களில் மத்திய பொது தகவல் அலுவலர்களையும் (சிபிஐஓ), உயர்நிலை அலுவலர்களையும் ஆறு வாரங்களுக்குள் நியமிக்க வேண்டும். இவ்வாறு நியமிக்கப்படும் சிபிஐஓக்கள் இந்த ஆணையின்படி வருகிற ஆர்டிஐ விண்ணப்பங்களுக்கு நான்கு வார காலத்தில் பதிலளிக்க வேண்டும்," என்று அந்த மன்றம் கூறியுள்ளது. ஆர்டிஐ சட்டத்தின்படி உள்ள தகவல் அறிவிப்பு விதிகளுக்கு அரசியல் கட்சிகள் உட்பட வேண்டும், அதன்கீழ் அந்த விவரங்களை தங்களது வலைத்தளங்களில் வெளியிட வேண்டும் என்றும் ஆணையம் கூறியுள்ளது. இந்த ஆறு கட்சிகளும் பெற்ற நிதி மற்றும் தன் விருப்ப நன்கொடைகள் தொடர்பான விவரங்களையும் நிதி வழங்கியவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளையும் பற்றிய தகவல்களைத் தெரிவிக்க வேண்டும் என்று ஜனநாயக சீர்திருத்த சங்கத்தைச் சேர்ந்த (ஏடீஆர்) சுபாஷ் அகர்வால், அனில் பயர்வால் ஆகியோர் கோரியிருந்தனர். தாங்கள் ஆர்டிஐ சட்டத்தின் கீழ் வரவில்லை என்பதால் இந்த விவரங்களைத் தருவதற்கில்லை என்று அக்கட்சிகள் மறுத்துவிட்டன. அந்த இதுபற்றிய தாக்கல் செய்த ஆர்டிஐ மனு தொடர்பாக சிஐசி தனது தீர்ப்பை 2013 ஜூன் 3 அன்று அறிவித்தது.

3. ஆர்டிஐ சட்டத்தின் இந்தப் பிரிவு கூறுவது வருமாறு: (h) "பொது அமைப்பு" என்பது

   (a) அரசமைப்பு சாசனத்தால் அல்லது அதன்கீழ்

   (b) நாடாளுமன்றத்தால் உருவாக்கப்படும் வேறு எந்த ஒரு சட்டத்தால்

   (c) மாநில சட்டமன்றத்தால் உருவாக்கப்படும் வேறு எந்த சட்டத்தால்

   (d) உரிய அரசாங்கத்தால் வெளியிடப்படும் அறிவிக்கையால் அல்லது ஆணையால் நிறுவப்படுகிற அல்லது அமைக்கப்படுகிற எந்த ஒரு அதிகார அமைப்பு அல்லது அமைப்பு அல்லது தன்னாட்சி நிறுவனம் என்று பொருள்படும். மேலும், இதில் பின்வருபவையும் அடங்கும்:

      (i) அரசாங்கத்திற்கு சொந்தமான, கட்டுப்பாட்டில் உள்ள அல்லது அதன் கணிசமான நிதி பெறுகிற அமைப்பு

      (ii) உரிய அரசாங்கத்தின் நேரடி அல்லது மறைமுக நிதியை கணிசமாகப் பெறுகிற அரசு சாரா அமைப்பு.

4. சிஐசி தனது ஆணையில் பின்வருமாறு மேலும் விளக்கம் அளித்துள்ளது: "... 'தில்லி நகரின் முக்கியமான பகுதிகளில் பெரும் பரப்புள்ள நிலங்கள் விசாரணைக்குரிய அரசியல் கட்சிகளுக்கு மிகக் குறைந்த விலையில் வழங்கப்பட்டுள்ளன என்பது தெரிகிறது. மேலும், அரசாங்கத்தின் பெரிய கட்டிடங்கள் மிகக் குறைந்த கட்டணங்களில் அரசியல் கட்சிகளுக்கு தரப்பட்டுள்ளன. ஆகவே, இக்கட்சிகளுக்கு நிதி ஆதாயங்கள் கிடைத்துள்ளன'..."

(கட்டுரையாளர் புதுதில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். தற்போது பெங்களூரு நகரில் உள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் (தன்னாட்சி) அரசியல் விஞ்ஞானம் மற்றும் சர்வதேச உறவுகள் குறித்து கற்பித்து வருகிறார். அவரது மின்னஞ்சல் முகவரி: jayanpa@gmail.com)

**ஆதாரம்: July 12-18, 2013 MAINSTREAM**

# சாதி, தலித்துகள், பெண்கள் - மாறி வரும் சமுதாய உறவுகளும் மாறாத வன்மமும்

– வ. கீதா

தலித், பழங்குடிப் பெண்கள் பற்றி பேச வேண்டும் என்று சொன்ன போது, அவர்கள் வாழ நேர்ந்துள்ள சூழல், அன்றாடம் சந்திக்கும் ஒடுக்குமுறை, வன்மம், வசவு ஆகியவற்றை பட்டியலிடுவதைக் கடந்து, ஒட்டு மொத்த சாதிய அமைப்புடனும் அந்த அமைப்பில் வேறு வேறு நிலைகளில் வைக்கப்பட்டுள்ள இதர சாதி பெண்கள், ஆண்கள் ஆகியவர்களின் நிலையுடனும் வாழ்க்கையுடனும் இவர்களது வாழ்க்கையை பொருத்திப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. காரணம், தலித்துகளை பற்றிப் பேசுகையில் அவர்களை தனி அலகாக பாவிக்கும் பழக்கத்தை நமது அரசுசார் சொல்லாடல்கள் பரவலாக்கிவிட்டன – என்னமோ அவர்களுக்கும் சாதியமைப்புக்கும் இருக்கும் தொடர்புகளை "வன்கொடுமை" அல்லது "வகுப்புரிமை" என்பனவற்றுக்குள் அடக்கிவிட முடிந்தாற் போல. மேலும் தலித்துகள் என்று சொன்னாலும் இன்ன சாதி என்று குறிப்பிட்ட சாதியை பற்றி பேசினாலும் ஒரு போதும் அந்த ஒரு சாதியை பற்றி மட்டுமே பேசி அதன் நிலையை உணர்த்தவோ உணரவோ முடியாது.

சாதி என்பது அடிப்படையில் ஒரு உறவு நிலையை குறிக்கும் சொல். சாதியமைப்பு என்பது அசமத்துவமான நீதியற்ற உறவுகளின் கட்டுமானம். எனவே தலித் பெண்களை மையமிட்டே நான் பேச விழைந்தாலும் சாதி அமைப்பு என்ற ஒன்றுடன் இணைத்துப் பேசுவதே பொருத்தமாகயிருக்கும்.

**தீண்டாமையும் வன்கொடுமையும்:**

சில ஆண்டுகளுக்கு முன் மதுரை ஐடியாஸ் அமைப்பின் சார்பாக இந்தியாவின் சில மாநிலங்களில் தலித் பெண்களின் நிலை குறித்த ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழகமும் அதில் அடங்கும். அந்த ஆய்வின் முடிவுகள் தனியொரு நூலாக அச்சாகியுள்ளது. தாம் சந்திக்கும் வழக்கமான வன்முறைகள் குறித்து அந்த பெண்கள் கூறிய தகவல்கள்தான் அந்த ஆய்வின் சிறப்புப் பகுதி. தாங்கள் வன்முறைக்கு ஆளாக்கப்படுவதற்கான காரணங்களை அவர்கள் பட்டியலிட்டதுடன், தங்களுக்கு நேர்ந்த கொடுமை அல்லது இழிவுக்கு எதிராக துணிந்து பேசி, செயல்பட்டதே இக்காரணங்களில் முதன்மையானது என்பதை சொல்லாமல் சொன்னார்கள். எந்த சூழ்நிலைமைகளில் அவர்களுக்கு எதிராக வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது என்பதை காண்போம்

–ஆண்களின் பாலியல் தொந்தரவை நிராகரிக்கும் பெண்களுக்கு எதிரான பழிவாங்கும் செயலாக பாலியல் வன்முறையில் இறங்குவது.

– எதிர்த்து பேசுதல், கேள்வி கேட்டல் அல்லது குரலை உயர்த்துதல் அல்லது தங்கள் உரிமைகளை நிலை நாட்டல் போன்றவைகளால் ஆதிக்க சாதி ஆண்களின் சாதிப் படிநிலையையோ அல்லது தலித் ஆணின் பால் படிநிலையையோ அவமதித்ததாக கருதப்படுதல்.

– தங்கள் மீதோ அல்லது தங்கள் குழந்தைகள், குடும்பத்தார் (அ) தலித் சமுதாயத்தார் மீது நிகழ்த்தப்படும் வன்முறையை கேள்வி கேட்கும் பெண்களுக்கான பதில்கூறும் விதமாக துன்புறுத்தல்.

– வன்முறையை எதிர்த்தல் (அ) ஒரு ஆணிடம் உறவு நிலைகளில் விசுவாசத்தை கோருதல் (அ) தன்னை கைவிட்டு விட்டு சென்ற ஆணை கேள்வி கேட்டல் ஆகியவைகளின் மூலம் உறவுகளில் தங்களின் சரிநிகர் சம உரிமைகளையும் மதிப்பையும் நிலை நாட்டும் பெண்கள் மீது வன்முறையை திணித்தல்.

– தன்னிடம் பாலியல் உறவு வைத்து கொண்ட பிறகு, வைத்திருந்த ஆண் தன்னை கைவிட்டதை கேள்வி கேட்ட பெண்களுக்கெதிராக செயல்படுதல்

தலித் பெண்கள் மட்டுமல்லாது தலித் ஆண்களும் வசவுக்கும் வன்முறைக்கும் ஆளாகிறார்கள். திருச்சியிலுள்ள சேசு சபையினர் தென் மாவட்டங்களில் குறிப்பிட்ட காலக்கட்டத்தில் – 1990களில் – தலித்துகள் ஏசப்பட்டது, தாக்கப்பட்டது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளை ஆராய்ந்து வெளியிட்ட அறிக்கையில் ஆண்களுக்கு நேரும் பிரத்யேக கொடுமைகள் அடையாளப்படுத்தப்பட்டன. தலித் ஆண்களை ஆண்மையற்றவர்களாக ஏசுவது, பெண்களுடன் உறவு வைத்துக் கொள்ள தகாதவர்களாக நையாண்டி செய்வது, தலித் பெண்களின் பிறப்புறுப்புகளை மிக மோசமான சொற்களால் விவரித்து, அப்படிப்பட்ட பெண்களுக்கு பிறந்தவர்களாக தலித் ஆண்களை ஏளனம் செய்வது என்பன போன்ற பலதரப்பட்ட நீச செயல்களை அந்த அறிக்கை பதிவு செய்தது. ஆதிக்க சாதி ஆண்களின் பாலியல் பயன்பாட்டுக்கு உரியவர்களாக தலித் பெண்களை சித்தரிப்பதும், அதனாலேயே அவர்களை அடக்கியொடுக்குவதும், தலித் பெண்களின் மதிப்பை காப்பாற்ற வக்கவற்றவர்களாகவும் வீரியம் குன்றியவர்களாகவும் தலித் ஆண்களை ஏசுவதும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்பது கண்கூடு. இத்தகைய ஏச்சும், பேச்சும் வன்முறையும் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளதற்கு சாதி இன்னும் உயிர் வாழ்கிறது என்னும் கசப்பான ஆனால் நிதர்சனமான உண்மைதான் காரணம். அந்த உண்மையின் பல்வேறுகூறுகளை

இவ்வாறு பிரித்துப் பார்த்து புரிந்து கொள்ளலாம். தலித்துகளில் கணிசமானவர்கள் இன்னமும் ஆதிக்க சாதியினரை பொருளாதாரரீதியாக சார்ந்திருப்பது அவர்கள் தொடர்ந்து துன்புறுத்தப்படுவதற்கு ஒரு முக்கிய காரணம். அவர்களது உழைப்பைச் சுரண்டி, அவர்களை நிரந்தர அடிமைத் தொழிலாளர்களாக வைத்திருக்க சாதி அமைப்பு கண்டுள்ள சாதனம் தீண்டாமையும் அதற்கு அடிப்படையாக உள்ள உரிமை மறுப்பும் தலித்துகளை மனிதர்களாக காண விழையாத பார்வையும்தான்.

இன்று தலித்துகளில் பலர் பொருளாதார சார்பு நிலையிலிருந்து மீண்டு சுயாதீனமாக வாழ்ந்தாலும், அதை ஏற்க மனம் ஒவ்வாத தீண்டாமையையும் வன்கொடுமைகளையும் தொடர்ந்து ஏவிவிடும் சாதிய மனப்பான்மையும் அவர்கள் சந்திக்கும் ஒடுக்குமுறைக்கு மற்றொரு முக்கிய காரணமாகிறது. கடந்த 10–15 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் நடைபெற்றுள்ள தலித்துகளுக்கு எதிரான வன்கொடுமைகள் இத்தகையனதான் என்று சொல்லலாம் – கொடியங்குளம் தொடங்கி அண்மையில் தருமபுரியில் நடந்த செயல்கள் வரை அனைத்துக்கும் தலித்துகளின் பொருளாதார சுதந்திரம், வளர்ச்சி ஆகியவற்றை சகிக்க மாட்டாத சாதிய வெறியும் வன்மமும் காரணம் எனலாம். இத்தகைய வெறி, வன்முறை ஆகியவற்றை அவர்களிலிருந்து பொருளாதார ரீதியில் பெரிதும் வேறுபடாத பிற்பட்ட சாதியினர் தான் எளிதில் கைக் கொள்கிறார்கள்.

வர்க்கரீதியாகவோ கலாச்சாரரீதியிலோ தலித்துகளிடமிருந்து வேறுபடாத இவர்களில் சிலர்தான் தம்மை "உயர்த்திக்" கொள்ள இத்தகைய செயல்களில் இறங்குகின்றனர். அவர்களது செயல்களுக்கு சாதிய சமுதாய உளவியல் ஒரு காரணமாகும் – பாபாசாகேப் அம்பேத்கர் சொன்னது போல, சாதிப்படிநிலை அமைப்பில் மேலே செல்லசெல்ல மதிப்பு கூடுகிறது; கீழே இறங்கி வரவர, அருவருப்பு அதிகரிக்கிறது. அதாவது இது மேல் கீழ் வரிசையில் அமைக்கப்பட்ட சமச்சீரற்ற அமைப்பு மட்டுமல்ல; பெருமை இகழ்ச்சி என்ற எதிர்வினைகளை அனுசரித்தே இவ்வமைப்பு தனது மேல்கீழ் வரிசையை இயக்குகிறது. இந்த சமுதாய அமைப்பின் பண்புகளை ஏற்று வாழ்பவர்களின் சுயமானது தமக்கு மேல்நிலையில் உள்ளவரை போற்றியும் தமக்குக் கீழ்நிலையில் இருப்பவரை தூற்றியுமே தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது. இதனால்தான் பெரியார் சுயமரியாதையின் இன்றியமையாமையை வலிறுத்தினார். மாகத்மா பூலே அனைவரும் உண்மை விரும்பிகளாக, பகுத்தறிவாளர்களாக சமத்துவத்தில் இணைய வேண்டும் என்றார், அம்பேத்கர் தொடர்ந்து தனது எழுத்துகளில் சகோதரத்துவத்தின் அவசியத்தை கவனப்படுத்தினார். இவர்கள் ஏதோ ஒடுக்கப்படும், வறிய சாதியினருக்கும் தீண்டத்தகாதவராக கருதப்பட்டவர்களை நோக்கி மட்டுமே இவ்வாறு பேசினர் என்ற கருத்து பரவலாக உள்ளது. ஆனால் உண்மையில் அவர்கள் ஒட்டுமொத்த சாதிய சமுதாயமும் மாற வேண்டும், இந்த சமுதாயத்தின் வரம்புகளை கடந்தும் அவற்றை உடைத்தும் புது மானுடம் ஆக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினர். எல்லோரையும் நோக்கியே சாதியத்தை பற்றிய தங்களது விமர்சனங்களை முன்வைத்தனர்.

இங்கு ஏன் இந்த கருத்தை சொல்ல வேண்டியிருக்கிறது என்றால், தலித்துகளின் உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் அல்லது தலித்துகளின் போராட்டங்களுக்கு ஆதரவும் வலுவும் சேர்க்கும் அரசியல் ஆதரவு எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு சாதி உளவியலையும் அதனை நியாயப்படுத்தும் பண்பாட்டையும் செயல்பாடுகளையும் விமர்சிப்பதும் அவற்றுக்கான மாற்றுகளை தேடுவதும் முக்கியமாகும். மேலும் சாதி உளவியல் என்பது உரிமை மறுப்பு செயல்களினூடாகவும் பொருளாதார முரண்பாடுகளினூடாகவும் வெளிபட்டாலும் அது அன்றாட வாழ்க்கையிலும் உறவுகளிலும்தான் தன்னை இடைவிடாது இனம்காட்டிக் கொள்கிறது. உணவு, உடை, பேச்சு, தொனி, தொடுதல், தொடமல் இருத்தல், காதல் செய்தல், நட்பு கொள்ளல், ஒதுக்கி வைத்தல் என்று எதை நாம் எடுத்துக் கொண்டாலும் சாதி உளவியலுக்கு அந்த செயல்பாட்டில் பங்கு இருக்கும். குறிப்பாக நாம் அந்நியோன்யமானதாகக் கொள்ளும் உறவுகளிலும் கூட அது ஊடாடுவதை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டியிருக்கிறது.

சாதி மனநிலை நிரந்தரமானது, அதைக் கடந்து மனிதர்களால் உறவு கொள்ள முடியாது என்பதில்லை நாம் சொல்ல வருவது. சாதி கடந்த காதல், நட்புறவுகள் வரலாறுதோறும் இருந்து வந்துள்ளன என்றபோதிலும் சாதிக் கட்டுமானத்தை கேள்வி கேட்டு, அசைத்துப்பார்த்த உறவுகளாக எல்லா உறவுகளும் இருந்ததாகச் சொல்ல முடியாது. சாதிகளுக்குள் கலப்பு ஏற்பட்டு கலந்த சாதிகள் தனி சாதிகளாக பரிணமித்துள்ளதையும் வரலாறு நமக்கு காட்டுகிறது – ஏன் மனுதர்மசாஸ்திரத்திலேயே இதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. யார் யாரோடு காதல் கொண்டு மணங்கொண்டு பிள்ளைகள் பெற்று, யாராக, அதாவது எந்த சாதியாக இருக்க முடியும் என்பதை நீண்டதொரு பட்டியலைக் கொண்டு அது விளக்குகிறது. இங்குமே ஒதுக்கப்பட்டவர்களாக விளங்கிய பஞ்சம சாதிகளுக்கும் பிற சாதியினருக்கும் இடையிலான உறவு என்பது பிரச்சனைக்குரியதாய் அனைத்து உறவுகளுக்கும் கீழ்ப்பட்டதாக பாவிக்கப்பட்டது. சாதி கடந்த உறவுகள் வித்தியாசமானதாக இருந்தாலும் அவை உள்ளவாறு இருக்க, தொடர, அவற்றை வளர்த்தெடுக்க உதவும் மாற்று பண்பாட்டுக் களமும் முன்மாதிரிகளும் இல்லாவிட்டால் அவை தொடர்ந்து இயங்க இயலாது என்பதையும் வரலாற்றிலிருந்து நம்மால் அறிய முடிகிறது. சாதி எதிர்ப்பு கருத்துநிலையும் இயக்கங்களும் தொடர்ந்து பொது வெளியில் செயல்படும் காலக்கட்டங்களில் இத்தகைய உறவுகள் செழிப்பதைக் காணலாம் – சுய–மரியாதை

இயக்கமும் பொதுவுடைமை இயக்கமும் விறுவிறுப்பாகவும் பல புள்ளிகளில் இணைந்தும் இயங்கிய காலக்கட்டங்களில் – 1930கள் தொடங்கி 1950கள் வரையிலான காலக்கட்டத்தில் – சமுதாய உறவுகளும் தனிமனித உறவுகளும் புதிய வார்ப்புகளைப் பெற்றன. புதிய வாழ்க்கை முறைகள் உருவாகின. இந்த காலத்தில் வாழ்ந்த திராவிடர் கழகத் தோழர்கள், பொதுவுடைமை இயக்கத் தோழர்கள் வாழ்ந்த வாழ்க்கையும் வளர்த்த பண்பாடும் இதற்கு சான்றாகும்.

சமுதாயம் தழுவிய இயக்கமாக இல்லாலிட்டாலும் குறிப்பிட்ட பகுதியில் முற்போக்கு இயக்கங்கள் செயல்படுகிற போதும் உறவுகள் மாறியமைய, வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்பட சாத்தியப்பாடுகள் உண்டு. இத்தகைய மாற்றங்கள் தலித்துகளுக்கும் பிற சமுதாயத்தினருக்கும் இடையிலான உறவுகளை எந்தளவுக்கு மாற்றின என்பதை நாம் சற்று நிதானமாக யோசித்தாக வேண்டும். தொழிற்சங்கத்தில், அரசியல் கட்சியில், படிப்பகத்தில், பொது மேடைகளில், நட்புறவுகளில் பேணப்பட்ட தோழமை வீடுகளுக்குள் கொண்டு செல்லப்பட்டதா, உணவு பரிமாற்றங்களுக்கு இட்டுச் சென்றதா, காதல், திருமண உறவுகளுக்கு வழி வகுத்துக் கொடுத்ததா, சாதி நீங்கிய சமுதாய வெளிகள் உருவாக காரணமாக இருந்ததா என்பன போன்ற கேள்விகளுக்கு பதில்கள் பெறுவதன் மூலமே இந்த கேள்விக்கான பதில்களும் அமையும்.

இத்தகைய கேள்விகளை குற்றச்சாட்டுகளாக கொள்ளாது நமது இடதுசாரி வரலாற்றை மதிப்பீடு செய்ய உதவும் அளவுக்கோல்களாகக் கொண்டு வரலாற்றை நாம் திரும்பி பார்க்கலாம் – எங்கு எது சாத்தியப்பட்டது, ஏன் ஒரு கட்டத்துக்கு மேல் சமூக மதிப்பீடுகளில், உளவியலில் மாற்றங்களை கொண்டு செல்ல முடியவில்லை, குடும்ப, திருமண விவகாரங்களில் எந்தளவுக்கு பொதுவுடைமை கட்சிகளால், மாதர் சங்கங்களால் தலையிட்டு செயல்பட முடிந்திருக்கிறது, பாலின சமத்துவம், பாலியல் விழைவு, பாலியல் தேர்வுகள், உறவுகள் என்பன போன்ற விஷயங்களில் பேணப்படும் மதிப்பீடுகள் எவ்வகையானவையாக உள்ளன என்றரீதியில் நாம் மேலும் சில கேள்விகளை கேட்க வேண்டிவரும். இது போன்ற விஷயங்களில் அக்கறையுடன் பேசியும் வினையாற்றியும் செயல்பட்ட சுய–மரியாதை இயக்கமும் திராவிடர் கழகமும் கூட ஒரு கட்டத்துக்கு மேல் உறவு தளங்களை அரசியல்படுத்துதைக் கைவிட்டன. கழகக் கூட்டங்களுக்கு பெண்கள் தொடர்ந்து வரவேண்டும், பங்கேற்க வேண்டும் என்று பெரியார் வற்புறுத்தினாலும் அப்படியே பெண்கள் வந்தாலும் எந்தளவுக்கு குடும்ப பண்பாடும் ஆண்–பெண் உறவுகளும் மாறியமைய இக்கூட்டங்கள் காரணங்களாக இருந்தன என்பதை யோசிக்க வேண்டியிருக்கிறது. சாதியின் இருப்புக்கு எதிராக பெரியாரும் பிறரும் பேசி வந்தாலும் அத்தகைய ஒழிப்பு வேலைகள் எங்கு, எவ்வாறு முன்னெடுக்கப்பட்டன, எங்கு உடைப்புகளை ஏற்படுத்தின, எங்கு பின்வாங்க வேண்டியிருந்தது என்றரீதியில் கடந்தகாலத்தை நாம் ஆராய வேண்டியுள்ளது. மாற்றங்களே ஏற்படவில்லை என்பதல்ல நமது வாதம். திராவிடர் கழக குடும்பங்கள் என்று வரையறுத்து சொல்லும் அளவுக்கு வித்தியாசமான குடும்பங்கள் இன்றுமே இருக்கதான் செய்கின்றன. இன்றுமே கூட சாதி கடந்த உறவுகளை, குறிப்பாக பாலுறவுகளையும் மணவுறவுகளையும் கட்டியமைப்பதில் பெரியாரின் சிந்தனையால் ஈர்க்கப்பட்டவர்கள் முன்னணியில் உள்ளனர். ஆனால், பிரச்சனை என்னவெனில், குடும்பம், சாதி, பண்பாடு என்று வரும் போது, தனிமனித அனுபவங்களை முன்வைத்துதான் நாம் பேச வேண்டியிருக்கிறது. இவை மட்டுமே நமக்கு எஞ்சியுள்ளன என்று கூட சொல்லலாம். இத்தகைய அனுபவங்களை பொதுமைப்படுத்த வல்ல கருத்துநிலைகளோ இயக்கமோ கட்டப்படவில்லை, உருவாகவில்லை என்பதை தான் இது காட்டுகிறது.

**சாதியும் தீண்டாமையும்:**

சாதியும் தீண்டாமையும் உறவு தளங்களில்தான் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன என்பார் வரலாற்றாசிரியர் உமா சக்கரவர்த்தி. இதன் நுணுக்கங்களை இனி காண்போம்.

1. சாதி சமுதாயத்தைப் பொறுத்தவரை திருமணம் என்பது பிறப்பு, குலம், வம்சம் முதலியனவற்றுடன் தொடர்புடைய விஷயமாகும். குறிப்பிட்ட வம்சத்தின், குலத்தின், சாதியின் பெருமையையும், அடையாளத்தையும், கலப்பற்ற பண்பையும் தொடர்ந்து நிலைநிறுத்தவும் குலமும் சாதியும் தழைக்கவுமே திருமணம் மேற்கொள்ளப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் சாதியமைப்பின் மேல்–கீழ் வரிசையையும், சாதிகளுக்கு இடையிலான சமச்சீரற்ற நிலையையும் திருமணம் என்ற பந்தம்தான் உத்திரவாதம் செய்கிறது.

2. இரண்டாவதாக, பெண்களின் பாலியல் தன்மை, ஆற்றல் முதலியனவற்றை பற்றி சாதி சமுதாயம் கொண்டுள்ள புரிதலானது, அகமண முறையை மட்டுமே முறையானதாக அடையாளப்படுத்துவதாய் அமைந்துள்ளது. சாதி சமுதாய நியாயங்களின்படி குறிப்பிட்ட சாதியின் சுத்தத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் பெண்கள்தான் பொறுப்பாளர்களாக கருதப்படுகின்றனர். அந்தந்த சாதியின் பெருமையை நிலைநிறுத்தும் பொறுப்பும் பெருமையும் அவர்களுடையதாக உள்ளதால், தமக்கு வாய்த்துள்ள கருவுறும் ஆற்றலை பேணிப் பாதுகாத்து தமது குலமும் கோத்திரமும் சாதியும் தழைக்க அவர்கள் அதைப் பயன்படுத்த வேண்டியவராகி விடுகிறார்கள். இவ்வகையில், அகமணமுறைக்கும் பெண்களது சாதி (சமூக), பாலியல் கடமைகளுக்கும் நெருங்கிய தொடர்பு கற்பிக்கப்பட்டுள்ளது. பெண்கள் இக்கடமைகளை ஆற்றாமல் போனால் அகமணமுறை நிலைபெறாமல் போய்விடும்; சாதிக் கட்டுப்பாடுகள் அற்றுப்போகும். சுத்தம்–அசுத்தம் என்ற பாகுபாடு இல்லாமல் போய்விடும்.

**3.** மூன்றாவதாக, அகமண முறையின் வரம்புகள் மீறப்படுவதை நிபந்தனைகளுடன் சாதி சமுதாயம் அனுமதிக்கிறது. ஆதிக்க சாதி ஆண்கள் அடிமை சாதி பெண்களுடன் உறவு கொள்வதையும் அவர்களை திருமணம் செய்து கொள்வதையும் மனுசாஸ்திரம் உட்பட ஏனைய நீதி நூல்களும் முறைகேடானவையாக கருதினாலும், இத்தகைய உறவுகளால் சமுதாயம் உருகுலைந்துவிடாது என்பதில் தெளிவாக இருந்தன. அடிமை சாதி ஒன்றின் ஆண், ஆதிக்க சாதி பெண்ணை காதல் செய்வதையும் மணம் முடிப்பதையும்தான் சாதி சமுதாயம் பெருங்குற்றமாகக் கருதியது. இவ்வாறு அத்துமீறி நடக்கும் பெண்ணுக்கும் ஆணுக்கும் மிக கடுமையான தண்டனைகள் அளிக்கப்பட்டன (அளிக்கப்பட்டு வருகின்றன). முக்கியமாக, ஆதிக்க சாதி பெண்கள் இவ்வாறு அத்துமீறிவிடக்கூடாது என்பதற்காக அவர்களது வாழ்க்கை பலவகைகளில் கட்டுப்படுத்தப்பட்டது – உடை, நடமாட்டம், காதல், நட்பு என்று பலநிலைகளில் அவர்கள் குடும்பத்தையும் குலத்தையும் சாதியையும் அனுசரித்து செயல்பட வேண்டியுள்ளது. அவர்களுடன் சம்பந்தப்பட்ட ஆண்கள், தந்தை, சகோதரர், தாய்மாமன், ஆகிய அனைவரும் பெண்களின் நடத்தைக்கு பொறுப்பாளர்களாக, காவலாளர்களாக ஆகிவிடுகின்றனர்.



https://www.google.co.in/search?q=images+atrocities+against+tribal+women+in+tamilnadu

**4.** ஆக, சாதியடையாளத்தை காப்பாற்ற, சாதிகளின் இருப்பை உத்திரவாதம் செய்ய, காதல், மண உறவுகள் கண்காணிக்கப்படுவது என்பது தவிர்க்கமுடியாததாகி விடுகிறது. மேற்சொன்ன கருத்துகளின் அடிப்படையிலும் அவற்றின் நீட்சியாகவும் நாம் மேலும் சில கருத்துகளை யோசிக்கலாம்.

**5.** காலந்தோறும், பொது வாழ்க்கையும் வெளியும் பல மாற்றங்களை கண்டுள்ள போதிலும் திருமண, குடும்ப விஷயங்களில், இன்னும் சொல்லப் போனால், இவற்றினூடாக, சாதி சமுதாயமானது தனது தர்க்க நியாயங்களை தொடர்ந்து பராமரித்து வந்துள்ளதை காண முடிகிறது. உதாரணத்துக்கு, எல்லா சாதிகளும் தங்களுடைய மரபான சாதித் தொழிலை இன்று செய்வதில்லை. பொது விவகாரங்களில் ஏறக்குறைய அனைத்து சாதிகளும் பங்கேற்கலாம் என்பதை கருத்தளவிலேனும் நாம் ஏற்று கொண்டுள்ளோம். ஆனால் திருமணம் என்பதைப் பொறுத்தவரை, இன்றும் கூட, சாதி அடையாளம் என்பது மட்டுமே மணவாழ்க்கையை தீர்மானிப்பதாக உள்ளது.

**6.** அந்தந்த சாதிக்குள் மட்டுமே, அந்தந்த சாதியினரது திருமண உறவுகள் கட்டியமைக்கப்படுவதால், குறிப்பிட்ட சாதிக்குரிய அதிகாரத்தையும் செல்வாக்கையும், அல்லது வறுமையையும், உழைப்பையும் தான் அச்சாதியில் பிறக்கும் குழந்தைகள் சுவீகரிக்கின்றன. சாதி சமுதாயத்தின் மறு உற்பத்தி முறைதான் அச்சமுதாயத்தின் உற்பத்தி உறவுகளை மறுஉற்பத்திச் செய்கின்றன என்றுகூட நாம் வாதிடலாம்.

**7.** எனவே, சமுதாயத்திலுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும், சாதி படிநிலை வரிசையும், அவ்வரிசைக்கு ஏற்ற சாதிய அருமைபெருமைகளும், இழிவுகளும் அகமணமுறையினூடாகவே நிலைநிறுத்தப்படுகின்றன என்று நம்மால் அறுதியிட்டுச் சொல்ல முடியும். இதனால்தான் நாசூக்காக ஆங்கிலம் பேசி, ஐ.டி தொழில் புரிவோரும் நாகரிகமாக வாழ்வோரும் கூட தங்களுடைய சாதியைக் குறிப்பிட்டு திருமண விளம்பரங்களை வெளியிடுகின்றனர். வெளிநாட்டுக்குச் சென்று மேற்கத்திய வாழ்க்கை முறைகளை ஏற்று வாழ்வோரும் கூட திருமணம் என்று வரும் போது, சாதிக்குள் தான் பெண் எடுக்கின்றனர், அல்லது மாப்பிள்ளையைத் தேடுகின்றனர்.

### சாதி அமைப்பும் பெண்களும்:

சாதி அமைப்பின் இருப்புக்கும் பெண்களின் இருப்புக்கும் இடையிலான உறவு சம்பந்தப்பட்ட ஒரு செயல்போக்கை இனி ஆராய்வோம்.

அன்றாட வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றுவதில் பெண்களுக்கு முக்கிய பங்குள்ளதால், அவர்களுடைய உழைப்பும் செயல்களும் சாதியடையாளங்களை காப்பவையாக அமைந்து விடுகின்றன. உதாரணத்துக்கு, உணவு தொடர்பான விஷயங்களில் முடிவெடுப்பவர்கள் பெண்களாகவே இருக்கிறார்கள். எதை ஒருவர் சாப்பிடலாம், எதை சாப்பிட்டால் தீட்டுப்பட்டுவிடும், வீட்டிலுள்ளோர் பயன்படுத்தும் டம்ப்ளர்களில் யாருக்கெல்லாம் தண்ணீர் கொடுக்கலாம், யாருக்குக் கூடாது என்பன போன்ற முடிவுகளை எடுப்பவர்கள் பெண்கள்தான். அது போல, யாரை வீட்டுக்குள் கூட்டி வரலாம், யாரை கூட்டி வரக் கூடாது என்பதையும் அவர்கள்தான் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கின்றனர். மேலும் குறிப்பிட்ட குடும்பத்துக்குரிய, சாதிக்குரிய சடங்குகளை, சாங்கியங்களை அவர்கள்தான் செய்கின்றனர். அடுத்தத் தலைமுறையினருக்கு இவற்றைப் பற்றிய அறிவை புகட்டுகின்றனர். இவ்வகையில் குறிப்பிட்ட சாதிக்குரிய வாழ்க்கைமுறைகளை அவர்களுடைய செயல்பாடுகள்தான் நிர்ணயிக்கின்றன. உணவு, சடங்கு என்று மட்டுமில்லாமல் குடும்பத்து ஆண்கள் சாதி பெருமை பேசவும், அப்பெருமையை முன்னிட்டு சண்டை சச்சரவுகளில் இறங்கவும் பெண்கள் காரணங்களாக, தூண்டுதல்களாக அமைந்து விடுவதையும் காணலாம்.

பெண்கள் உணர்வுபூர்வமாக, வேண்டுமன்றே இதைச் செய்ய வேண்டிய தேவையில்லை. சாதி சமுதாயத்தில் பெண்களின் மானம், கற்பு ஆகியனவற்றைக் கொண்டே குறிப்பிட்ட சாதியின் கௌரவமும், மரியாதையும் தீர்மானிக்கப்படுவதால் இந்த மானமும், கற்பும் ஆண்களுடைய தனிச்சிறப்பான கவனிப்புக்கு ஆளாகின்றன. தம்முடைய மானம் மரியாதைதான் சாதிக்குப் பெருமை சேர்க்கின்றன என்பதை பெண்களுமே ஏற்றுக் கொள்வதால், அவற்றை காப்பதற்கு ஆண்கள் மேற்கொள்ளும் செயல்பாடுகளை பெண்களுமே அங்கீகரிக்கின்றனர். இவ்வாறாக, தமது சாதி ஆண்கள் தொடர்ந்து மேலாண்மை செலுத்த வேண்டும் என்பதை அவர்களும் விரும்புகின்றனர். இன்னும் சொல்லப் போனால் தாம் சார்ந்திருக்கும் சாதியின் பெருமையை, ஆதிக்கத்தை நிலைநிறுத்த, பிற கீழ் சாதி ஆண்களையும் அவர்களது குடும்பங்களையும் அடித்து நொறுக்க தமது சாதி ஆண்களை பெண்கள் தூண்டிவிட்ட சம்பவங்களும் உண்டு.

பொருளாதார, சமுதாய உறவுகளிலுள்ள முரண்பாடுகள் பெண்களின் மானம், மரியாதை தொடர்பான சொல்லாடல்களின் ஊடாக சலித்தெடுக்கப்பட்டு சாதிப் பிரச்சனையாக அவதாரம் எடுக்கிறது. சாதி சமுதாயத்தில் மானம் என்பது ஒருவருக்குள்ள சுயமரியாதை, சுயநம்பிக்கை தொடர்பானதல்ல. மாறாக, நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல, ஒருவருக்கு பிறர் காட்டும் மரியாதையும், அவர் மீது பிறர் கொண்டுள்ள பயபக்தியும்தான் ஒருவரது தன்மானத்துக்கான உள்ளீட்டை வழங்குகின்றன. வேறெந்த வகையிலும் ஆதிக்கம் செலுத்த முடியாவிடினும், அதாவது, பொருளாதார ரீதியாகவோ, அதிகாரத்தை முன்வைத்தோ ஒருவரால் ஆதிக்கம் செலுத்தமுடியாவிடினும், மானத்தின் பொருட்டு ஒருவர் மேற்கொள்ளும் செயல்பாடுகள் அவருக்குப் பெருமை சேர்ப்பனவாய் அமைந்துவிடுகின்றன.

இந்த மானம் என்பது பெண்களின் நடத்தையை பொறுத்துள்ளதால், இந்நடத்தையில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது அதனை பாதிப்பதாக அறியப்படுவன ஆகியன, குறிப்பிட்ட சாதியின் அந்தஸ்தை, ஏன் இருப்பை சோதிப்பதாகக் கொள்ளப்படுகின்றன. இதனால்தான் பெண்கள் காதலிப்பதையும், காதல் திருமணம் செய்துகொள்வதையும் சாதி சமுதாயம் விரும்புவதில்லை. பெண்கள் தம்சாதி ஆண்களை தேர்ந்தெடுக்காமல் பிறசாதி ஆண்களை தேர்ந்தெடுத்து விட்டால் அவர்கள் சார்ந்திருக்கும் சாதிக்கு களங்கம் ஏற்பட்டுவிடும் என்று சாதி சமுதாயம் இன்றளவும் நம்புகிறது. அதுவும், உயர் சாதிப் பெண்கள் அவர்களுக்கு சாதி அந்தஸ்தில் குறைவான ஆண்களுடன் இணையக் கூடாது என்பதில் சாதி சமுதாயம் மிக கவனமாக உள்ளதுடன், அவ்வாறு இணைய நினைப்போரை மிக குரூரமான தண்டனைக்கு ஆட்படுத்துகிறது.

**தமிழகத்தில் சமுதாய உறவுகள்:**

இனி இன்றைய சூழலுக்கு, குறிப்பாக தமிழகத்தில் இன்றுள்ள சமுதாய உறவுகளுடன் இதுவரை பேசியவற்றை சற்று பொருத்திப் பார்ப்போம். இந்தியாவின் இதர பகுதிகளில் உள்ளது போல இங்கும் சாதியமைப்பு சில முக்கிய மாற்றங்களைக் கண்டுள்ளது. நிலச் சீர்த்திருத்தங்கள், தொழில் வளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், நகரமயமாக்கம் முதலியன சாதியமைப்பில் சில சலனங்களை ஏற்படுத்தியுள்ளன. சொற்ப நிலம் மட்டுமே வைத்திருந்த அல்லது குத்தகைக்காரர்களாக இருந்த குடியானவ சாதிகளை சேர்ந்த பலர் ஒப்பீட்டளவில் கூடுதலான நிலங்களை கைக்கொண்டுள்ளனர். இச்சாதியினர் எண்ணிக்கையில் அதிகமானவர்களாக உள்ள இடங்களில் இவர்களது அரசியல் செல்வாக்கும் கூடியுள்ளது. சனநாயக அரசியலுக்கு எண்ணிக்கை என்பது முக்கியமாதலால் இது சாத்தியப்பட்டுள்ளது. குடியானவ சாதிகளுக்கு இன்று விவசாயம் மட்டுமே தொழிலில்லை. விவசாய நிலங்களை விற்று பொருளாக்குவது, அரசு ஒப்பந்ததாரராக பணியாற்றுவது. புதுவிதமான தொழில்களில், உதாரணத்துக்கு கிரானைட் உற்பத்தி போன்ற தொழில்களில் முதலீடு செய்வது, ஊடகங்களில் முதலீடு செய்வது என்பன போன்றவற்றையும் இச்சாதிகளை சேர்ந்தவர்களில் சிலர் செய்து வருகின்றனர். மேலும், வகுப்புரிமை வழங்கியுள்ள வாய்ப்புகளை பயன்படுத்தி இச்சாதிகளை சார்ந்தவர்கள் கல்வியில் முன்னேறியுள்ளனர்.

அரசுப் பணிகளில் கணிசமான அளவுக்கு இடம் பெற்றுள்ளனர். இவர்களில், நகரங்களுக்கு குடிபெயர்ந்து தனியார் துறையில் பொருள் ஈட்டியவர்கள் மத்தியதர வர்க்கத்தினராக உயர்ந்துள்ளனர். தமிழ்நாட்டைப் பொருத்தவரை இவ்வாறு "முன்னேற்றம்" கண்டுள்ள சாதிகளின் பட்டியலை நாமாகவே போட்டுக் கொள்ளலாம். இவர்களில் பலர் பிற்பட்ட சாதியினராக, அல்லது இடைநிலை சாதியினராக இருப்பார்கள். அதே சமயம் அண்மைக் காலங்களில் விவசாயம் கண்டுள்ள பின்னடைவு என்பதும் இந்த சாதிகளை பாதித்துள்ளது – பிற மாநிலங்களில் நடந்துள்ளது போன்ற தற்கொலைகள் இங்கு அதிக எண்ணிக்கையில் நடைபெறவில்லை என்ற போதிலும் விவசாய சமுதாயம் ஒரு நிர்பந்தத்துக்கு ஆளாகியிருப்பதை மறுக்க முடியாது. இந்த மாற்றத்தை அவரவரது வரலாற்றுக்கும் அவர்கள் வாழும் சூழலுக்கு ஏற்பவும் எதிர்கொண்டுள்ளனர்.

கொங்கு நாட்டை எடுத்துக் கொண்டால் இங்குள்ள முக்கியமான விவசாய சாதியினரான கொங்கு வெள்ளாளர்கள் தொழிற்துறையில் கால்பதித்து தமது சமுதாய மேலாண்மையை உறுதி செய்துள்ளனர். அவ்வாறு செய்யாது விவசாயிகளாகவே இருப்பவர்கள் அவ்வளவு வளமாக வாழ முடியவில்லைதான்.

எது எப்படியானாலும், பிற்பட்ட, இடைநிலை சாதியினர் அரசியல் தளத்தில் தீர்மானகரமான பங்கை வகிக்கின்றனர் என்பதை நாம் மறுக்க முடியாது. அவர்கள் தமது அடையாளங்களை முன்னிறுத்தும் அரசியல் அமைப்புகளை தொடங்கியுள்ளனர் என்பது ஒருபுறமிருக்க எல்லா அரசியல் கட்சிகளிலும் அவர்களுக்கான இடமும் செல்வாக்கும் இருக்கதான் செய்கிறது. மறுபுறமோ, சமூகரீதியில் பார்ப்பனர்களுக்கும் பிற உயர் சாதியினருக்கும் கீழ்ப்பட்டவராகவே இவர்கள் அறியபடுகின்றனர் என்பதும் நிதர்சனம். காலங்காலமாக உயர் சாதியினர் அனுபவித்து வந்துள்ள மேலாதிக்கத்தில் இவர்களுக்கு ஒரு சிறு பங்கு பிட்டு அளிக்கப்பட்டுள்ள போதிலும், சொத்தும் கல்வியும் பண்பாட்டு ஆதாரங்களும் பெற்றுத் தந்துள்ள மேலாண்மையினாலும் இந்த "உயர்" சாதியினர் தொடர்ந்து ஆதிக்க நிலையில் உள்ளனர்.

காலத்துக்கு ஏற்ற வகையில் இந்த ஆதிக்கத்தை புதுப்பித்துக் கொண்டும் வந்துள்ளனர். எனவே இடைநிலை சாதியினர் என்னதான் அரசியல் செல்வாக்கு பெற்றுள்ள போதிலும், இவர்களுக்கும் உயர் சாதியினருக்கும் இடையிலான இடைவெளி பெரியளவுக்கு குறைந்தபாடில்லை என்பதுதான் கசப்பான உண்மை. எனவேதான் இவர்கள் தங்களது சாதியின் அருமை பெருமைகளை பீற்றிக் கொள்ளும் முகமாக தலித்துகளை ஒடுக்கப் பார்க்கின்றனர், பெண்களை இழிவாக நடத்துகின்றனர். இச்சமுதாயங்களைச் சேர்ந்த பெண்களும் சாதி நியாயங்களுக்கு கட்டுப்பட்டு வாழ்வதை ஏற்கின்றனர் – இது குறித்து பிறகு பார்ப்போம். தலித்துகளின் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் வேறுமாதிரியானவையாக உள்ளன. அவர்களில் ஒருசிலர் படித்து அரசியலில் முன்னேறியுள்ளனர். சிலர், வெகு சிலர், ஓரளவுக்கு வசதியாக வாழ்ந்து வரும் சூழலும் ஏற்பட்டுள்ளது. என்றபோதிலும் பெரும்பான்மை தலித்துகள் நிலமற்ற விவசாய தொழிலாளிகளாக, துப்புரவு தொழிலாளிகளாக, பிறர் செய்ய விரும்பாத, உடலுக்கும் உயிருக்கும் கேடு விளைவிக்கக்கூடிய தொழில்களைச் செய்பவராகவே இருந்து வருகின்றனர். அதே சமயம், அரசியல்ரீதியாக தலித்துகளின் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

தலித் கட்சிகளின் தோற்றம், வளர்ச்சி, சாதி ஒடுக்குமுறைக்குரிய தனிப்பண்புகளை மக்கள் இயக்கங்கள், குறிப்பாக இடதுசாரி இயக்கங்கள், அங்கீகரித்து தலித்துகளின் அரசியல் நிலைபாட்டில் உள்ள நியாயங்களை ஓரளவுக்கேனும் ஏற்றுள்ளமை, பண்பாட்டுத் தளத்தில் தலித்துகள் ஏற்படுத்தியுள்ள மாபெரும் சலனங்கள், புகுத்தியுள்ள மாற்றங்கள், பெண்ணிய சிந்தனைக்கும் அமைப்புகளுக்கும் தலித் பெண்களின் அரசியல் சீற்றம் விடுத்துள்ள சவால்கள் ஆகியன அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள மிக முக்கியமான மாற்றங்களுள் அடங்கும்.

**பெண்களும் சாதி அடையாளமும்:**

பெண்களைப் பொருத்தமட்டில் சாதி அடையாளம் என்பது முரண்பட்ட வகையில் செயல்பட்டு வந்துள்ளது. உயர் சாதிப் பெண்களின் தூய்மை, கற்பு ஆகியவற்றை முன்னிட்டு அவர்களது செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் பழக்க வழக்கங்களுக்கு பெயரளவில் வக்காலத்து வாங்குபவர்கள் உள்ள போதிலும், இப்பெண்களில் பலர் படிக்கவும் வேலைக்குப் போகவும் முன்போல இவை முட்டுக்கட்டைகளாக இல்லை. "உயர்" வகுப்புப் பெண்களில் பலர் தங்களது சாதி அடையாளத்தை பண்பாட்டு அடையாளமாக உருமாற்றி அந்த பண்பாட்டின் பெயரில் தங்களது ஆதிக்கத்தையும் "மேன்மை"யையும் நிலைநிறுத்திக் கொள்ள முயற்சி செய்து வருகின்றனர்.

சமூக ரீதியாகவும் இப்பெண்கள் முதலிடத்தில் இருப்பதால், பிறசாதிப் பெண்களுடன் மட்டுமில்லாமல், பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஆண்களுடன் ஒப்பிடுகையிலும் கூட முன்னேற்றமடைந்தவர்களாக உள்ளனர். உயர் சாதிப் பெண்கள் சாதி அமைப்பு தொடர்ந்து நீடிக்க பங்காற்றுகிறார்கள் என்றுகூட சொல்லலாம். அதே சமயம் இவர்களது வாழ்க்கை திருமணம், மகப்பேறு என்று பெண்களுக்கு விதிக்கப்பட்ட கடமைகளின் வரம்புகளை எல்லா நேரங்களிலும் கடப்பதில்லை. பாலியல் வன்முறையையும் குடும்பத்தில் இரண்டாம் நிலையையும் இந்த பெண்களுமே அனுபவிக்கின்றனர். "உயர்" சாதி பெண்களை ஒரு காலத்தில் கட்டுபடுத்திய கட்டுபாடுகள் இன்று முன்னேறவும் சுதந்திரமாக செயல்படவும் விரும்பும் பிற்பட்ட சாதி பெண்களின் மீது சுமத்தப்படுவதை நமது மெகா சீரியல்களை தொடர்ந்து பார்த்து வருவபவர்கள் அறிவார்கள். போதாதாற்கு அவர்களுக்கு அறிவு புகட்ட, ஆலோசனை வழங்க முன்வரும் அவர்கள் சாதிகளை சார்ந்த ஆண்களுக்கும் இங்கு குறைவில்லை. அவர்கள் எப்படி யாரை காதலிக்க வேண்டும், யாரிடம் கவனமாக இருக்க வேண்டும், யாரிடம் ஏமாறாமல் இருக்க வேண்டும், யாரை எப்போது யார் சம்மதத்துடன் திருமணம் செய்து கொள்ள வேண்டும், என்ற ரீதியில் அவர்களுக்கு நித்தமும் போதனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பல பெண்களுக்கு இப்படி வாழ்வதும் பண்பாட்டுச் சின்னங்களை ஏற்று அவற்றை பாதுகாப்பதும் பெருமிதம் அளிக்கக்கூடியதாக இருக்கிறது. இப்படி வாழ விரும்பாது வேறு விதமாக வாழ விரும்பும் பெண்கள் பலருக்கு, காதல் மட்டுமே அவர்களை சுயாதீனமாக செயல்பட வைக்கக்கூடிய ஆற்றலாக புலப்படுகிறது – இதனாலேயே காதல், காதல்சார் பிரச்சனைகள் மரணங்கள் கூடியவண்ணம் உள்ளன என்று நினைக்க தோன்றுகிறது. மறு புறமோ அவர்கள் திருமணத்துக்கென பொருள் சேர்க்க வேலைக்குச் செல்லும் அவலமும் இங்குண்டு – சுமங்கலி திட்டம் நாம் எல்லோரும் அறிந்ததுதானே. தலித் பெண்களை பொருத்தவரை அவர்கள் எல்லா விதங்களிலும் ஒடுக்கப்படுகிறார்கள். ஆதிக்க

சாதியினரின் சாதி வெறிக்குக் கட்டுப்பட்டு அவர்கள் வாழ வேண்டியுள்ளது. உழைக்கும் பெண்கள் என்ற வகையில் நிலவுடைமையாளர்களின், முதலாளிகளின் சுரண்டலுக்கும் அடக்கு முறைக்கும் இவர்கள் ஆளாகிறார்கள். முடிவாக எல்லா ஆண்களின் அதிகாரமும், ஏன் அவர்களது குடும்பங்களிலுள்ள ஆண்களின் அதிகாரமும்கூட, இவர்களின் மீது செலுத்தப் படுகிறது. ஆனாலும் தாம் வாழ நேர்ந்துள்ள சூழலை எதிர்க்க, எதிர்கொள்ள அவர்கள் தயங்குவதில்லை. இதை நாம் இந்த கட்டுரையின் தொடக்கத்திலேயே பதிவு செய்துள்ளோம். பொருளாதாரரீதியாகவும் சரி, சமுதாயரீதியாகவும் சரி, தலித் பெண்கள் பேணும் ஒப்பீட்டளவிலான சுதந்திரமும் அவர்கள் தமக்குள் ஏற்படுத்திக்கொள்ளும் உழைப்பு சார், தாய்மைசார் தோழமைகளும் அவர்களை பிற பெண்களிடமிருந்து வேறுபடச் செய்கின்றன.

கூட்டாக வேலைக்குச் செல்வது, கூட்டாக குடும்ப பராமரிப்பு பணிகளை மேற்காள்வது, என்னதான் அவர்களைச் சார்ந்து வாழும் ஆண்கள் அவர்களை ஏசினாலும், அவர்களுக்கு ஒன்று என்றால் அவர்கள் பக்கம் நின்று இந்த சாதி சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளை சாடுவது – மரபாக பெண்களுக்கு வகுக்கப்பட்டுள்ள பாத்திரங்களிலிருந்தும் நியதிகளிலிருந்தும் தலித் பெண்கள் எந்தெந்த வகைகளில் விடுபட்டு வாழ்கிறார்கள் என்பதை இம்மாதிரியான அனுபவங்களினூடாக அறிய முடிகிறது. எல்லா தலித் பெண்களும் இப்படிதான் வாழ்கிறார்கள் என்று சொல்ல முடியாதுதான். என்றாலும் அவர்களது வாழ்க்கை சூழ்நிலைமைகள் அவர்களில் பலரை இப்படி வாழ வைக்கின்றன, அந்த சூழலை அவர்கள் எதிர்கொள்ள, சமாளித்து வாழ இப்படிப்பட்ட ஏற்பாடுகளை அவர்கள் மேற்கொண்டுள்ளனர் என்பதை நம்மால் அவதானிக்க முடிகிறது.

தலித் பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகளை நாம் குறைவாக மதிப்பிட்டுள்ளதாக நினைத்து விடக்கூடாது – அவற்றுக்கிடையே அவர்கள் தேடும் மாண்பையும் உறவுகளையுமே சுட்டிக் காட்டியுள்ளோம். மற்றபடிக்கு அவர்களை துரத்தும் வன்முறையும் அவமதிப்பும் நீடிப்பதுடன், வறுமையும் இடப்பெயர்வும், நகர வாழ்க்கையும் அவர்களுக்கு புதிய சவால்களை விடுத்துள்ளன. பாலியல் அச்சுறுத்தல், வன்முறை, நிரந்தர வேலையின்மை, வாழ இடமின்மை, பாலியல் தொழிலுக்கு ஆட்பட வேண்டிய நிர்பந்தச் சூழல் என்று இச்சவால்களை அடுக்கிக் கொண்டே போகலாம். மேலும் அவர்களை அடிமைப் படுத்தும் பழைய பழக்கவழக்கங்களும் தொடர்கின்றன – உதாரணத்துக்கு, அவர்களை கடவுளருக்கு நேர்ந்துவிட்டு பாலியல் பயன்பாட்டுக்கென அவர்கள் சாதியை சேர்ந்தவரும், ஆதிக்க சாதியினரும் அவர்களை ஆட்கொள்ளல் என்பன போன்ற செயல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அவர்களை மணம் புரிவதாகச் சொல்லி, ஏமாற்றி விட்டுச் செல்லும் ஆண்டைசாதி ஆண்களுக்கும் பஞ்சமில்லை. அப்படியே அவர்கள் மணம் புரிந்து கொண்டாலும், புகுந்த வீட்டுக்கு சென்ற பிறகு எல்லா பெண்களையும் போல இவர்களுமே கொடுமைகளுக்கு ஆளாவதுடன், இவர்களது சாதியின் காரணமாக கொலையும் செய்யப்படுகின்றனர். எல்லாருக்கும் இப்படி நேர்வதில்லை என்றாலும், இப்படி நடந்த சம்பவங்களை தக்க ஆதாரங்களுடன் நம்மால் பட்டியலிட முடியம். அரசின் பார்வையில் அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டியவர்களாக கருதப்பட்டாலும், குறைந்தபட்ச மதிப்பையோ மரியாதையையோகூட உள்ளூர்மட்ட அதிகாரிகள் அவர்களுக்குத் தருவதில்லை. தலித் பஞ்சாயத்து தலைவர்கள் சந்தித்து வரும் பிரச்சனைகளே இதற்கு சிறந்த சான்றுகளாகும். அது போல, தலித் பெண்கள் தொடுக்கும் புகார்கள், குறிப்பாக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவன பல சமயங்களில் அவர்களுக்கு எதிராக திருப்பி விடப்படுவதுடன், அவர்கள் மீது பிரத்யேக புகார்களும் ஜோடிக்கப்டுகின்றன. அவர்களை விசாரணைக்கென காவல் நிலையத்துக்கு வரச்சொல்லி, அடிப்பதும், மிரட்டுவதும், பாலியல் வன்முறையை ஏவிவிடுவதுமான செயற்பாடுகளுக்கு குறைவில்லை.

இன்று சாதியமைப்பின் சமமற்ற, நீதியற்ற உள்ளீட்டை பற்றி நிறையவே பேசுகிறோம். குறிப்பாக வகுப்புரிமை, வன்கொடுமை, பொருந்தா மணம், சாதி மறுப்பு மணம் என்பன தொடர்பான சொல்லடல்களில் சிலவற்றை கையாள பழகியுள்ளோம். உதாரணத்துக்கு, வகுப்புரிமை, வன்கொடுமை ஆகியன குறித்து எளிதில், தக்க வார்த்தைகளைக் கொண்டு பேசி வருகிறோம். தலித் பெண்கள் ஆதிக்க சாதியினரால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுவதை குறித்துப் பேச, விவாதிக்க கூட நமக்கு இன்று ஒரு வலுவான அரசியல் மொழி கைவசமுள்ளது. தலித்துகளின் எழுச்சியும் பெண்ணிய இயக்கங்களின் செயல்பாடுகளும் இதைச் சாத்தியப்படுத்தியுள்ளன. ஆனால் உயர் சாதிப் பெண்ணுக்கும் பிற்படுத்தப்பட்ட, அல்லது தலித் வகுப்பைச் சேர்ந்த ஆணுக்கும் இடையிலான காதலை சாதி சமுதாயம் குற்றமாக பாவித்து தண்டிப்பதைப் பற்றி பேச, விவாதிக்க தோதான சொல்லாடல்களை நாம் இன்னமும் உருவாக்கிக் கொள்ளவில்லை. இதற்குக் காரணம், இத்தகைய காதல் என்பது அடிப்படையிலேயே ஒரு குற்றமாகக் கருதப்படுவதுதான்.

தலித் பெண்கள் பலாத்காரம் செய்யப்படுவதை உயர் சாதி ஆண்களின் ஆண்மை சம்பந்தமான விஷயமாக சாதி சமுதாயம் கொள்கிறது, ஆனால் வேறு வகுப்பு ஆண்கள் சாதி வரம்புகளைக் கடந்து "உயர்" சாதிப் பெண்களுடன் காதல் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வார்களேயானால், அவர்களது உணர்வுகள் குற்றங்களாக கொள்ளப்படுகின்றன. அது போல சம்பந்தப்பட்ட உயர் சாதிப் பெண்ணின் காதலும் அத்து மீறலாக அறியப்படுகிறது. ஒட்டுமொத்த சமுதாயமுமே இக்காதலை சாதி சமுதாய தர்க்க நியாயங்களை தலைகீழாக மாற்றக்

கூடியதாக அறிவதால், இப்படிப்பட்ட காதலர்கள் கொல்லப்படுவதை சமுதாயம் இன்றளவும் ஏற்றுக் கொள்ளவே செய்கிறது. (தமிழில் வெளிவந்துள்ள வித்தியாசமான படங்களில் ஒன்றாக பேசப்பட்ட காதல் திரைப்படம் இத்தகைய நியாயத்தை மிக சாதுர்யமாக முன்வைக்கிறது. தனது உயர் சாதி காதலியை அடைய முடியாமல் பித்துப் பிடித்து அலையும் காதலனை நமக்குக் காட்டி, நம் மனத்தில் கழிவிரக்கத்தைத் தோற்றுவிக்கிறது (ஆனால் சாதி சமுதாயத்தை பற்றிய விமர்சனத்தை அல்ல). அதேசமயம், பெண் மீதுள்ள பாசத்தினால்தான் அவளது தந்தை அவளுக்கு வேறு மாப்பிள்ளை பார்ப்பதாகவும் காட்டி அவ்விடத்தில் வெளிப்படும் சாதி அதிகாரத்தை பூசி மெழுகுகிறது.)

இது வெறும் கிராம அளவிலோ, கட்டைப் பஞ்சாயத்து தீர்ப்பிலோ அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் தண்டனையாக மட்டும் இருந்தால், அறியாமையையும் கிராமப்புறங்களிலுள்ள சாதிப் பண்பாட்டையும் காரணங்களாகச் சொல்லலாம். ஆனால், இத்தகைய காதல் விவகாரங்கள் காவல் நிலையத்துக்குக் கொண்டு போகப்படும்போது, அங்குமே அவை குற்றங்களாக அடையாளப் படுத்தப்படுகின்றன. சட்டப்படி குற்றமில்லையானாலும், சாதி தரும நியாயங்களைப் பேசியும், பெற்றோரிடத்து பிள்ளைகளுக்கு இருக்க வேண்டிய கடமையைப் பற்றிப் பேசியும் காவல்துறை அதிகாரிகள் இப்படிப்பட்ட வழக்குகளை விசாரிக்காமல் விட்டு விடுவதையும் நாம் காணலாம். பெற்றோர்களும்கூட, சட்டப்படி இப்படிப்பட்ட காதல் திருமணங்களை தடை செய்ய முடியாது என்பதை அறிந்துள்ளதால், வேறு வகைகைளில் காதலர்களை குற்றவாளிகளாக ஆக்க முயற்சிப்பதையும் காணலாம். பெண் இன்னும் மேஜராகவில்லை என்பதை பொய்சாட்சிகளை கொண்டு நிறுவுவது, பெண்ணை அவளது காதலன் கடத்திக் கொண்டு சென்றுவிட்டான் என்று புகார் கொடுப்பது, பெண்ணையும் அவளது காதலனையும் மிரட்டுவது என்பன போன்றவற்றை மேற்கொள்வதைக் காணலாம்.

இத்தகைய வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகள் கூட மெத்தனமாகவும் சாதிய சமுதாய நியாயங்களை அனுசரித்தும் செயல்படுவதை காணலாம். மத்திய பிரதேச உயர்நீதிமன்றத்தில், பெண்ணுடைய சம்மதம் இன்றி அவளுடைய பெற்றோர்கள் அவளை வேறு ஒருவருக்கு, அதாவது காதலன் அல்லாத வேறொருவனுக்கு திருமணம் செய்து கொடுக்க முடிவு செய்ததை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதியவர்கள், சம்மதம் என்பது பெண் தெரிவிக்கும் பதிலில் மட்டுமில்லை, பெற்றோர் அவளுடைய நலம் கருதி எடுக்கும் முடிவிலும் அடங்கியுள்ளது என்று தீர்ப்புரைத்தார். அதாவது ‘‘சம்மதம்’’ என்பது தனிநபர்களுடைய விருப்பு வெறுப்புக்குட்பட்டது மட்டுமல்ல, குடும்பமும் சம்மதித்தால்தான் அது சம்மதமாகும் என்று அவர் சொல்லாமல் சொன்னார். பிற்படுத்தப்பட்ட, தலித் வகுப்புப் பெண்கள் தொடர்பான வழக்குகளிலும்கூட இத்தகைய சாதிய மனநிலையை நீதிபதிகள் வெளியிடுவதை காணமுடியும்.

பலாத்காரம் செய்வோர், என்னவோ காமம் தலைக்கேறுவதால்தான் இப்படிச் செய்கிறார்கள் என்ற தவறான புரிதலும், இளைஞர்கள் மட்டுமே இத்தகைய செயல்களை செய்வார்கள். வயதான ‘‘உயர்’’ சாதி ஆண்கள் இவ்வாறு நடந்து கொள்ள மாட்டார்கள் என்ற எண்ணமும், ‘‘கீழ்’’ சாதிப் பெண்களின் வாக்கை நம்ப முடியாது என்ற கருத்தும் சில தீர்ப்புகளில் வெளிப்படுகின்றன (மதுரா வழக்கு, பன்வாரி தேவி வழக்கு). ஆகமொத்தம், இந்த வழக்குகளில் மனுதரும சாஸ்திரப்படியே நீதிபதி தீர்ப்புரைத்துள்ளார். குற்றமாகக் கருதப்படும் உறவுகளை மாற்றியமைப்பதன் மூலமே நம்மால் சாதியமைப்பை அசைத்துப் பார்க்க முடியும். இப்படிச் செய்ய வேண்டுமானால் சாதி மறுப்புத் திருமணங்கள் என்ற ரீதியில் மட்டும் சிந்தித்தால் போதாது.

**சாதிய அமைப்பில் பெண்களின் சுதந்திரம்:**

சாதி அமைப்பின் காவலாளர்கள் எதைக் கண்டு அஞ்சுகிறார்கள் என்பதை பரிசீலிப்போம். பெண்கள் சுயாதீனமாக இருத்தல், வாழ்தல், விழைதல், காதல் கொள்ளுதல், சிந்தித்தல் ஆகியவற்றை சாதி சமுதாயம் விரும்புவது கிடையாது. ஆதிக்க சாதி பெண் இப்படி இருந்தால் அவளை எப்படியாவது சாதிய இலக்கணத்துக்கு கட்டுப்படச் செய்ய வேண்டும். அவளது சாதிய விசுவாசத்தை உறதி செய்துவிடவேண்டும் என்பதில் சாதிய சமுதாய காவலாளர்கள் கறாராக இருப்பதைக் காணலாம். இச்சாதி பெண்களுமே சில சுதந்திரங்களைக் கைவிட விரும்பாமலும் வேறு சிலவற்றை கைவிட்டும் தமக்கான இடத்தை உறுதி செய்து கொள்கிறார்கள்.

படிக்க, விருப்பமான ஆடை அணிய, வெளியே சென்று வர, வேலைக்குப்போக என இவ்வனைத்தும் வழங்கப்பட்டதால், காதல், திருமண விஷயங்களில் பெற்றோருக்கு விட்டுக் கொடுப்பதை உரிமை இழப்பாக காண்பதில்லை. அவர்கள் வளர்ந்த சூழலும் அவர்களை இப்படி வாழ பழக்கிவிடுகிறது. பிற சாதியாட்களை அந்நியராக காண்பது, தங்களுக்கானவர்கள் இல்லை என்று எண்ணுவது, பிற சாதி ஆண்கள் தங்களை கிண்டல் அடிக்கக்கூடியவர்கள், தங்களுக்கு உகந்தவர்கள் அல்ல என்று இறுமாப்புடன் இருப்பது, இவர்கள் தமது சாதிக்குக் கட்டுப்பட்டு வாழ்வதை எளிதாக்குகிறது. ஆதிக்க சாதிப் பெண்களைப் போலவே பிற்பட்ட சாதிப் பெண்களும் தங்களது சாதி நியாயங்களுக்குக் கட்டுப்பட வேண்டியவராகிறார்கள். என்ன ஒரு வேறுபாடு என்றால், ஆதிக்க சாதிப் பெண்களைப் போல் இவர்களால் தங்களது சுதந்திரத்தை பேரம் பேசி தக்கவைத்துக் கொள்ள முடிவதில்லை. படிக்க, பணிக்குப் போக என்று அனுமதிக்கப்பட்டாலும் திருமணம் என்று இலட்சியமும் சாதிக்குள் மணம் என்ற கட்டாயமும்

இவர்கள் மீறத்தகாத நியதிகளாக நிற்கின்றன. ஆதிக்க சாதி பெண்கள் இன்னாரை மணக்கக்கூடாது என்று தெரிந்து வைத்துக் கொண்டுள்ளது போல, எப்படிப்பட்டவரை மணந்தால் தமது சமுதாயம் ஏற்றுக் கொள்ளும் என்று தனக்கான சாதி வர்க்க கூட்டல் கழித்தல்களை சரியாகவே போட பழகிவிடுகின்றனர். சலுகைகளும் உரிமைகளும் காலங்காலமாக வாய்க்கப் பெற்றுள்ள இவர்களால் சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் சாதுர்யமாக கையாள முடிகிறது. பிற்பட்ட வகுப்புப் பெண்களோ தமக்கான இடத்துக்கான போராட்டத்தையும் படிப்பு, வேலை, மணவாழ்க்கை என்று எல்லா தளங்களிலும் ஏக காலத்தில் நடத்த வேண்டியுள்ளதால் பல்வேறு விதமான சமரசங்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் இடங்கொடுக்க வேண்டியவராகிறார்கள்.

ஆதிக்க சாதிப் பெண்களைக் கண்டு எரிச்சலுறும் அல்லது அவர்களை அடைந்தே தீர வேண்டும் என்று நினைக்கும் அல்லது இவர்களைக் காதலிக்கத் துணியும் தலித் அல்லது பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஆண்களோ இவர்களை வெற்றிக் கொள்வதில் காட்டும் வீரியத்தை பெருமிதத்துடன் ஏற்றுக் கொள்கின்றனர். சாதி சமுதாய எல்லைகளை இவ்வாறு கடப்பதை சாகசமாக கருதுகின்றனர். இம்மாதிரியான எண்ணங்கள் ஏதும் இல்லாமல் காதலித்து மணமுடிக்கும் ஆட்களும் உள்ள போதிலும் சாதிய ஏற்றத்தாழ்வுகள் உண்டாக்கும் மனநிலையால் விரட்டப்பட்டு அவதியுறும் ஆளுமைகள் பற்றித்தான் இங்கு குறிப்பிட்டு பேச வேண்டியுள்ளது. இவ்வாறு காதலிப்பது அதனளவில் ஒரு இலட்சியமாகப் போய், அதுவே சாதிய மோதலுக்கும் இட்டுச்செல்கிறது. இவ்வாறு காதலை சவாலாகக் கொள்ளும் பிற்பட்ட, தலித் ஆண்களை அத்துமீறுபவர்களாக சாதிய சமுதாய காவலர்கள் நினைப்பதுடன் அதற்கான தக்க தண்டனையையும் வழங்குகிறார்கள். இவர்களால் காதலிக்கப்படும் ஆதிக்க அல்லது பிற்பட்ட சமுதாயத்து பெண்ணோ சாதிகளுக்கு இடையிலான மோதலில் வெற்றியாளரை சேரும் கோப்பையாக, அவர்களால் உருட்டப்படும் பகடைக் காயாகிறாள்.

தலித் பெண்களின் நிலைமையோ முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. இவர்களை அடைவதோ, துன்புறுத்துவதோ குற்றங்களாக அங்கீகரிக்கப்படாததால், அவர்களது கதியும் பாடும் எந்தவித சலனத்தையும் ஏற்படுத்துவதில்லை. தலித் சமுதாயம் என்னதான் இது குறித்துப் பேசி போராடினாலும் பிற சாதிப் பெண்களின் உடல்கள் மீது எழுதப்படும் மதிப்பீடுகளும் பெருமைகளும் இவர்களது உடல்கள் மீது வரையப்படுவது கிடையாது. உழைப்புக்கும் பிள்ளைகள் பெறுவதற்கும் ஆண்களின் பாலியல் பயன்பாட்டுக்கும் உரியதாக உள்ள இவர்களது உடல்களுக்கு எதிரான குற்றங்களை அவர்கள்தான் போராடி எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. தலித் அமைப்புகளும் அவர்களுக்கு ஆதரவானவர்களும் உடன் நின்றாலும் இவர்களுக்குரிய உடல் மாண்பினை இச்சமுதாயம் தொடர்ந்து மறுத்து வந்துள்ளது.

இப்படியான சமுதாய சூழலில் பெண்ணின் சுதந்திரம் சுயாதீனம் என்பவற்றுக்கு உத்தரவாதங்கள் கிடையாது. ஆதிக்க சாதி பெண்கள் சாதிய தளைகளை அறுத்தெறிந்தால் ஒழிய அவர்களது சுதந்திரம் முழுமையடையப்படுவதில்லை. பிற்பட்ட சமுதாய பெண்களின் வாழ்க்கை காதல், மணம், குடும்பம் என்ற எல்லைகளைக் கடந்து விரிந்தாலொழிய அவர்களுக்கு விடியலில்லை. தலித் பெண்களின் வாழ்க்கைக்கு தற்சமயம் அவர்களது உழைப்பு மட்டுமே ஆதாரமாக உள்ளது. அதுவே சுதந்திரம், மாண்பு ஆகியவற்றுக்கான அடிப்படையாக உள்ளது. அதே சமயம் அதுவே சவாலாகவும் துன்பமாகவு,ம உள்ளது. இவர்களுடைய சுதந்திரம் நிஜமாக, சாதியும் தீண்டாமையும் இவை நிறுத்தும் வர்க்க வேறுபாடுகளும் அடியோடு ஒழிவது அவசியமாகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக வம்சம், சாதி, குடும்பம் ஆகியவற்றின் பெருமையை காப்பாற்றுவதே பெண்களின் இலட்சியமாக இருக்க வேண்டும் என்பதை நித்தமும் வலியுறுத்தி வரும் ஆண்மையும் அது வளர்த்தெடுத்துள்ள பண்பாடும் உறவுகளும் அழிய வேண்டும்.

முடிவாக, எல்லா பெண்களும் சுதந்திரமாக, சமத்துவமாக, சரிநிகர் சமானமாக, நீதியான வாழ்க்கை வாழ, ஆண்களுடனான அவர்களது உறவால் மட்டும் அவர்களுடைய வாழ்வும் பணியும் மதிப்பிடப்படுவதும் தீர்மானிக்கப்படுவதுமான செயல்கள் இல்லாமல் போக வேண்டும். அதாவது மகளாக, மனைவியாக, காதலியாக என்று மட்டுமில்லாது சமூக ஜீவியாக அவர்கள் வாழ வெளியும் வாய்ப்பும் சுதந்திரமும் தேவை. அப்படி செய்தாலன்றி பெண்ணடிமைத்தனமும் சாதியடிமைத்தனமும் ஒன்றை மற்றொன்று காத்து நிற்கும். தாம்பத்தியத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் காட்டிலும் சமுதாய விடுதலைக்கும் பொதுப்பணிக்கும் முக்கியத்துவம் வழங்குங்கள் என்று அம்பேத்கர் தலித் பெண்களைக் கேட்டுக் கொண்டார். பெரியார் பெண்கள் திருமணம் செய்து கொள்ளாமலும் பிள்ளை பெறும் தொல்லையிலிருந்து விடுபட்டும் பயனுள்ள சமுதாய வாழ்க்கையை வாழ வேண்டும் என்று விரும்பினார். சாதியற்ற சமுதாயத்துக்குப் போராடிய இம்மாமனிதர்கள் பெண் விடுதலைக்கும் சாதியொழிப்புக்கும் இடையிலான நெருக்கமான தொடர்பை தொடர்ந்து சுட்டிக்காட்டினார். இதை நாம் மறந்து விடக்கூடாது.

**ஆதாரம்: TNUEF நடத்திய தலித் விடுதலைக்கான ஆய்வரங்கத்தில் முன்வைக்கப்பட்ட அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டது.**

# வன உரிமைகள் சட்டத்தின் செயலாக்கம்

## *வரலாற்று அநீதிகளுக்குத் தீர்வு*

**– மதுசூதன் பாந்தி**

*இந்தக் கட்டுரை வன உரிமைகள் சட்டத்தின் செயலாக்கத்தை விமர்சனக் கண்ணோட்டத்தோடு அணுகுகிறது. சட்டம் செயலாக்கப்படும் நடைமுறை குறித்து பரிசீலிப்பதோடு, இதில் உள்ள பிரச்சனைகள், சவால்கள் குறித்த ஒரு கண்ணோட்டத்தையும் தர இக்கட்டுரையில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது*

வன உரிமைகள் சட்டம் (எப்ஆர்ஏ) எனப்படும் பழங்குடியினர் மற்றும் இதர பாரம்பரிய வனவாழ் மக்கள் (வன உரிமைகள் அங்கீகாரம்) சட்டம், 2006ல் இந்த முக்கியத்துவம் வாய்ந்த சொற்றொடர் இருக்கிறது: ''வனவாழ் சமூகங்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்று அநீதி.'' இந்தச் சட்டத்தின் மூலம், வனங்களைச் சார்ந்து வாழும் மக்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் தொடங்கப்பட்டு, ஒரு கெடு வாய்ப்பாக சுதந்திர இந்தியாவிலும் தொடர்கிற, நவீன வன நிர்வாகம் என்பதன் பெயரால் அனுபவித்து வருகிற துயரங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அந்தத் துயரங்கள் ஒரு பெரும் வேதனையை ஏற்படுத்துகின்றன.

ஆயினும், 2007ம் ஆண்டை ஒரு புதிய தொடக்கத்தின் ஆண்டாக குறிப்பிடலாம். அப்போதுதான், மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம் இந்தச் சட்டத்தை நிறைவேற்றியது. பழங்குடி மக்களும் இதர வனவாழ் மக்களும்[2] அவர்கள் வசத்தில் உள்ள குடியிருப்பு மற்றும் சாகுபடி நிலங்கள் தொடர்பாக முன்வைக்கும் உரிமைக் கோரிக்கைகள் நிறைவேறுவதற்கான உறுதியை இந்தச் சட்டம் வழங்குகிறது. மரம் அல்லாத வனப் பொருள்கள் / சிறிய வனப் பொருள்கள் ஆகியவற்றை அவர்களுக்கு முழு உரிமை உள்ளதாக ஆக்குகிற இந்தச் சட்டம், சமூக உரிமைகள் உட்பட, வன ஆதாரங்கள் தொடர்பான நிர்வாக உரிமைகளையும் பாதுகாப்பு உரிமைகளையும் வழங்குகிறது.

### செயலாக்க நடைமுறை:

இந்தச் சட்டம் செயலாக்கப்படுகிற நடைமுறையானது கிராமசபை மட்டத்திலிருந்தே தொடங்குகிறது. அந்த சபைகளில் வன உரிமைக் குழுக்கள்[3] அமைக்கப்படுகின்றன. அந்தக் குழுக்கள் உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான மனுக்களை பெறுவதற்கும், சரிபார்ப்பதற்கும், ஒப்புதல் அளிப்பதற்குமான பணிகளில் கிராமசபைகளுக்கு உதவி செய்ய பணிக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டத்தின்படி பட்டியல் பகுதிகளில் (எஸ்ஏ)[4] கிராம சபைகள் அந்தந்த குடியிருப்பு மட்டத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும். பாரம்பரிய கிராமங்களைப் பொருத்தவரையில் அவை கிராம மட்டத்தில் அமைக்கப்பட வேண்டும். ஆனால், பல இடங்களில், கிராமசபைகள் ஊராட்சி (பஞ்சாயத்து) மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அது சட்டத்திற்குப் புறம்பானதாகும். அதேபோல் கிராம மட்டத்திலான அதிகாரிகள் தங்களது அதிகாரங்களை முறையாக செயல்படுத்துவதில்லை என்பதும் தெரியவந்துள்ளது. இதனால், இந்தச் சட்டத்தின் நோக்கம் நீர்த்துப் போகிறது.

இந்தச் சட்டம் எவ்வாறு செயல்படுத்தப்பட வேண்டுமோ அப்படித்தான் செயல்படுத்தப்படுகிறதா என்பதை மதிப்பிடுவதற்கான மாநில அளவிலான கண்காணிப்புக் குழுக்கள், உரிமைகள் அங்கீகரிக்கப்படுவதை கண்காணிப்பதற்கான வரையறைகளையும் அளவுகோல்களையும் தீர்மானிக்கின்றன. அதன்பின், அந்தந்த மாநிலங்களின் பழங்குடியினர் நலத்துறைகள் குறிப்பான அளவுகோல்களை உருவாக்குகின்றன. அதைத் தொடர்ந்து ஊரக மேம்பாடு மற்றும் வனத்துறைகள், விண்ணப்பதாரர்களின் கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கின்றன. பல இடங்களில், இந்த நடைமுறை கண்டுகொள்ளப் படுவதில்லை. இதனால், பல ஏழைகளின் கோரிக்கைகள் தொடக்கக் கட்டத்திலேயே நிராகரிக்கப்பட்டு விடுகின்றன.

வன உரிமை குழுக்களில் பெண்கள் இடம் பெறுவதைப் பொறுத்தவரையில் பல மாநிலங்களில் அவர்களது பங்களிப்பு முற்றிலுமாக புறக்கணிக்கப்படுகிறது. வழக்கம்போல் போதுமான பெண்கள் இல்லை அல்லது பெண்களே இல்லை என்று காரணம் கூறப்படுகிறது. மேலும், கிராமசபைக் கூட்டங்கள் பெண்கள் இல்லாமலே நடத்தப்படுகின்றன. சிறிய வனப்பொருள்கள் சேகரிப்பு மற்றும் விற்பனையின் மூலம் பழங்குடியினர் பொருளாதாரத்தில் பெண்கள்தான் முக்கிய பங்களிப்பு செய்பவர்களாக (60-70%) இருக்கிறார்கள் என்பது நிறுவப்பட்டுள்ளபோதிலும் கூட இந்த நிலைமைதான் தொடர்கிறது. வனம் சார்ந்த வாழ்வாதாரத்தில் சிறிய வனப்பொருள்கள் சேகரிப்பும் விற்பனையும் முக்கியமான அம்சமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

வன உரிமைகள் சட்டத்தின்படி, அதனை செயல்படுத்துகிற

> **''பூமியை கடவுள் படைத்தார்**
> **நாம் கடவுளின் குழந்தைகள்**
> **அப்படியானால் எங்கே இருந்து**
> **இந்த அரசாங்கம் அவதரித்தது?''**
>
> *– பி. டி. ஷர்மா*

நடைமுறையில் வனத்துறைகளுக்கு மிகக் குறைவான பங்குதான் இருக்கிறது. கோரிக்கைகளை சரிபார்க்கும் கட்டத்தில் அவர்கள் வன உரிமை குழுக்களுடன் இருந்தால் போதும் என்ற அளவிலேயே சட்டம் உள்ளது. இதுவும் கூட சட்டவிதிகளின் கீழ் கட்டாயமானதல்ல. அது வனஉரிமைக் குழுக்களின் முடிவுகளில் குறுக்கிடவும் முடியாது. ஆனால், சட்டத்தை கொஞ்சமும் பொருட்படுத்தாமல், வனத்துறை தானே "ரத்து" அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு, கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் நிலையிலேயே அவற்றை ரத்துச் செய்துவிடுகிறது. இதனால், அடிப்படையில் இந்தச் சட்டம் மக்கள் சார்ந்ததாக இருந்தாலும் கூட, இறுதியாக அது அதிகாரிகளின் குழுக்களாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாலும், வனத்துறையாலும்தான் கையாளப்படுவதாக இருக்கிறது. வனத்துறையோ ஒரு போதும் இந்த சட்டத்திற்கு ஆதரவாக இருந்ததில்லை. சிலர் கிராம சபைகளிடம் உரிமைகளை வழங்கும் பொறுப்பும், நிலப்பட்டா வழங்கும் அதிகாரமும் ஒப்படைக்கப்படுவது ஊழலுக்கும், அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கும் இட்டுச் செல்லும் என்று சந்தேகம் தெரிவிக்கிறார்கள்.

வனத்துறை போன்ற அரசாங்கத் துறைகளும் கூட, இதை ஒரு காரணமாகக் காட்டிக்கொண்டு தங்களது செயல்பாடுகளை நியாயப்படுத்த முயல்கின்றன. அதிகாரம் தங்கள் கையில் இருந்து நழுவி விடக்கூடாது என்ற எண்ணத்துடன் இத்துறைகள் இவ்வாறு செயல்படுவதாலும், இப்படிப்பட்ட ஐயப்பாடுகள் உருவாகியிருக்கக் கூடும். இன்னொரு பக்கத்தில் இந்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாதிடுவோர், ஒரடி முன்னால் சென்று, கிராம சபைகளுக்கு முழு அதிகாரம் தரவும், பட்டியல் பகுதிகளில் ஊராட்சி விரிவாக்கத்திற்கான கூடுதல் பங்களிப்பை உறுதிப்படுத்தவும் பரிந்துரைக்கிறார்கள்[5]. இவ்வாறு செய்வதன் மூலமே சட்டத்தை இடையூறின்றி செயல்படுத்த முடியும் என்பது அவர்களது கருத்து.

**பிரச்சனைகள்**

வன உரிமைகள் சட்டத்திற்கு முட்டுக்கட்டையாக பல்வேறு பிரச்சனைகள் உள்ளன. உரிமைகளுக்கான கோரிக்கைகளை பல்வேறு காரணங்களுக்காக, பெரும்பாலும் அற்பத்தனமான காரணங்களுக்காக, நிராகரிப்பது என்பது ஒரு முக்கிய பிரச்சனையாகும். அது விண்ணப்பதாரர்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்படுவதை மிகப்பெரும் அளவிற்கு பாதித்துள்ளது. அதிகாரிகள் அவசர கோலத்தில் நடத்துகிற (அல்லது நடத்தாமலே விடுகிற?) விசாரணையால்தான் இப்படி நடப்பதாகத் தெரிகிறது. விண்ணப்பதாரர்கள் மேல்முறையீடு செய்வதற்கு வாய்ப்பளிக்கப்படாத நிலையில் அவர்களது வேதனை பல மடங்காகிறது.

சட்டத்தின் பிரிவு 4(5) தவறாகப் பயன்படுத்தப்படுவது மற்றொரு முக்கியப் பிரச்சனையாக சுட்டிக்காட்டப்படுகிறது. குறிப்பிட்ட பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்தப்படுவது தொடர்பான விதி இது. பல நேரங்களில் இது முறையான விசாரணைகள் எதுவும் இல்லாமலே கையாளப்படுகிறது. சில இடங்கள் வனப்பகுதிகள் அல்ல என்ற போதிலும் கூட அங்கு கொஞ்சம் மரங்கள் இருப்பதால் அந்த இடங்களை வனத்துறை எடுத்துக்கொள்வதாகவும் குற்றச்சாட்டுகள் உள்ளன. இதனால் உண்மையிலேயே வனப்பகுதி என்பது எது என்ற குழப்பம் ஏற்படுகிறது. ஒரு கணக்கெடுப்பின்படி, நாட்டில் சுமார் 50 மாவட்டங்களில் அடர்த்தியான வனப்பகுதிகள் உள்ளன. அந்தப் பகுதிகள் பழங்குடி மக்கள் அடர்த்தியாக வாழும் இடங்களாகவும் இருக்கின்றன. மரங்கள் இருக்கின்றன என்பதற்காக அந்தப் பகுதிகளை வனத்துறை எடுத்துக்கொள்கிறபோது, யாருக்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதோ, அவர்கள் கைவிடப்படுகிறார்கள்.

தனி மனிதர்களின் உரிமைகளுக்கு நிகராக சமுக உரிமைகளும் கோரப்படும் என்று எதிர்பார்க்கபடுகிறது. ஏனெனில், வனவாழ் மக்களுக்கு வன வளங்கள் கிடைப்பதற்கு வழிவகுப்பதன் மூலம் ஒரு பாதுகாப்பான வாழ்வாதாரம் உறுதிப்படுத்தப்படுகிறது. ஆனால், கிடைத்துள்ள தகவல்கள் இதற்கு மாறாகவே உள்ளன. ஏனென்றால், தங்களுடைய மற்ற உரிமைகளுக்கு முன்னால் "முதலில் நிலம்" என்பதே முக்கியமானதாக காணுகிற தவறான புரிதலின் காரணமாக, மக்கள் இந்த சட்டவிதியின் முழுமையான ஆதாயங்களை பயன்படுத்திக்கொள்ளத் தவறுகிறார்கள்.

10 ஆண்டுகளுக்கு முன் மேற்கொள்ளப்பட்ட ஒரு வன ஆய்வின்படி, பல கிராமங்களின் எல்லைகளுக்குள்தான் வனப் பகுதிகள் அமைந்துள்ளன என்பதால், சுமார் 1,70,000 சமூகக் கோரிக்கைகள் இருந்திருக்க வேண்டும் என்று மதிப்பிடப்பட்டது. ஆனால், பழங்குடியினர் நல அமைச்சகத்தில் 50,000 மனுக்கள் மட்டுமே பதிவாகியுள்ளன என்று ஆய்வாளர் கோத்தாரி (2011) குறிப்பிடுகிறார். இந்த விதி சரியாக செயல்படுத்தப்படாததற்கான காரணங்கள் வருமாறு: வனவளங்களில் உரிமை கோருகிற சமூகங்களுக்கு, கூட்டு வன நிர்வாக (ஜே.எஃப்.எம்) நிதி வழங்கப்படமாட்டாது என்று வனத்துறை அச்சுறுத்தியுள்ளது; சமூக உரிமைக் கோரிக்கைகளை

வனத்துறை வேண்டா வெறுப்புடனேயே அணுகுகிறது; குறிப்பிட்ட சமூகம் அதிகாரம் பெறுவதன் விளைவாக இந்த அணுகுமுறை ஏற்பட்டிருக்கக் கூடும் அல்லது சமூகங்கள் காடுகளை பாதுகாக்காமல் விட்டுவிடலாம் என்ற அச்சமும் காரணமாக இருக்கலாம் என்று கூறுகிறார் கோத்தாரி. எனினும், ஏற்கெனவே சமூகங்களின் பொறுப்பில் உள்ள கூட்டு வன நிர்வாக ஏற்பாடுகள் திட்டவட்டமான முறையில் நிர்வகிக்கப்பட்டு வருவதை பல ஆய்வுகள் நிரூபித்துள்ளன. கூட்டு வன நிர்வாகத்தின் கீழ் உள்ள நிலங்களுக்கு ஏராளமானோர்கள் உரிமை கோரியிருக்கிறார்கள். இந்த நிலையில் சமூக உரிமைக்கான விதிகளை மாநில அரசாங்கங்களே கூட தவறான முறையில் பயன்படுத்துகின்றன. இது வனஉரிமைச் சட்டம் சமூகமான முறையில் செயல்படுத்தப்படுவதைத் தடுப்பதாக இருக்கிறது என்று ஆய்வாளர் ராம்தாஸ் குறிப்பிடுகிறார் (2009). மேலும், குடிமைச் சமூக அமைப்புகள் சமூக உரிமைகளை விட தனி நபர் உரிமைகள் குறித்துதான் அதிக கவனம் செலுத்துகின்றன. ஏனென்றால், அப்படி தனிநபர் உரிமைகள் மீது கவனம் செலுத்தும்போதுதான் அது அரசியல் ரீதியான கவனிப்பிற்கு உள்ளாகிறது. மேலும், சமூக வளங்களுக்கு பொறுப்பேற்க "சமூகங்கள்" கூட தயாராக இல்லை என்று தெரியவருகிறது. ஏனென்றால், பல இடங்களில் வன வளங்களை சமூகங்கள் நேரடியாக கையாளக்கூடிய நிலைமை இருக்கிறது. அத்துடன், சமூக வன வளங்களை நிர்வகிப்பது அரசாங்கத்தின் பொறுப்புதானேயன்றி, தங்களுடையது அல்ல என்று சமூகங்கள் கருதுகின்றன.

வனஉரிமைச் சட்டம் சுயமான பலம் உள்ள ஒரு தனிச் சட்டம்தான் என்ற போதிலும் அதன் மீது ஏற்கெனவே உள்ள சட்டங்கள் தாக்கம் செலுத்தக் கூடிய வாய்ப்பு உள்ளது. குறிப்பாக வன உயிர்கள் மற்றும் காடுகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக வெவ்வேறு சட்டங்கள் உள்ளன. வனஉரிமைச் சட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக முடிவெடுக்கக் கூடிய முக்கிய அமைப்பாகிய மாவட்ட அளவிலான குழுக்களின் செயல்பாடு இதற்கு ஒரு உதாரணமாகும்.[6] முந்தைய வன பராமரிப்புச் சட்டம் (எஃப்சிஏ) – 1980ன் கீழ் வழங்கப்பட்ட உரிமைகளை முறைப்படுத்துவது இக்குழுக்களுக்கு ஒரு சவால் மிக்க பணியாகியுள்ளது. அதேநேரத்தில் 1980க்குப் பிறகு அந்த உரிமைகளை வழங்குவது ஒரு கடுமையான நடைமுறையாகியுள்ளது. அதேநேரத்தில், 1980ம் ஆண்டின் வனப் பராமரிப்பு சட்டத்தால் காடுகளைப் பாதுகாப்பதில் எவ்வித பயனுள்ள விளைவையும் ஏற்படுத்த முடியவில்லை என்று ஆய்வாளர் குப்தா (2006) கூறுகிறார். ஒரு ஆண்டுக்கு சுமார் 40,000 ஹெக்டேர் வனநிலம் வனம் சாராத நோக்கங்களுக்காக திருப்பிவிடப்பட்டதாக அவர் கூறுகிறார். 'பீப்பிள்ஸ் டெமாக்ரசி' பத்திரிகை (2012) பின்வரும் தகவல்களைத் தெரிவிக்கிறது: 2008–11 காலகட்டத்தில் பல மாநிலங்களில் வனம் சாராத திட்டங்களுக்காக 1,82,389 ஹெக்டேர் திருப்பிவிடப்பட்டது. சம்பந்தப்பட்ட கிராமசபைகளின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற அக்கறையே இல்லாமல் இவ்வாறு செய்யப்பட்டது. மத்திய அரசும் மாநில அரசுகளும் தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்தி, மேம்பாட்டுத் திட்டங்களுக்காக நிலங்களை, அந்த நிலங்களுக்காக வரக்கூடிய கோரிக்கைகள் பற்றிக் கவலைப்படாமல், ஒதுக்கீடு செய்கிறபோது வனஉரிமைகள் சட்டத்தின் நோக்கங்களுக்கே மற்ற சட்டங்கள் பாதகமாக அமைகின்றன. மேம்பாட்டுத் திட்டங்கள் என்ற பெயரில் நிலங்களை கையகப்படுத்துவது என்று வருகிறபோது, இந்தச் சட்டம் மாநில அரசுகளின் ஆளுமைக்கு உட்பட்டதாக இருப்பதால், அந்த அரசுகளின் இப்படிப்பட்ட அதிகாரங்கள் மேலும் வலுப்பெறுகின்றன.

வனஉரிமைச் சட்டத்தால் முக்கியமாக பயன்பெறக்கூடிய மக்களிடையே அதுகுறித்த விழிப்புணர்வு இல்லை என்பது நன்கு தெரிந்த விஷயமே. குறிப்பாக வன உயிர்கள் பாதுகாப்புக்கு உரிய பகுதிகளில் இந்தச் சட்டம் செயல்படுத்தப்படுவது மிக மோசமாக இருக்கிறது. அதற்குக் காரணம், குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடி சமூகங்களும் அவர்களது குழுத் தலைவர்களும் இந்த சட்ட உரிமைகள் குறித்து எதுவும் தெரியாதவர்களாக இருப்பதுதான் என்கிறார் கோத்தாரி[7]. கிராமசபையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியவர்களான துணை மண்டல குழுக்களின்[8] அதிகாரிகளே கூட இந்தச் சட்டம் குறித்து அறியாதவர்களாகவே உள்ளனர். அதிகாரிகளின் நிலைமையும் திறமையும் இப்படித்தான் இருக்கிறது என்றால், அவர்களால் வனஉரிமைக் குழுக்களுக்கும் கிராம சபைகளுக்கும் வனஉரிமைச் சட்டத்தில் உள்ளபடி வரைபடங்களையும், ஆவணங்களையும், இதர ஆதாரங்களையும் தரமுடியும் என்று எப்படி எதிர்பார்ப்பது? சட்டத்திலேயே உள்ள குறைபாடுகள் என்று பார்த்தால், முதலில் குறிப்பிட வேண்டியது கோரிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பட்டா தொடர்பானதாகும். ஏனெனில், அந்தப் பட்டா சொத்துக்கான முழுமையான, பிரிக்க முடியாத உரிமைகளை வழங்கும் வகையில் இல்லை. 2005ம் ஆண்டுக்கு முன் வன நிலங்களைக் கைப்பற்றியதாகவும், சிறிய வனப்பொருள்களை சேகரித்ததாகவும் பழங்குடி மக்கள் பலர் மீது போடப்பட்டுள்ள குற்றவியல் வழக்குகளைத் தள்ளுபடி செய்வது தொடர்பாகவும் சட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

சுரங்கத் தொழிலில் ஈடுபடும் பெரும் நிறுவனங்கள், மரக்

கடத்தல் கும்பல்கள் போன்ற சக்திகளிடமிருந்து காடுகளைப் பாதுகாக்கும் ஏற்பாடுகள் எதுவும் இந்தச் சட்டத்தில் இல்லை என்பது முக்கியமானதாகும். இதர பாரம்பரிய வனவாழ் மக்களைப் பொருத்தவரையில் அவர்கள் 3 தலைமுறைகளாக காட்டில் வாழ்ந்து வருவதை நிரூபித்தாக வேண்டும். அல்லது 75 ஆண்டுகளாக காட்டைப் பயன்படுத்தி வந்திருப்பதை நிரூபித்தாக வேண்டும். சட்டத்தின் விதிகள் இவ்வாறு இருப்பது, இந்த கடுமையான வரையறைகளுக்கு உட்பட்டு தங்களது கோரிக்கைகளை முன்வைப்பதில் அவர்களை ஊக்கமிழக்கச் செய்கிறது. சட்டத்தில் உள்ள பாலினப் பாகுபாடு அம்சத்தை ரெட்டி குழுவினர் (2011) சுட்டிக்காட்டியுள்ளனர். வாரிசுரிமை தொடர்பான சட்டவிதியில், நேரடி வாரிசு இல்லாத நிலையில் அடுத்த உறவினருக்கு உரிமை செல்கிறது என்றுதான் கூறப்பட்டுள்ளது. பட்டாதாரருக்கு அடுத்து வரக்கூடியவர் பற்றி, குறிப்பாக பெண் குழந்தை பற்றி தெளிவுபடுத்தப்படவில்லை.

## கொள்கைப் பிரச்சனைகள்

இறுதியாக, வனக் கொள்கையில் நல்ல நோக்கங்கள் உள்ளன, பொது நன்மை என்பதற்கான நடைமுறைகள் உள்ளன என்று கூறலாம்தான். ஆனால், அதற்கு மாறாக, வனஉரிமைச் சட்டத்தின் மூலம் வனவாழ் மக்களை விடுவிப்பது என்றக் கொள்கை, இதுவரையில் பொது நன்மையை ஏற்படுத்துவது என்கிற நோக்கத்திலிருந்து வெகுதூரம் விலகியே இருக்கிறது. ஆகவே, வன அதிகாரக் கொள்கையிலும், அத்துடன் இணைந்த வன நிர்வாகம் தொடர்பான கொள்கையிலும் மாற்றங்கள் செய்யப்படுவது அவசியமாகிறது.

சட்டத்தை பயனுள்ள முறையில் செயல்படுத்துவதற்காக பல்வேறு மட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட நிறுவன அமைப்புகள் தோல்வியடைந்துவிட்டன என்று மத்திய அரசு நியமித்த ஆய்வுக்குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. அந்தக் குழுக்களுக்கே போதுமான தகவல்களும் விழிப்புணர்வும் இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, சட்டம் செயலாக்கப்படுவதை மேம்படுத்துவதற்கு அனைத்து நிறுவன அமைப்புகளின் மட்டத்திலும் அரசுசாரா அமைப்புகளுக்கு பங்கு இருக்க வேண்டும் என்று ஆய்வுக்குழு பரிந்துரைத்துள்ளது. மேலும், அதில் ஊராட்சி உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்றும் ஆய்வுக் குழு கூறியுள்ளது. செயலாக்கத்தில் இத்தகைய பிரச்சனைகள் இருக்கின்றன என்ற போதிலும், அடிப்படையான சட்டம் வலுவானதாகவே இருக்கிறது, ஆகவே, திருத்தங்கள் எதுவும் தேவையில்லை என்று ஆய்வுக்குழு கருதுகிறது. எனினும், சில விதிகள் செயலாக்கப்படுவது தொடர்பாக சில திருத்தங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பரிந்துரைகள் சட்டத்தின் 12வது பிரிவின் கீழ் பழங்குடியினர் நல அமைச்சகத்தால் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட வழிகாட்டல்கள் என்ற வகையிலேயே உள்ளன. அந்த பரிந்துரைகளில் குறிப்பிட்டுள்ள சில பின்வருமாறு: இந்த கடுமையான வனஉரிமைகள் தொடர்பாக முடிவெடுப்பதற்கு கூடுகிற கிராமசபைகளில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்பதை, உறுப்பினர்களில் பாதிப் பேர் இருக்க வேண்டும் என திருத்துதல்; வனஉரிமைக் குழுக்களில் பழங்குடி மக்களின் பிரதிநிதித்துவத்தை மூன்றில் ஒரு பங்கிலிருந்து மூன்றில் இரண்டு பங்காக உயர்த்துதல்; போக்குவரத்து, தலைச் சுமை, சைக்கிள், தள்ளு வண்டி போன்றவற்றுக்கான விரிவான அர்த்தங்களைச் சேர்த்தல். இத்தகைய நிறுவனம் சார்ந்த மாற்றங்கள் ஒருபுறம் இருக்க, வனவாழ் சமூகங்களை கையாள்வது தொடர்பாக ஒரு மனிதநேய அணுகுமுறையை வனத்துறை மேற்கொள்ள வேண்டும் என்ற முக்கியமான ஆலோசனையை கிருஷ்ணதாஸ் தலைமையிலான ஆய்வுக் குழுவினர் (2011) கூறியுள்ளனர். பாதிக்கப்படுகிற வட்டார மக்கள் அவர்கள்தான் என்பதால் அவர்களோடு கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் இக்குழுவினர் கூறியுள்ளனர். மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் இது சரியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அந்த மாநில அரசுகள் ''பங்கேற்பு அதிகார கொள்கைகள்'' என்பதை செயல்படுத்தியதால் அந்த மாநிலங்களில் வனஉரிமைச் சட்டம் வேகமாக செயல்படுத்தப்பட்டுள்ளது என்று ஆய்வாளர் சம்பத் பதிவு செய்துள்ளார் (2010).

மேற்கண்ட வாதங்களிலிருந்து, பல நூற்றாண்டுகளாக பழங்குடி மக்கள் அனுபவித்து வந்த வரலாற்று அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவே வனஉரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்பது தெளிவாகிறது. ஆயினும், 2008ம் ஆண்டில் சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து, உண்மையான நடப்பு நிலைமைகள் ஏற்கெனவே, இருந்து வந்த சவால்களையும், முன் எப்போதும் காணாத சவால்களையும் எதிர்கொள்வதாகவே அமைந்துள்ளது. ஏற்கெனவே இருந்த சவால்களில் ஒன்றுதான் வனத்துறையின் ஒத்துழைப்பு சந்தேகத்திற்குரியதாகவே இருப்பது. அதன் அதிகாரவர்க்க அணுகுமுறையும், வனநிலத்தில் தனக்குள்ள பிடிமானத்தை விட்டுக்கொடுக்க வெளிப்படையாக மறுப்பதும் தொடர்கிறது. சட்டம் நிறைவேற்றப்பட்டபோதே வனத்துறை தனது உடன்பாடின்மையை வெளிப்படுத்தியது. பல மாநிலங்களில் சட்டத்தின் செயலாக்கத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் பல்வேறு முட்டுக்கட்டைகள் போடப்பட்டிருப்பதன் மூலம், வனத்துறையினரின் நோக்கங்கள் நிறைவேறியுள்ளன.

முன் எப்போதும் காணாத சவால்களைப் பொறுத்தவரையில் அவை பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டுள்ளன. ஒரு பக்கம் வனவாழ் மக்கள் தங்களுடைய சமூக உரிமைகளை கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். தனி மனித நில உரிமைகளைப் போலவே சமூக உரிமைகளும் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தக்கூடியவை என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. இது ஒருபுறம் இருக்க, கவலை தருகிற மற்றொரு அம்சம் ஏற்கெனவே உள்ள சட்டங்கள் வனஉரிமைச் சட்டத்துடன் நேரடியாக மோதக்கூடியவையாக உள்ளன. மாநில அரசுகள் இந்தச் சட்டத்திற்கு தவறான விளக்கங்கள் அளிப்பதும் ஒரு முக்கியப் பிரச்சனையாகும். எந்த அளவிற்கு அத்துமீறல்கள் நடைபெறுகின்றன என்பதை, குஜராத் மாநிலத்திலிருந்து வந்துள்ள ஒரு செய்தியிலிருந்து அறியலாம். வனஉரிமைச் சட்டத்தின் கீழ் பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட நிலங்களை வனத்துறையினர் வனநிலம் என்று அறிவித்தனர். அதன் மூலம் அந்த மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகள் வெறும் அலங்கார உரிமைகளாக மட்டுமே மாறின. எனினும், மத்திய பிரதேசம் போன்ற சில மாநிலங்கள் உண்மையான அக்கறையுடன் இந்தச் சட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் உரியவர்களுக்கு சட்டத்தின் பலன் சென்றடைவதை உறுதிப்படுத்துவதாக தெரிகிறது. எனவே, வரும் ஆண்டுகளில் வனவாழ் மக்களுக்கு சாதகமான நிலைமை உருவாகும் என்ற நம்பிக்கையும் ஏற்படுகிறது.

**குறிப்புகள்:**

1. சோட்டா நாக்பூர் பகுதியில் நிலங்கள் தனக்குத்தான் சொந்தம் என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அறிவித்தார்கள். நில வரி விதித்தார்கள். அதை எதிர்த்து தானா பகத்தாஸ் பழங்குடி மக்கள் போராட்டம் நடத்தினர். அப்போது பயன்படுத்தப்பட்ட முழக்கம்தான் இது.

2. வனஉரிமைச் சட்டம் அடிப்படையாக வனங்களில் அல்லது வன நிலங்களில் வாழ்கிற மக்களுக்கு, அல்லது தங்களது வாழ்வாதாரங்களுக்காக வனங்கள் அல்லது வன நிலங்களை சார்ந்திருக்கும் மக்களுக்கு வனஉரிமைகளை வழங்குகிறது. இதர வனவாழ் மக்களைப் பொருத்தவரையில் அவர்கள் உரிமை கோரும் பகுதியில் 75 ஆண்டுகளாக வாழ்ந்து வருபவர்களாக இருக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கிராமமும் ஒரு வனஉரிமைக் குழுவை தேர்ந்தெடுக்க வேண்டும். அதில், அந்த கிராமத்தைச் சேர்ந்த 10 முதல் 15 பிரதிநிதிகள் வரை உறுப்பினர்களாக இருப்பார்கள். கிராம சபையின் முன் தாக்கல் செய்யப்படும் உரிமைக் கோரிக்கைகளை இந்தக் குழு பரிசீலிக்கும்.

4. பட்டியல் பகுதிகள் (எஸ்.ஏ) மற்றும் பழங்குடியினர் பகுதிகள் என்பவை 1935ம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டத்தில் ''குறிப்பாக விலக்களிக்கப்பட்ட பகுதிகள்'' மற்றும் ''விலக்களிக்கப்பட்ட பகுதிகள்'' என்று குறிப்பிடப்படும் பகுதிகள் பற்றிய கருத்தாக்கத்தின் மாறுபட்ட வடிவமே ஆகும். அந்தப் பகுதிகள் கலாச்சார ரீதியாக பின்னடைந்த பகுதிகளாக கருதப்பட்டன. பட்டியல் பகுதிகளில் உள்ள பழங்குடி மக்களின் நலனுக்காகவும் பாதுகாப்பிற்காகவும் அவர்களை மேம்படுத்துவதற்கான சிறப்பு சலுகைகளை 15(4), 46, 244(1), 339 ஆகிய சட்டங்கள் வழங்குகின்றன. சட்டம் 244(1) தெளிவான முறையில் பட்டியல் பகுதிகள் என்பதை வரையறுக்கவில்லை என்றாலும், பழங்குடி மக்கள் மிகுதியாக உள்ள பகுதிகளை பட்டியல் பகுதிகள் என்று அந்தச் சட்டம் குறிப்பிடுகிறது.

5. பட்டியல் பகுதிகளுக்கான ஊராட்சி விரிவாக்க (பிஇஎஸ்ஏ – பெஸா) சட்டம், 1996 என்பது பட்டியல் பகுதிகளுக்கான ஊராட்சிகள் தொடர்பாக அரசமைப்பு சாசனத்தின் 9வது பாகத்தில் உள்ள விதிகளின் ஒரு விரிவாக்கமே ஆகும். 'பெஸா' சட்டம் என்று பரவலாக அறியப்படும் இந்தச் சட்டமானது பழங்குடி சமூகத்தினருக்கு பல விரிவான ஆளுமை அதிகாரங்களை வழங்குகிறது. அவர்களை பாரம்பரிய சமூகமாக அங்கீகரிக்கிறது. அவர்களது பாரம்பரிய உரிமைகளும் மரபு சார்ந்த சட்டமும் சமூக – மத பழக்கமும் செல்லக்கூடியவை என ஏற்கிறது. அவர்களது பாரம்பரிய இயற்கை வள மேலாண்மையை ஏற்கிறது (முகுல் 1997). இந்தச் சட்டம் முழுமையாக செயல்படுத்தப்படுமானால், வனஉரிமைச் சட்டத்தின் விளைவுகள் தீர்மானகரமாக அமையும். ஏனென்றால், கிராமசபைகளின் உறுப்பினர்கள் இதர பொதுவான பகுதிகளைச் சேர்ந்தவர்களைவிட கூடுதலாக உறுதிப்படுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள். வறுமை ஒழிப்புத் திட்டங்களின்கீழ் பயனாளிகளை முடிவு செய்கிற பொறுப்பு அவர்களுக்குத் தரப்படுகிறது.

6. மாவட்ட அளவிலான குழு (டிஎல்சி) என்பது உரிமைக் கோரிக்கை மனுக்களை பெறக்கூடிய, ஏற்கக்கூடிய அல்லது நிராகரிக்கக்கூடிய, மாவட்ட மட்டத்திலான அமைப்பாகும். கிராம சபை தனது கடமைகளை நிறைவேற்ற உதவியாக உரிய ஆதரவுகளை வழங்குவதும், மாவட்ட அளவிலான குழுவின் பொறுப்பாகும்.

7. பூர்வீக பழங்குடி குழுக்கள் (பிடிஜி) என்று குறிப்பிடப்படும் பழங்குடியினர் இந்திய அரசால் 1975ல் நாடோடித் தன்மை உள்ளவர்கள், எண்ணிக்கையில் குறைவானவர்கள், வாழ்விடங்கள் இல்லாதவர்கள்

அதிக அளவுக்கு சிசு மரணங்களும் பிரசவ கால மரணங்களும் நிகழக்கூடிய சமூகத்தினர், கடுமையான வறுமையில் உள்ளவர்கள், தங்களது வாழ்வாதாரத்திற்காக முற்றிலும் காடுகளைச் சார்ந்திருப்பவர்கள் என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைமைகள் அவர்களை மனித மேம்பாட்டு குறியீட்டில் (எச்டிஐ) அடிமட்டத்திற்குத் தள்ளுகின்றன (மல்ஹோத்ரா, பட்டாச்சார்யா – 2010). இவர்களைப் பாதுகாப்பதற்காக பழங்குடியினர் மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக சிறப்பு விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அத்துடன் இந்திய அரசின் நிதி ஒதுக்கீடுகளும் வழங்கப்படுகின்றன. இந்தியாவில் 17 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 75 பிடிஜி சமூகங்கள் உள்ளன என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தேசிய பழங்குடியினர் கொள்கையில் திருத்தம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பிடிஜி என்பதற்கு பதிலாக "குறிப்பாக பாதிக்கப்படக் கூடிய பழங்குடி சமூகங்கள்" என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது.

8. துணை மண்டல அளவிலான குழு (எஸ்டிஎல்சி) (தாலுக்கா மட்டத்தில்) கிராம சபை தீர்மானங்களையும் அந்தக் கோரிக்கைகள் தொடர்பான வரைபடங்களையும் பரிசீலிக்கிறது. அவற்றை அடுத்த மட்டத்தில் உள்ள குழுவிற்கு அனுப்புகிறது. உரிமைகளை தீர்மானிக்கிற விஷயத்தில் கிராமசபைகளுக்கும் வனஉரிமைக் குழுக்களுக்கும் தேவையான ஆதரவை எஸ்டிஎல்சி வழங்குகிறது.

*"வனஉரிமைகள் சட்டம் 2006 குறித்த விமர்சனப்பூர்வ மதிப்பீடும் வனங்களைச் சார்ந்துள்ள சமூகங்கள் மீது அதன் தாக்கமும்: சத்தீஸ்கர், குஜராத் ஒப்பீட்டு ஆய்வு" என்ற விரிவான ஆராய்ச்சியின் ஒரு பகுதிதான் இந்தக் கட்டுரை. அகமதாபாத்தில் உள்ள குஜராத் மேம்பாட்டு ஆய்வு நிறுவனம் இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டது. ஐதராபாத்தில் உள்ள பொருளாதாரம் மற்றும் சமூக ஆய்வுகள் மையத்தின் வாழ்வாதாரங்கள் மற்றும் இயற்கை வளங்கள் ஆராய்ச்சிப் பிரிவால் இந்த ஆய்வுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது (மும்பையில் உள்ள ஜாம்ஷெட்ஜி டாட்டா அறக்கட்டளை ஆதரவுடன்).*

(கட்டுரையாளர்: அகமதாபாத்தில் உள்ள குஜராத் மேம்பாட்டு ஆய்வு நிறுவனத்தில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.)

## References


- AITPN (2006): "India's Forest Rights Act of 2006 – Illusion or Solution?", *Indigenous Issues,* the occasional briefing papers of the Asian Indigenous and Tribal Peoples Network, 15 December, New Delhi.
- Bose, Indranil (2010): "How Did the Indian Forest Rights Act, 2006 Emerge?", IPPG Discussion Paper, No 39, University of Manchester, Manchester.
- CSD (2010): "Summary Report on Implementation of the Forest Rights Act", National/Current Situation, September, Council for Social Development.
- EPW (2007): "Forests and Tribals: Restoring Rights", *Economic & Political Weekly*, 42(1): 4-5.
- Gera, P (2002): "Sub-Group on Sex Disaggregated Data of the IAWG on Gender and Development: Women's Role and Contribution to Forest-Based Livelihoods", Human Resource Development Centre, United Nations Development Programme, New Delhi.
- Ghosh, Nilabja (2008): "In Search of a Canopy: "Tribal Women's Livelihood in Forest-Based Industries in Rural India", paper presented at "Governing Shared Resources: Connecting Local Experience to Global Challenges", 12th Biennial Conference of the International Association for the Study of Commons, Cheltenham, England, 14-18 July.
- GoI (2010): "Manthan", report by National Committee on Forest Rights Act, a Joint Committee of Ministry of Environment and Forests and Ministry of Tribal Affairs, December, New Delhi.
- Gupta, Smita (2006): "Limited Rights", *Frontline*, 23(7), viewed on 15 April 2012, http://www.frontlineonnet.com/fl2307/stories/20060421002809500.htm
- *Kalpavriksh* (2008): *Tracking the Forest Rights Act*, Kalpavriksh, 29 July, No 3: 1-11.
- Khare, Arvind (1987): "Small Scale Forest Enterprises in India with Special Reference to the Roles of Women", National Review Paper, ISST, New Delhi.
- Kothari, Ashish (2011): "Not Out of the Woods Yet", *Frontline*, 28(5): 64-73.
- Krishnadas, Meghna, Nandini Velho, Sachin Sridhara and Umesh Srinivasan (2011): "Turning the Page in Forest Governance: Science and Bureaucracy", 46(50): 10-13.
- Krishnan, Radhika (2007): "Forest Rights Act 2006 – Misplaced Euphoria", *Liberation,* January, viewed on 14 November 2008, http://www.cpiml.org/liberation/year_2007/January/forest_right_act.html
- Malhotra, K C and Prodyut Bhattacharya (2010): "Forest and Livelihood", Status Paper (Forest Ecosystem), Research Unit for Livelihoods and Natural Resources, Centre for Economic and Social Studies, Hyderabad.
- Malik, R (1994): "Study of Some Minor Forest Produce

in Orissa: An Empirical Investigation", Nabakrushna Choudhury Centre for Development Studies, Bhubaneshwar.

- Mukul (1997): "Tribal Areas: Transition to Self-Governance", *Economic & Political Weekly*, 32(18): 928-29.
- *People's Democracy* (2012): "Adivasi Adhikar Rashtriya Manch Organises All India Sangharsh Sabha", *People's Democracy*, 36(13), viewed on 15 April 2012, http://www.cpim.org/pd/2012/0325_pd/03252012_12.html
- Ramdas, S R (2009): "Women, Forestspaces and the Law: Transgressing the Boundaries", *Economic & Political Weekly*, 44(44): 65-73.
- Reddy, M Gopinath, K Anil Kumar, P Trinadha Rao and Oliver Springate-Baginski (2011): "Issues Related to Implementation of the Forest Rights Act in Andhra Pradesh", *Economic & Political Weekly*, 46(18): 73-81.
- Saigal, S (1998): "Participatory Forestry in India: Analysis and Lessons", MSc thesis, Oxford Forestry Institute, Oxford.
- Sampath, S K (2010): "An Inquiry into Perceptions, Adaptations and Resilience in Madhya Pradesh", MS thesis, Faculty of Agriculture, University of Padua, Padua, Veneto, Italy.
- Saxena, N C (2010): "Implementation of Forest Rights Act in Chhattisgarh: Report of Field Visit, 24-27 May", MoEF/MoTA Committee on Forest Rights Act, Government of India.
- Singh, Ajay Bhan, K N Krishna Kumar, Pramod Tyagi and Ganesh Yadav (2010): "Status of Implementation and Its Potential in Livelihoods Improvement of Forest Dwelling Communities", background note, workshop on Forest Rights Act 2006, Indian Institute of Forest Management, Bhopal, 21-22 December.
- Sharma, B D (2004): Workshop on "Incessant Marginalisation of Indigenous and Tribal People in the Wake of Imperialist Onslaught", Mumbai Resistance 2004, Sahyog Pustak Kuteer (Trust), New Delhi.
- Springate-Baginski, Oliver and Piers Blaikie, ed. (2007): *Forests, People and Power: The Political Ecology of Reform in South Asia* (London: Earthscan).
- Venkateswaran, S (1994): "Managing Waste: Ecological, Economic and Social Dimensions", *Economic & Political Weekly*, 29(45-46): 2907-11.
- Writ Petition (2011): *Action Research in Community Health and Development (ARCH), Rajpipla Social Service Society (RSSS) and Paryavaran Suraksha Samitee (PSS) vs State of Gujarat*, C/WPPIL/100/2011, Gujarat High Court, Ahmedabad.

**ஆதாரம்: Economic & Political Weekly AUGUST 3, 2013 VOL XLVIII NO 31**

## செங்கல்பட்டு முகாம் சிறை ஆகிறது: பாதுகாப்பு காரணங்களுக்காக செய்யாறில் சிறப்பு முகாம்

சென்னை: செங்கல்பட்டு சிறப்பு முகாம் மாவட்ட சிறையாக மாற்றப்படுகிறது. அங்கு அடைக்கப்பட்டுள்ள வெளிநாட்டை சேர்ந்தவர்கள் செய்யாறில் திறக்கப்படும் சிறப்பு முகாமுக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றனர். பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த மாற்றங்களை தமிழக அரசின் உள்துறை மேற்கொண்டுள்ளது. தமிழக அரசின் உள்துறை சார்பில் செங்கல்பட்டில் சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. இந்த முகாமில் ஏற்கெனவே முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தொடர்புடைய பிரமுகர்கள், இ.என்.டி.எல்.எப். அமைப்பைச் சேர்ந்த பிரமுகர்கள் போன்றோர் அடைக்கப்பட்டிருந்தனர். தற்போது இந்த முகாமில் 43 பேர் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 3 பேர் நைஜீரிய நாட்டைச் சேர்ந்தவர்கள். மற்ற அனைவரும் இலங்கையை சேர்ந்தவர்கள். இந்நிலையில் செங்கல்பட்டில் உள்ள சிறப்பு முகாம் சிறைச்சாலையாக மாற்றப்படுகிறது. இதுகுறித்து தமிழக ஆளுநர் ரோசய்யா பிறத்துள்ள உத்தரவு: திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் கடந்த 19.1.2005 முதல் 24.8.2006 வரை சிறப்பு முகாம் செயல்பட்டது. இதில் இ.என்.டி.எல்.எப். அமைப்பைச் சேர்ந்த 11 பேர் அடைக்கப்பட்டிருந்தனர். இந்த 11 பேரும் தங்களை இலங்கைக்கே திருப்பி அனுப்புமாறு கோரிக்கை விடுத்ததை தொடர்ந்து அவர்கள் அனுப்பப்பட்டனர்.

இதையடுத்து 1.4.2011ல் செய்யாறு சிறப்பு முகாம், சிறைத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதுவரை அங்கு சப் ஜெயில் இயங்கி வருகிறது. தற்போது இந்த சப் ஜெயில் வளாகத்தில் புனரமைப்பு பணிகள் நடக்கின்றன. இப்பணிகள் முடிந்ததும் சப் ஜெயில், மாவட்ட நிர்வாகத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்படும். தற்போது சப் ஜெயிலாக இயங்கும் இதே இடத்தில் செய்யாறு சிறப்பு முகாம் செயல்படும். இதில் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்கள் அடைக்கப்படுவர். செங்கல்பட்டு சிறப்பு முகாமை மாவட்ட அளவிலான சிறையாக மாற்ற வேண்டும் என்று சிறைத்துறை தலைவர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார். சென்னை புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளில் பலரை செங்கல்பட்டு கோர்ட் மற்றும் இதர மாவட்ட கோர்ட்களுக்கு கொண்டு செல்லும்போது பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே செங்கல்பட்டு சிறப்பு முகாமை செய்யாறுக்கு மாற்ற வேண்டியது கட்டாயமாகிறது. எனவே சிறைத்துறை தலைவரின் பரிந்துரைகளை ஏற்று, செய்யாறு சப் ஜெயில் சிறப்பு முகாமாக செயல்பட அனுமதியளிக்கப்படுகிறது. இந்த முகாமில் செங்கல்பட்டு முகாமில் இருந்த அனைவரும் அடைக்கப்படுவர். இதற்கான ஏற்பாடுகளை சிறைத்துறை தலைவர் மேற்கொண்டு, செய்யாறில் உள்ள சிறையை மாவட்ட கலெக்டர் வசம் ஒப்படைக்க வேண்டும். அதில் சிறப்பு முகாம் செயல்படுவதற்கான ஏற்பாடுகளை செய்து தரவேண்டும். இவ்வாறு அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செங்கல்பட்டு டூ செய்யாறு:**

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள இலங்கையை சேர்ந்த நபர்கள், தங்களை இலங்கைக்கே திருப்பி அனுப்ப வேண்டும் என்று பல முறை போராட்டங்களை நடத்தியுள்ளனர். மேலும் தங்களை சிறப்பு முகாமில் அடைக்க கூடாது என்றும் கோரி வந்தனர். இந்நிலையில் இவர்கள் அனைவருமே செய்யாறு முகாமுக்கு மாற்றப்படுகின்றனர்.

ஆதாரம்: **தினகரன், 16.6.2013**

# போலீஸ் அத்துமீறல் புகாரை தெரிவிக்க அமைப்பு

**மாநில அரசுகளிடம் கருத்து கேட்கிறது சுப்ரீம் கோர்ட்**

காவல்துறையின் அத்துமீறல்கள் குறித்து மாவட்டம் மற்றும் மாநில அளவில் புகார் தெரவிக்கும் வகையில், அமைப்பை ஏற்படுத்துவது தொடர்பாக கருத்து தெரிவிக்க வேண்டும் என, மாநில அரசுகளுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டு உள்ளது.

**கிண்டல்**

பஞ்சாப், தரண் மாவட்டத்தைச் சேர்ந்தவர் காஷ்மீர் சிங். இவரது மகள் ஹர்பிந்தர் கவுர். இருவரும், கடநத் மாதம் 3ம் தேதி திருமண நிகழ்ச்சி ஒன்றுக்குச் சென்று, வீடு திரும்பும்போது, அந்த வழியாக வந்த லாரியின் ஓட்டுநர் மற்றும் கிளீனர் ஆகியோர் ஹர்பிந்தர் கவுரை கிண்டல் செய்து, அருவருக்கத்தக்க வகையில் பேசினர். இதையடுத்து, அப்பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசாரிடம், லாரி டிரைவர் பற்றி புகார் அளித்தனர். ஆனால், புகாரை வாங்க மறுத்த போலீசார், லாரி டிரைவரிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு அவர்களை விடுவித்தனர். பின் காஷ்மீர் சிங், அவரது மகள் ஹர்பிந்தர் கவுர் ஆகியோரை பொது மக்கள் முன்னிலையில் சரமாரியாக தாக்கினர்.

இந்த சம்பவம், டிவி செய்தி சேனல்களில் ஒளிபரப்பானதால், நாடு முழுவது;ம பரபரப்பை ஏற்படுத்தியது. இதேபோல், பீகார் மாநிலம் பாட்னாவில் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியைகள் மீது, காவல்துறையினர் தாக்குதல் நடத்தினர். இதுபற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. இதை அடிப்படையாக வைத்து, தாமாக முன் வந்து, சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு எடுத்து கொண்டது.

இவ்வழக்கு, நீதிபதிகள் ஜி.எஸ்.சிங்வி மற்றும் குரியன் ஜோசப் ஆகியோர் அடங்கிய பெஞ்ச் முன், கடந்த வாரம் விசாரணைக்கு வந்தது. மேற்கண்ட சம்பவங்களுக்கு விளக்கம் கேட்டு, பஞ்சாப், பாட்னா காவல்துறைக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் தங்கள் உத்தரவில் கூறியதாவது: காவல்துறை அத்துமீறல் தொடர்பான வழக்கு ஒன்றில், 2006ல் சுப்ரீம் கோர்ட் பிறப்பித்த உத்தரவில், காவல்துறை அத்துமீறல் குறித்து புகார் தெரிவிப்பதற்கு, மாவட்டம் மற்றும் மாநில அளவில் அமைப்பை ஏற்படுத்துவது உட்பட, காவல்துறையில் சீர்திருத்தம் கொண்டு வருவது பற்றி குறிப்பிடப்பட்டது.

இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, ஏழு ஆண்டுகள் ஆகியும் நிலைமை மேலும் மோசமாகி உள்ளது. காவல்துறை அத்துமீறல் குறித்து புகார் தெரிவிப்பதற்கு அமைப்பு ஏற்படுத்துவது தொடர்பாக, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது என்பது பற்றி மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் பதில் தெரிவிக்க வேண்டும்.

**சீர்திருத்தம்**

பெரும்பாலான மாநிலங்கள், சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவை அமல்படுத்தவில்லை. காவல்துறையில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. விஐபி பாதுகாப்புக்கு என்று அதிக காவல்துறையினர் ஒதுக்கப்படுவதை குறைத்து, பொது மக்களின் நலநன பேணி காக்கவும் அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

சீர்திருத்தம் என்பது, கம்ப்யூட்டர் மவுசை கிளிக் செய்ததும், ஒரே இரவில் வந்துவிடாது. அதற்கு நீண்ட தூரம் பயணப்பட வேண்டும். விஐபி, கலாச்சாரத்திற்கு முடிவு கட்டி, காவல்துறையில் திறமையை மேம்படுத்த முயல வேண்டும்.

**ஆதாரம்: தினமலர், 12.4.2013**

For Private Circulation Only




*Education Material Published on behalf of*

*Campaign for Custodial Justice & Abolition of Torture by*
***Human Rights Advocacy and Research Foundation (HRF)***

*# 10, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, INDIA.*
*☎ 044 22353503, 044 22351919 Fax : 044 22355905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsadvocacyandresearchfoundation.org*